# ஞானசம்பந்த

மலர் 13] ஜயஞூ ஆடிமீ 10—8—54 [இதழ் 9

## ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின்
## தொண்டைநாட்டு யாத்திரை மலர் (அநுபந்தம்)



திருப்பாசூர் அம்மன் (தவக்கோலத்தில்)

ஆசிரியர் வித்துவான், சோமசுந்தரத் தம்பிரான்
துணை ஆசிரியர் முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்
தருமபுர ஆதீன

# ஆதீனத்திலும் ஆதீன தேவஸ்தானங்களிலும்

## தில்லையில் :

11—7—54ல் சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் கோயில் கொடிமரத்தின் அருகில் தருமபுரம் ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களால் அமைக்கப்பெற்ற திருமுறைப் பாடல்களும், கொடிக்கவிப் பாடல்களும் எழுதிய சலவைக் கல்வெட்டுத் திறப்புவிழா நடந்தது. கல்வெட்டை சென்னை இராஜ்ய கல்விமந்திரி கனம் C. சுப்பிரமணியம் அவர்கள் திறந்துவைத்தார்கள். கூட்டத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், திரு. இராமநாதம் பிள்ளை, M. A., அவர்களும், சென்னை முன்னாள் மேயர் திரு. S. இராமசாமிநாயுடு அவர்களும் பேசினார்கள். வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் யாவருக்கும் நன்றி கூறினார்கள். கூட்டத்தில் தருமபுர ஆதீனக் கல்வெட்டு என்ற நூல் யாவருக்கும் இலவசமாக வழங்கப்பட்டது. நடராஜப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்யப்பட்டன.

# ஆடிப்பூர மஹோத்சவம்

23—7—54 முதல் தொடங்கி ஆடிப்பூர மஹோற்சவம் 2-8-54 முடிய சிறப்பாக நடைபெற்றது.

## சீகாழியில் :

ஒவ்வொருநாளும் வீதி உலாவும், சொற்பொழிவுகளும் சிறந்த முறையில் நடந்தன. 27—7—54-ல் முத்தமிழ் வள்ளல் பெருஞ் சொற்கொண்டல், புரிசை, திரு. சு. முருகேச முதலியார் அவர்களும் 28—7—54-ல் நாகர்கோவில் தொண்டன் ஆசிரியர் திருவாவடுதுறை ஆதீன மகா வித்துவான், திரு. கே. ஆறுமுகநாவலர் அவர்களும் முறையே அம்பிகை அருள்: தேவி மகிமை என்பனபற்றிச் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

603

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 13] ஜயவூ ஆடிமீ 10—8—54 [இதழ் 9

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்

## கடவுள் நம்பிக்கை வளர்க

வாழ்க்கை வாழ்வதற்கே, தாழ்வதற்கோ வீழ்வதற்கோ அல்ல. ஆனல் வாழ்வாங்கு வாழ வகையறியாதவர்கள் வாழ்வதாக எண்ணி வீழ்கின்றார்கள். அந்தநிலையை மாணிக்கவாசகர் "வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே" எனக் குறிப்பிடுகின்றார். வாழ்க்கையில் இன்பங்காண விழைபவர்கள் தன்னம்பிக்கையுடையவர்களாக இருக்கவேண்டும். தன்னம்பிக்கை வலுப்பெறுதற்குக் கடவுள் நம்பிக்கை மிகமிகத்தேவை. என்னை? ஒருவனுக்கு உடன்பிறந்தார் உளராளுல் உடல் பலம் அதிகம். அந்நிலை வாய்க்கப்பெறுதார் வலுக்குறைந்தவர்களே. இக்கருத்தை "உடன் பிறப்பில்லா உடம்புபாழ்" என ஔவையார் அறிவிக்கின்றார். ஆகவே தன்னம்பிக்கையின் தமையனாக விளங்குவது கடவுள் நம்பிக்கையாம் என்க.

மேலும் மனித வாழ்வில் ஒருவரையொருவர் நம்பித்தான் வாழவேண்டும் என்பது கடவுள் நியதி, மனித உள்ளத்தில் நின்றேமாண்புறு நலங்களை நமக்குச் செய்கின்றான் இறைவன்,

ஆதலால், கணவன் மனைவிக்குள் நம்பிக்கை வேண்டும். ஆசிரியர் மாணவருக்குள் நம்பிக்கை வேண்டும். முதலாளி தொழிலாளிக்குள் நம்பிக்கை வேண்டும். நம்பிக்கை இல்லாதவருடைய உள்ளத்தில் அமைதி பிறவாது. அமைதியிலா உள்ளத்தில் ஆனந்தம் இல்லை. ஒருவரை யொருவர் நம்புகின்ற நம்பிக்கையெல்லாம் தன்னம்பிக்கைக்குத் தம்பிகள் போன்றன. சிற்றின்பம் பெறுவார்க்கும் பேரின்பம் பெறுவார்க்கும் அடிப்படையில் நம்பிக்கை தேவை என்பதை நமது முன்னோர் நன்றாக விளக்கியுள்ளனர்.

"நம்பினார்க் கருள்செய்யும் அந்தணர்" எனச் சுந்தரரும், "நம்பினோர் கெடுவதில்லை இது, நாலுமறைத்தீர்ப்பு" எனப் பாரதியாரும் கூறியமை காண்க. மேலும் "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்ற பழமொழியும் நமது நாட்டில் உலவி வருகிறது. கடவுள் இறைவன் இயவுள் என்பன பழந்தமிழ்ச் சொற்கள். ஒவ்வொன்றும் காரணப் பெயர். இவ்வருந்தமிழ்ச் சொற்களால் இறைவனை யழைத்த நமது முன்னோர்களின் மதி நுட்பத்தினைக் கண்டு போற்றாதாரில்லை. இறை - தங்கியிருத்தல். எல்லாப்பொருளிலும் நிறைந்திருப்பவனை இறைவன் என்றனர். கட - கடந்தது; உள்ளத்தையும் உலகத்தையும் கடந்தவனைக் கடவுள் எனக் கண்டனர். "கற்பனைகடந்தசோதி" என்பதும் நினைக்கத்தக்கது. உள்ளத்தையும் உணர்வையும் இயக்கும் பான்மையால் இயவுள் என இசைத்தனர்.

இவையனைத்தையும், "எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டி" என முறையே இசைத்துக் காட்டினார் பரஞ்சோதியார். அனைத்துப் பொருளையுங்கடந்த ஆண்டவனை அன்பால் கட்டுப்படுத்தலாம். பத்திவலையிற் படுபவன் பரமன். அன்பும் பத்தியும் தோன்றுமிடம் உள்ளம். ஆகையால் இவ்வருங்கருத்தினையும் உள்ளடக்கித் திகழ்கின்றது கடவுள் என்ற சொல்.

தற்காலத்தில் எந்தத்துறையிலும் நம்பிக்கை குறைந்து வருகிறது. நம்பிக்கைக் குறைவால் நாட்டில் அமைதியின்மையும் துன்பமும் அதிகரிக்கின்றன. அமைதியும், இன்பமும் நாட்டில்

605

நடமாடவேண்டுமானுல் சிறப்பாக இளைஞர்களுடைய உள்ளத்தில் கடவுள் நம்பிக்கை வளர்ந்தோங்க வேண்டும். இதற்கு உறுதுணையாகத் தமிழ்த்துறை ஆசிரியர்களும், பிறதுறை ஆசிரியர்களும் பெருமுயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

அண்மையில் அண்ணுமலைநகரில் நடைபெற்ற தமிழாசிரியர்கள் மாநில மாநாட்டில் பல பேரறிஞர்கள் கடவுள் நம்பிக்கையை வற்புறுத்தியுள்ளனர். மேலும், அவர்கள் உள்ளங்கடந்த உயரிய பொருளை - அங்கு இங்கு எனுதபடி எங்கும் நிறைந்த இறைமைப் பொருளை - உள் நின்றியக்கும் ஒளிவளர் விளக்கை-பெரியோரேத்தும் பெரும்பெயர் இயவுளைத் திருவள்ளுவர் முதலான நந்தமிழ்ப் பெருமக்கள் போற்றி வாழ்ந்தனர் எனவும் குறிப்பிட்டார்கள். அப் பெரியார்கள் சென்ற வழியில் இளைஞர்களை அழைத்துச் செல்லவேண்டிய கடமைகளை நினைவுறுத்திக்கடமை திறம்பாது இயங்கவல்ல தமிழாசிரியர்களின் ஆற்றலையும் பாராட்டினர். பாராட்டியதை வரவேற்கிருேம், வாழ்த்துகிருேம்.

வளர்க கடவுள் நம்பிக்கை. வாழ்க தமிழ்!

—ஆசிரியர்

---

## திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

செற்றதோர் மனமொழிந்து சிந்தை செய்து
சிவமூர்த்தி யென்றெழுவார் சிந்தை யுள்ளால்
உற்றதோர் நோய்களைந்திவ் வுலக மெல்லாங்
காட்டுவா னுத்தமன்ரு ஞேதா தெல்லாங்
கற்றதோர் நூலினன் களிறு செற்றுன்
கழிப்பாலை மேய கபா லப்பனுர்
மற்றிதோர் மாயக் குரம்பை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போது நாமே.

திருச்சிற்றம்பலம்.

—திருநாவுக்கரசர்.

# ஞான சம்பந்தம்

சித்தாந்த ரத்நாகரம்,
புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்.,
தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக்கல்லூரி, தருமபுரம்.

## ஞானம்:

ஞானம் என்பது அறிவு உணர்வு என்னும் பொருளுணர்த்தும் வடசொல். படி - கற்றல். படனம் - கல்வி. கம் - செல்லல். கமனம் - செலவு. அவ்வாறே, (ஞா-அறிதல்) ஞானம் என்பது அறிவு உணர்வு என்று கொள்ளும் நிலையை அடைந்தது.

## மெய்யுணர்வும் பொய்யுணர்வும்:

ஞானம் நித்தியம் அநித்தியம் என்னும் பேதத்தால் இரு வகைப்படும். நித்திய ஞானம் மெய்யுணர்வு. அநித்திய ஞானம் பொய்யறிவு, தமிழில் உணர்வும் அறிவும் ஒன்றுகா. மெய்ப் பொருளுணர்வு அல்லாத எல்லாம் அறிவு எனக் கொள்ளப் படும். புறப்பொருளை அறிதல் அறிவு என்றும் உயிரின் அகப் பொருளை உணர்தல் உணர்வு என்றும் பண்டைச் சான்றோர் கொண்டிருந்தனர். சேக்கிழார் சுவாமிகளும், உணர்வும் அறிவும் வெவ்வேறு என்னும் கொள்கையுடையவர்கள் என்பது நாம் அறியக்கிடக்கின்றது. அவ்வுண்மையை,

"எப்பொருளும் ஆக்குவான் ஈசனே எனும் உணர்வும்
அப்பொருள்தான் ஆளுடையான் அடியார்கள் எனும் அறிவும்
.... .... .... ....
.... .... .... சூழ்ந்தெழுந்தார்"

என்று, திருஞானசம்பந்த சுவாமிகளுக்குச் சிவஞானப்பேறு எய்திய நிலையில் விளங்கிய உணர்வையும் அறிவையும் கிளந்தோதிய பெரியபுராணத் திருவிருத்தத்தால் அறியலாகும்.

## உணர்வும் அறிவும்:

'எப்பொருளும் ஆக்குவான் ஈசனே' என்பது புறத்தே அறியப்படுவதன்று. அகத்தே உணர்தற்குத்தக்கது. அதனால், அதை உணர்வு என்றருளினர். அடியார்கள் புறத்தறிவிற்கும் இலக்காவார்கள். அதுகொண்டு அறிவு என்று குறித்தருளினர். 'எப்பொருளும்' 'அப்பொருள்' என்பவற்றில், 'பொருள்' என்றது சித்துப்பொருளைக் குறித்து நின்றது. 'ஆக்குவான்'

என்பது தாணுக்குவான் என்னும் கருத்துடையது. படைப்பான் என்றதன்று. சிவமாக்கியாளுங் கருணைத்திறத்தை உணர்த்துவது. 'சிவமாக்கி எனை ஆண்ட அத்தன்' என்னுந் திருவாசகம் ஒருவாசகம் அன்றோ? அதற்கு மறுவாசகம் உண்டோ?

## உணர்வின் உயர்வு:

உணர்வு சிலர்க்கே வாய்க்கும். அறிவு பலர்க்குக்கிட்டும். அறிவுடையோர் எல்லோரும் உணர்வுடையார் எனப்படார். கடவுளை உணர்ந்தும் உணர்த்தியும் கடவுளாய் இன்புறும்மெய்யரும் உலகை அறிந்தும் அறிவித்தும் உலகாய் வருந்தும்பொய்யரும் ஒன்றுவரோ? ஆத்திகராகிய மெய்யரும் நாத்திகராகிய பொய்யரும் அறிவில் ஒப்பாவர். உணர்வில் ஆத்திகரே உயர்ந்தோர் ஆவர். ஆகவே, அவருக்குத்தான் ஞான சம்பந்தம் உண்டாகின்றது. உணர்வின் தொடர்பே ஞான சம்பந்தம்.

## ஞானசம்பந்தம்:

அறிவின் தொடர்புடையமக்கள் பலர். உணர்வின் தொடர்புடைய மக்கள்சிலரே, நித்திய ஞானசம்பந்தம் ஒன்றே நம் மூதறிஞர்களால் ஞானசம்பந்தம் என்று குறிக்கப்பெறுகின்றது. அநித்திய ஞானசம்பந்தத்தை ஞானசம்பந்தம் என்று சொல்வதில்லை. அஞ்ஞானசம்பந்தம் என்றுதான் சொல்வது வழக்கம்.

## சிவஞானசம்பந்தம் :

ஞானசம்பந்தமும் அவ்வச்சமயத்திற்குப் பொருத்தமானதொரு விசேடணம் பெற்று வழங்கப்படும். சைவசமயத்தில், "சிவஞானசம்பந்தம்" 'திருஞானசம்பந்தம்' என்று வழங்கப் பெறுகின்றது. அச்சிவஞானசம்பந்தம் அடைந்தவரே சைவ சமயத்தில் ஞானசம்பந்தராகத் தொழப்பெறுவர். ஆளுடைய பிள்ளையார் பொற்கிண்ணத்தில் எண்ணரிய சிவஞானத்தின்னமுதம் உண்டதும், அச்சிவஞானசம்பந்தரானார் என்னும் உண்மையை உணர்த்த வந்த அருண்மொழித்தேவநாயனார், "யாவருக்கும் தந்தைதாய் எனும் இவர் இப்படி அளித்தார். ஆவதனால் ஆளுடையபிள்ளையாராய், அகில தேவருக்கும் முனிவருக்கும் தெரிவரியபொருளாகும் தாவில் தனிச் சிவஞான சம்பந்தர் ஆயினர்." என்று அருளியிருத்தல் ஊன்றி உணரத் தகுவது.

## அம்மையப்பர் :

இத்திருவிருத்தத்தில், சம்பந்தம் ஞானத்தொடு; அது சிவஞானம்; அதற்கு ஒப்பில்லை; அழிவில்லை; எல்லாத் தேவர்க்கும் எல்லாமுனிவர்க்கும் எளிதில் தெரிந்துகொள்ள முடியாத காரணத்தால் அச்சிவஞானம் உணர்வதற்கு அரிய பொருள்; சிவபிரானுக்கு ஆளாகும் பெரும்பேறு உடையவர்க்கே அதன் சம்பந்தம் எய்தும்; அப்பொழுதும் அம்முழுமுதல்வன் அருளினால்தான் பெறலாகும்; அச்சிவஞான சம்பந்தத்தை அளிப்பவனே உயிர்கட்கு உண்மைத் தாய்; உண்மைத் தந்தை என்பவை தெளிவாக்கப்பட்டன.

## அருளும் ஆகமமும் :

அச்சிவஞானம், சைவசமயத்தில், பரஞானம் அபரஞானம் என்று இருவகையாகக்கொள்ள நின்றுளது. பரஞானமாவது சிவனடியாகிய திருவருள். அபரஞானமாவது அத்திருவருளைப் பயக்கும் சிவாகமம். இவ்வாறு எழுதிவிட்டதால், விளக்கம் உண்டாயிற்று என்று எழுதினோரும் கற்போரும் கொள்ள லாகாது. மும்மலமும் நீங்கிய உயிர்சேர்ந்த செம்மலர் நோன்றாளே திருவருள். அத்திருவருளைத் தெளிய ஓதுவது சிவாகமம். சிவமாந் தன்மைப் பெருவாழ்வு திருவருளுருவானபோழ்தே எய்தும். பரஞானம் உணர்வதற்கு அரியது; நித்தியமானது. பிறப் பிறப் புக்களை அறவேபோற்றும் ஆற்றலுடையது; அதனினும் ஓங்கிய ஞானம் வேறு ஒன்று இல்லாதது. அபரஞானம் சிவனடியே சிந்திக்கும் செல்வத்தைப் பெருக்குவது; சிவாகமம் முதலிய கலைகளால் வருவது; ஒப்பில்லாதது. இவ்விருவகை ஞானங்களையும் காழிப்பிள்ளையார் ஞானப்பாலுண்டபோது ஒருங்குணர்ந்தார். இதனைத் தொண்டர் சீர்பரவுவார்,

> "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
> பவமதனை அறமாற்றும் பாங்கினில்ஓங் கியஞானம்
> உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
> தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார்"

என்று பாடி அருளினார். அத்தகு சிவஞான சம்பந்தராகிச் சிவமாகி விளங்குபவரே இத்தருமைக் குருஞான சம்பந்தரும் ஆதலின், அவர் திருவடி நினைவுக்குறியாகவும் அபரஞானத்தை யுணர்த்திப் பரமஞானத்தைக் காட்டவும் தோன்றிய 'ஞான சம்பந்தம்' எனப் பெயரிய இத்திங்களிதழ் நாடெல்லாம் பரவித் திருவருள் நலத்தை வளர்த்து வருகின்றது. வாழ்க ஞானசம்பந்தம். வளர்க சிவபக்தி.

---

# தல யாத்திரை

## எவர்க்குவேண்டும் ?

எது ? தலயாத்திரை, என்ன தலம் ? சிவதலம், அவை மட்டுமா ? முருகன் தலம் விஷ்ணுதலம் எல்லாம்தாம் ? தல யாத்திரை என்ருல் ? கடவுள் எங்கும் இருந்தாலும் விளங்கும், இடம் விசேடம் உடையது. கடவுள் உயிர்களை ஆட்கொள்ளும் பொருட்டு, தலங்களானுர், அவற்றுள் தீர்த்தங்களானுர், அவற்றுடன் கோயில்களானுர். ஆகவே, அக்கடவுளை வணங்கி அருள் பெறவேண்டின், தலங்களை அடையவேண்டும். அங்கங்கு இருக்கும் தீர்த்தங்களில் நீராடவேண்டும். அவ்வக்கோயில் களுள் எழுந்தருளியிருக்கும் மூர்த்திகளை வழிபட்டு வணங்க வேண்டும். அப்படி வழிபட்டு வணங்கிவருபவர்க்கே, கடவுள் சற்குருவாய்க் காட்சிதருவார், உபதேசித்தருள்வார். ஞானம் கிடைக்கும், பந்தம் பறக்கும், மோக்ஷவாயில் திறக்கும்.

'மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே.'

என்ருர் தாயுமானவர்.

## சமயகுரவர்கள்

சைவம், கௌமாரம், வைணவம் முதலிய பல்வேறு சமயங் களிலும் கோடிக்கணக்கான பெரியோர்கள் தலயாத்திரை செய்து பயன்பெற்றும் பெறுவித்தும் நின்ற உண்மைக்குப் பல வரலாறுகள் உள்ளன. சைவத்தில், சமயகுரவர், சந்தான குரவர் என்று ஆசிரியர் இருதிறப்படுவர். (ஆசாரியர் - நடந்து ணர்த்துவோர்) திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரப் பெருமாள், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் சைவ சமயத்தைத் தமிழகத்தில் வளர்த்தார்கள். உலகெலாம் உணரச்செய்தார்கள். அவ்வரிய செய்கையால் அவர்கள் நால்வரும் சமயாசாரியர்கள் ஆனுர்கள். இன்றும் சைவனைநோக்கி உன் சமயத்திற்கு ஆசாரியர்கள் யார் என்று கேட்டால் அந் நால்வரைத்தான் கூறக்கடவன்.

## சந்தானகுரவர்கள்

மெய்கண்டதேவநாயனுர், அருணந்திதேவநாயனுர், மறைஞானசம்பந்ததேவநாயனுர், உமாபதிதேவநாயனுர் ஆகிய நால்வரும் சைவசமயத்தின் தத்துவோபதேசத்தைச் செய்துவந்த குருபரம்பரையினர். அதனுல், அவர்களைச் சந்தானகுரவர்கள் என்று போற்றிவருகின்றது சைவவுலகம். அவர்கள் சென்றடையாததிரு'வை இருந்தடைந்தவர்கள். சீடர்களையும் அடைவித்தவர்கள். அதனுல்தான் பரிபூரணமான குருமார்களை 'அடைந்தவர்கள்' என்று கூறும் வழக்கம் ஏற்பட்டது.

## வலிந்தாட்கொண்டனர் :

சமயாசாரியர்கள் தலயாத்திரை செய்து சமயவளர்ச்சியைச் செய்தருளினுர்கள், சந்தாஞசாரியர்கள் ஒவ்வோரிடத்தில் விளங்கித் தத்துவோபதேசத்தைச் செய்தருளினுர்கள். காலப் போக்கை ஒட்டிச் சந்தாஞசாரியர்களும் அங்கிலேக்கு வரவேண்டியதாயிற்று. ''ஓடிவருங் காரணர்க்கே உண்மை''யை உபதேசிக்கத் தோன்றியது திருக்கயிலாயபரம்பரையதாகிய சைவ மடாலயம், இந்த இருபதர்வது நூற்றுண்டில், உண்மையுபதேசத்தை நாடுவார் சிலரே ஆயினர். ஆகவே, சமயம் வளர்ச்சி இன்றித் தளர்ச்சி எய்தியது. அத்தளர்வு தீரச் சந்தான மரபும் தலயாத்திரைக்குச் சித்தமாயிற்று. வடநாட்டிலும் சென்று சைவ சமயச் சிறப்பைத் தோற்றிற்று. தென்னுட்டிலும் பழைய புகழைப் பரப்பிற்று. பின்னும் அதுசெய்ய முனேந்திருக்கின்றது. இன்றும் ஆங்காங்குச் சென்று சிவ நெறியை விளக்கிவருகின்றது. நாளும் இன்னிசையால் தமிழ் (திருநெறித்தமிழ்) பரப்பியும், ஆங்காங்குக் கூட்டுவழிபாடு நடத்தியும் உய்வித்தனர் சிவநெறியினர்.

## "சென்று தொழுமின்கள் !"

திருநாவுக்கரசு நாயனுர், தாம் மட்டும் சென்று தொழுது உய்யும் தந்நலம் உடையவரல்லர். அவர் அப்படி இருந்தால்

சமயாசாரியருள் முதல்வராய்த் திகழ்வரோ? அக்காலத்திருந்த—இக்காலத்தில் இருக்கும் — இனிப் பிறக்கும் எல்லாரையும் குறித்து, "சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம்" என்று உபதேசித்தருளினார்கள், அப்பர் சுவாமிகள். ஆசிரியரிலக்கணம் பலவற்றுள் இதுவும் ஒன்று. "தொண்டர் அகம் அலால் கோயில் இல்லை" "என் மனமே கோயிலாக இருந்தான்" என்று பாடியருளியவர்கள் அங்கங்கே உள்ள திருக்கோயில்களை வழிபடச் சென்றதன் உண்மைக் கருத்தை உணர்வதே மக்களது முதற்கடமையாகும். ஆகவே, க்ஷேத் திரக்கோவை"த் திருப்பதிகங்களை மநநம் செய்து, அவற்றைத் தரிசித்து உய்ய, யாத்திரையைத் தொடங்கிச்செய்து திருவருட்கு உரியவராவதே மக்கட் பிறப்பின் முடிவான பயன்.

## காலமுண்டாகவே காதல் செய்துய்மின் :

தலமுறைப்படி தேவாரம் அமைத்ததும் அவ்வத்தலத்தில் சென்று, திருவருட்பாக்களை "வாயார - நாவாரப் - பண்ணாரப் பாடித் தலையாரக் கையாரக் கும்பிட்டுச் சித்தமாரத் திருவடியே நினைந்து உள்கி விழுந்தெழுந்து வழிபட்டு வருதலே திருமுறை கற்பதன் பெரும்பயன். பண்டு, அடியார்கள், கணங்களாயும் தமியராயும் திசைதிசைதொறும், தலங்களுக்குச் சென்று வழி பட்டு, குறிகளும், அடையாளமும் கோயிலும் நெறிகளும் அவர் (சிவபிரானார்) நின்றதோர் நேர்மையும் அறிந்த பயனை எய்தி னார்கள்.

## கூடி வழிபடுமின் !

யாத்திரையின் பலன் பலவற்றுள் கூடிவழிபடுகின்ற பேறு வாய்ப்பதும் ஒன்றாகும். முன்பு சமயாசாரியர்கள் எங்குச் சென்றாலும் அங்கிருந்தவர்களும், சென்றவர்களோடு ஒன்றுகூடி வழிபாடு செய்தார்கள். இது கூட்டு வழிபாடு அன்றோ? கூட்டுவழிபாடு வெளிநாட்டிலிருந்து நம் நாட்டிற்குப் புதிதாக வந்ததாமோ? திருமுறைகளுள் கூட்டுவழிபாடு நடத்தும்படி வற்புறுத்துவதைப் பல இடங்களில் காணலாம். கூடி வணங் கும் உண்மை

'நிரவிப் பல தொண்டர்கள் நாளும்
பரவிப் பொலியும் பனையூரே'

'தொண்டர் இசைபாடியும் கூடிக்
கண்டு துதிசெய்பவன் ஊராம்'

'நுணங்கும் புரிநூலர்கள் கூடி
வணங்கும் மயிலாடுதுறையே'

முதலியவற்றால் அறிவிக்கப்பட்டது. கூட்டுவழிபாடு புதிய தன்று. "முடிகள் வணங்கி மூவாதார்கள் (அமரர்) முன் செல்ல, வடிகொள் வேய்த்தோள் வானர மங்கையர் பின்செல்லப் பொடிகள் பூசிப் பாடுந்தொண்டர் புடைசூழ, அடிகள் ஆரூர் ஆதிரை நாளாலது வண்ணம்" என்பது, அப்பர் சுவாமிகள் தலயாத்திரையில் கண்ட திருவாரூர்த் திருவாதிரை விழாக் காட்சியை நமக்குக் காட்டும் செய்யுளோவியம்.

## நெஞ்சறிவுறூஉ!

நெஞ்சே, தலத்திற்குச்செல்க. நீரில்மூழ்க, நீறுபூசுக, காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கித் திருமுறை ஓதுக. நெக்கு உள் ஆர்வம் மிகப்பெருகி நினைக. அக்குமாலைகொண்டு அங்கையில் எண்ணுக. அஞ்சுகளிறும் அடக்கி இண்டைகட்டுக. இறைவனுக்குச் சார்த்துக. இருகையும் தலைமேற்கூப்பி ஏத்துக. திருவருளுருவாய்த் திகழ்க. பிறவி அரிது, வீடுபேறு எளிது.

தலமும் தீர்த்தமும் மூர்த்தியும் சிறந்தமெய்த்தானம்
குலவு காஞ்சிமா நகரமாம் அந்நகர் குறுகி
நலமுறச்சிவ பூசனை உஞற்றிடின் நசியா
அலகில் பாவமும் நசிக்குமென் றப்பதி எய்தி.

(காஞ்சிப் மணிகண்டேசப். 61)

# "தலைமறைவு"

1949 ஆகஸ்ட் மாதத்தின் (8 மலர், 9-வது) இதழில் வெளியான என் கட்டுரை இது. சென்ற இதழில் தலையங்கத்தை நோக்கிய அன்பர் சிலர் வேண்டுகோட்கு இசைந்து, இஃது இப்பொழுதும் வெளியிடலாயிற்று. உயிர்கட்குக் கடவுள் திருவடியில் அன்றி மறைவு இல்லை என்னும் உண்மை சான்றுகொண்டு காட்டப் பட்டுளது இதில்.

துணையாசிரியர்

இவ்வுலகில், அஃறிணையுயிர்களுள், பல தம் உடம்பு முழுதும் மறைத்துக்கொள்ளக் காண்கின்றோம், தலையைமட்டும் மறைத்துக்கொள்வனவும் சிலஉள. உடல்மறைவையும் 'தலை மறைவு' என வழங்குவதுண்டு. தலைமறைவு தலையை மற்றொன்றன் சார்பில் மறைப்பதும், தலையைப் பிறிதொன்றால் மூடிமறைப்பதும், திறமை வெளிப்படும்வரை அறிவின் வன்மையால் மறைப்பதும் முதலாகப் பலவகைப்படும். தூண், சுவர் முதலியவற்றின் சார்பால் மறைத்துக்கொண்டு விளையாடுஞ் சின்னஞ்சிறியர் பென்னம்பெரியர் செயலையும், தெனாலிராமன் வண்ணார்சாலைக்கொண்டு தலையை மறைத்துவந்த கதையையும், பகல்வேடக்காரர் முதலியோர் திறமையையும் இங்கு நினைத்துக் கொள்ளல் நன்று.

ஓட்டைச்சிவிங்கி, முள்ளம்பன்றி, பூனை, நெருப்புக்கோழி, நீர்க்கோழி, நத்தை, நண்டு, ஆமை, மண்ணுளிபாம்பு, ஓணான், ஓந்தி, எலி, மரவட்டை, பிள்ளைப்பூச்சி, பாசை முதலியவை தலைமறைத்துக் கொள்ளும்வன்மையில் முதன்மையுடையவை.

பிட்டுக்கூடையால் தலைமறைத்துக் கொள்ளுதல் சிலரிடத்து இன்றும் காணப்படுகின்றது. குடிசெற்றிகளைப் பழிப்போர் "எங்கேயாவது தலைமறைவாகத் தொலைந்துபோ" என நொந்து வைவதுண்டு. நாணத்தாலும், கடன்பட்ட

தாலும், பழித்தற்குரிய செயலில் ஈடுபட்டதாலும், தொழு நோய் முதலியவற்ருலும், களவாடியதாலும், சிறையினீங்கிப் பிழைத்ததாலும், இன்னேரன்ன பிறவாற்ருலும் தலைமறைத் துக்கொள்ளல் இருபாலாரிடத்தும் இருக்கின்றது. தலைமயிரை நரைக்கும்வண்ணம் ஆக்கிக்கொண்ட இளைஞர், நகைக்கும் வண்ணம் ஆதலை அஞ்சித் தலைமறைத்துக்கொள்வதும் உண்டு. தலைமயிரை அதன் வினைஞனிடம் கொடுத்து, அவன், இவர் எண்ணத்தின்வண்ணம் செய்யப்பெருமையையெண்ணி, வெளி வர அஞ்சித், தலைமறைத்துக்கொள்ளும் சிறுவர் பல்லோர். கடன்கொடுத்தார், இரவல் அளித்தார் முதலியோரிடத்தில் எதிர்நின்று தக்கவை சொல்லிச் சின்னுள் பன்னுள் தாழ்க்கச் செய்யுந் திறனில்லாதாரும், சொல்லியவாறு நடக்காத கோழை யரும், புறங்கூறுவாரும், பொய்யரும், அழுக்காற்றினரும், வாய்மையைக் காக்க வகையற்ரோரும் தலைமறைவை அடைவர். ஆசிரியர், வகுப்பில் வினவுதற்கு விடையிறுக்க மாட்டாத மாணுக்கர் பலர் தலைமறைத்துக்கொள்ளல் என்றுமுள்ளதே எனினும், இஞ்ஞான்று பல காரணங்களால் குறைந்து விட்டது. எவ்வாறு? பலரும் விடையிறுக்கமாட்டாது விழிக்கும் அளவு, ஓயாது கற்குமாறு கல்விவளர்வதால்; சட்டங்கள் முற்றுப் பெற்றதால்; குருசிடபேதம் அற்றதால்; மேல்நாட்டுமுறை என்று போற்றப்படுவதால்.

மானமழிந்து மதிகெட்டுப் போனதிசை எல்லார்க்குங் கள்ளரெனச் சொல்லப்பெற்று, இழிவின் முடிவைக் கண்டார் பலரும் தலைமறைவை வேண்டாராய், நாடறிந்த பீடராய் நிலவுவர். அவர்க்குத் தலைமறைவு என்னும் அறிகுறி வேண்டுவ தில்லை. முகமூடிக்கொள்வோரும் உளர். அதன் கருத்தும் அம்மூடிக்குள் முழுகிற்று. பொழுதுபோம்போது உண்ணும் பழக்கம் என்னிடத்திலும் இருந்தது. அதன்கருத்து இரவில் உண்ணும் பேருண்டியில் ஒளித்துக்கொண்டது. அதனுல் நான் அப்பழக்கத்தை விட்டொழித்தேன். இவ்வாறு எத்தனையோ நலங்கள் செயலில் அகலாது அவற்றின் கருத்தின் அகன்றன.

ஒருநாள் நானும் தலைமறைவை நாடினேன். அதற்குக் காரணம் கருணையேதிருவுருவாகிய பரசிவம் இச்சாஞானக்கிரியா சொருபனுகி, நான் பிறவாநெறியொழுகிப் பேரின்பம் எய்தி

வாழத் திருவுளங்கொண்டு, அசேதனமான மாயையினின்றும் தனுகரணபுவனபோகங்களைக் கொடுத்தருளியும், நான் அவற்றைப்பாழுக்கிறைத்துப்பயன்பெருதொழிந்த பெருங்குற்றத்தை உணர்ந்ததே. அவன் எதிரிற்போய் நிற்பது எவ்வாறு என்று எண்ணினேன். எங்கேயாவது தலைமறைத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்துவிட்டேன். அதற்குத் தக்க இடம் எது என்று தேடிக்கொண்டலைந்தேன். நம் சமயாசாரியர் திருநாவுக்கரசு நாயனுர் திருவடியை அடைந்து அவற்றின் நிழலில் மறைத்துக்கொள்ள விரும்பிச் சென்றேன்; அடைந்தேன். மறைந்தேன். அவர் திருவடியில் மறைந்த என்னை அவர் சிறிதும் கண்ணெடுத்தும் பார்க்கவேயில்லை. அவர் பாட்டுக்கு ஒரு சடைப்பெருமானைத் தலைமறைவு தருவாய் என்று தன் குறையைச் சொல்லி முறையிட்டுக் கொண்டிருக்கின்ருர். பார்த்தேன். எனக்குத் தலைமறைவு இது என்று நான் வந்தால், தமக்குத் தலைமறைவு வேறுண்டு என்று இவர் தெரிவிக்கின்ருரே! சரி இதுவும் நன்றே! இங்குவந்ததால் முடிவான தலைமறைவு இன்னது என்று ஒருவாறு புலப்படுகின்றது. இன்னுஞ் சற்றுநேரம் இருந்துபார்க்கலாம் என்று காத்திருக்கத் துணிந்தேன்.

பின்னர், அப்பர்க்கு அப்பன் தலையப்பனுதலின் இரங்கித் தனது தாளினிழலில் அவர்தலைமறைவைத் தந்தருளினுன் போலும்! உடனே நாவரசர்,

தேடிக் கண்டு கொண்டேன் திரு
மாலொடு நான்முகனுந்
தேடித் தேடொணுத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்.

இறுமாந்திருப்பன் கொலோ ஈசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்திதன் சேவடிக்கீழ்ச் சென்றங்
கிறுமாந்திருப்பன் கொலோ.

என்று ஆராக்களிப்பால் ஆடுகின்ருர் கூத்து. நான் என் செய்வது? தலைமறைவு அவர்க்குக் கிடைத்துவிட்டது. எனக்கு? சுவாமி! சுவாமி!! என்னையும் அங்கு ஏற்றி ஆட்கொண்டருளல் வேண்டும் சுவாமி!!! என்று விழுந்து வணங்கித் தொழுது

தூமலர் தூவி வேண்டினேன். வேண்டியதுதான்; அவர் உள்ளம் சீற்றத்தின் நாற்றம் எடுத்தேயிருக்காத சிறப்புடைய தாயிருந்தும், என் பொல்லாதகாலம் அச்சீற்றத்தின் தோற்றமே தலைமறைவுக்குச் சென்ற என்னை முதன் மறைவுக்கு உரியனாக்கி விடும்போலிருந்தது. அதுவும் பொருளில் ஒன்றாகத்தோன்றும். தோன்றினும் கடைமறைவே. சீற்றந் தணிக்கத் திருவருளால் எனக்கு ஒன்று தோன்றிற்று. அதைச் சொன்னேன். சுவாமி! மாணிக்கவாசகர் பேறெனக்குத் தரவல்லாயோ? என்றதைவிட இது தவறோ என்றேன். 'எப்படிப் பாடினரோ, அப்படிப் பாடநான் ஆசைகொண்டேன்' என்றதினும் இது தப்போ என்றேன். இவ்விரண்டுங் கேட்ட சொல்வேந்தர் 'இத் தமிழ் உலகம் இவ்வாறு மாறி விட்டதோ? சரிசரி உன்னால் ஒன்றுங் குற்றமில்லை, நீ இங்குவரத் தகுதியுடையாயல்லை. திரும்பிச் செல். எங்கேனும் ஒருகுருமூர்த்தியைத் தேடிக்கண்டு முறைப் படி வழிபட்டுத் தீக்கைபெற்றுக்கொள். சரியை கிரியையோகம் ஞானம் என்னும் நாலெறியில் முறையே நின்றொழுகிவா. பின் தக்க இடத்தில் தலைமறைவு கிடைக்கும். பெற்றுப் பேரின்புறு வாய்' என்றுணர்த்தியருளினார். அவ்வருளே தலைமறைவாகிக் களிப்பூட்டப் பெற்றேன். மீண்டேன். மீள ஆற்றேன். புல்லிக் கிடந்து புடை பெயர்ந்த என்னைக் கொல்லத்துணிந்தது அப் பிரிவு. பூதாசுத்தி முதலியவை தீர்ந்து ஐவகைச் சுத்தியும் பெற்றாலொழியத் தலைகாட்டுவதில்லை யென்று முடிவு செய்து கொண்ட நான் தலைமறைவுக்குரிய இடங்கண்டும் கிடைக்கப் பெற்றிலேனே என்று கவலைக்கடலுள் முழுகினேன். பின் மூச்சைப்பிடித்து மேலெழுந்து, அப்பனே!

பெருவிரல் இறைதான் ஊன்றப் பிறையெயி றிலங்க அங்காந்
தருவரை யனைய தோளான் அரக்கன் அன்றலறி வீழ்ந்தான்
இருவரும் ஒருவ னாய உருவமங் குடைய வள்ளல்
திருவடி சுமந்து கொண்டு காண்கநான் திரியுமாறே.

என்று பாடியருளினீர் தேவரீர். அடியேன் தேவரீர் திருவடி மலரைச் சுமந்துகொண்டு திரியுமாற்றைக் கண்டுகளித்தல் உலகோர்க்கு வாய்த்தல் நன்றன்றோ? எனக்கு வாய்த்ததை விடத்துணிவேனோ? என விடாப்பிடியாக மறுபடியுஞ் சிக் கெனப் பிடித்துக்கொண்டேன். ஆசிலாத அவர்க்கு மாசு போன்ற என் பிடிப்பு வருத்தஞ் செய்வதாகத் தோன்றிற்று.

உடனே என்தலைமேல் அவர் "வைத்தகால் வருந்துமென்று வாடி நான் ஒதுங்கினேன்." இனி அவர்காட்டிய நெறியே செல்லத் துணிந்து புறப்பட்டேன். வழியெல்லாம் என்வாய் என்னையறியாமல்,

மாயவன் மூந்நீர்த் துயின்றவன் அன்று மருதிடையே
போயவன் காணுத பூங்கழல் நல்ல புலத்தினர்நெஞ்
சேயவன் சிற்றம்பலத்துள் நின்றுடுங் கழல் எவர்க்குந்
தாயவன் றன்பொற்கழல் என் தலைமறை நன்னிழலே.

என நம்பியாண்டார்நம்பிகள் அருளிச்செய்த உபதேச மொழியை நவின்றுகொண்டேயிருக்கின்றது. அது நவில நான் நடக்க, என்னை மறந்து, காமக்கூரிலிருந்து ஆரணிக்குச்சென்று, அங்கு நின்று களமூர்க்கேகிப், புகைவண்டியிலேறி, இரவெல்லாம் விழிப்புடன்போந்து மயூரபுரத்திலிறங்கினேன், வள்ளலார் மலரடி வணங்கினேன். அவர் (கிழக்கில்) துறைகாட்டினர். (மேற்கில்) வழிகாட்டினர். (தெற்கில்) வாக்குக் காட்டினர். (வடக்கில்) கைகாட்டினர். கிழக்குநோக்கிச் சென்றேன். சில கடிகை கடந்தேன். வடபால் தருமபுர ஆதீனத் திருமடாலயம் இருத்தலை யுணர்த்தும் எழுத்தொளி என் உளத்திற் பழுத்திருளைப் போக்கிற்று.

உள்ளே நுழைந்து திருவீதி வலம்போந்து, திருக்குளத்துள் "மணலுறமூழ்கி" (1. 121. 7.) இருபத்தைந்தாவது குரு மகா சந்நிதானமாக எழுந்தருளி வீற்றிருக்கும் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருவடிக் காட்சியைப்பெறுஞ் செவ்விநோக்கிக் காத்திருந்தேன். இளைய பிள்ளையார்க்கு வழிவழித் தொண்டுபுரிவேனைத் திருவருள் ஏன்றுகொண்டு, அகம்படியரைவிடுத்து, திருமூலத்தானத்துள் வரப் பணித்தருளி, அழகிய சொக்கலிங்கமாகக் காட்சி தந்தருளப்பெற்றேன். "பெற்றலும் பிறந்தேன் இனிப் பிறவாததன்மைவந்து எய்தினேன்" நற்றவா!

"முருகார் நறுமலர் இண்டை தழுவிவண் டேமுரலும்
பெருகா றடைசடைக் கற்றையினுய் பிணிமேய்ந்திருந்த
இருகாற் குரம்பை இதுநான் உடையது இதுபிரிந்தால்
தருவாய் எனக்குன் திருவடிக்கீழ் ஓர் தலைமறைவே"

என்று அழியாவரம் வேண்டினேன். நெல்வாலூன்ற வருந்தும் உடம்பெடுத்தலை வெறுத்து, "களியே புலமாக்கருதி மிகுஞான வொளியே ஒளியா ஒளித்தலை விரும்பி, முறைப்படி வழிபட்டு வணங்கி வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தேன்." எழுதலும் என்பிறவி வேதனை விலங்கிடப் பணித்தருளினார்கள். திருநோக்கம், திருக்கைப் பரிசம், திருவாசகதீட்சை, திருமானத தீட்சை, சிவசாத்திர தீட்சை, சிவயோகதீட்சை, ஒளத்திரி தீட்சை என்பவற்றாலாகும் பாசநாசத்தைத் தமது திவ்விய சந்நிதியாலேயே எய்தப் பேரருள் புரிந்தருளினார்.

"தன்னை எனக்குத் தருவதையன்றியும்
என்னையும் எனக்கே தந்து தன்னது
பேரா னந்தப் பெருங்கட லதனுள்
ஆரா இன்பம் அளித்துத் தீரா
உள்ளும் புறம்பும் ஒழிவின்றி நிறைந்த
வள்ளன்மை காட்டி"

(இருபா இருபஃது)

மலரடிகளை என் தலைமறைவுற அருளினார்.

"சுயம்பிர கர்சஞ் சொருபா நந்தம்
இயம்புதற் கரிதாம் இன்பப் பெருக்கம்
தாடலை போலுங் காறலை போலும்
கூடலை என்னுற் கூறவும் படுமோ?"

(திருச்செந்தூரகவல்)

அப்பெருமானரிய (மலர்க்கால்) மறைவு அடியேன் தலை (முழு) மறைவு. அம்மறைவு ஒன்றே பிறவித்துன்ப மறைவு. பேரின்ப வெளி நிறைவு.

வாழ்க தருமை மடாலயம்? வாழ்க குருமகாசந்நிதானம்! வாழ்க அடியார்! வாழ்க சைவம்! வாழ்க உலகம்!

---

"எவரெவர் எத்திறத்தர் அத்திறத்த ராய்நின்
றவரவர்க் காவன கூறி — எவரெவர்க்கும்
உப்பாலாய் நிற்பமற் றெம்முடையார் தம்முடையான்
எப்பாலும் நிற்பதென"

(நீதிநெறிவிளக்கம் 98)

# அடியார் உள்ளம்

பிர்மஸ்ரீ. ய. மஹாலிங்க சாஸ்திரிகள், M. A., B. L.,
தருமபுர ஆதீனக் கல்லூரித் தலைவர்.

சிவானந்தலகரி என்னும் பேரின்பக்கடலுள் முழுகுவது அரிது. ஆதிசங்கரர் அருளிய சிவாநந்தலகரியைப் பெயரளவில் கேளாதவரும் அரிது. அதன் உண்மைப் பொருளை உணர்வதும் அரிது. அத்தகைய அருமைப் பாட்டில் எளிமையாகப் பாடியருளிய நூலாசிரியர் திருவுள்ளம் சில சுலோகங்களுக்காதல் நாம் அறியச்செய்து உதவுகின்றது இக்கட்டுரை. உவமேயம் ஒன்று உவமானம் பல. ஒவ்வொன்றற்கும் வெவ்வேறு கருத்துண்டு. அவ்வுண்மையை அறிந்தோரே உரை கூறவல்லவர்; தக்கவர்.

துணையாசிரியர்

பக்தர்களின் மனம் பரமேச்வரன்பால் இயற்கையாகவே செல்லுகிறது. எப்படி ?

हंसः पद्मवनं समिच्छति यथा नीलाम्बुदं चातकः
कोकः कोकनदप्रियं प्रतिदिनं चन्द्रं चकोरस्तथा ।
चेतो वाञ्छति मामकं पशुपते चिन्मार्गमृग्यं विभो
गौरीनाथ भवत्पदाब्जयुगलं कैवल्यसौख्यप्रदम् ॥

ஹம்ஸம் தாமரைக்குளத்தை விரும்பி அடைவதுபோல், நீருண்ட மேகத்தைச் சாதகபக்ஷி விரும்பி எதிர்பார்த்து நிற்பதுபோல், ஒவ்வொருநாளும் சக்ரவாக பக்ஷியானது உதய சூரியனைக் காணக் காத்திருந்து களிப்பதுபோல், அப்படியே சந்திரனிடம் சகோர பக்ஷி பிரேமை கொள்வதுபோல், ஹே பசுபதே! ஹே கௌரீநாத, ஹே பிரபோ ஞானமார்க்கத்திலே தேடி அறியத் தகுந்ததும் கைவல்ய ஸௌக்கியத்தை அளிப்பதுமான உன் இரு சரண நளினங்களை என்மனம் நாடி வருகிறது. (ஏற்றுக் கொள்வாயாக) ஹம்ஸத்திற்குத் தாமரைக்குளம் இயற்கையில் இருப்பிடம். நீருண்ட மேகம் மாதக் கணக்காய் பட்டினி கிடந்து வாடிநிற்கும் சாதக பக்ஷிக்கு ஜீவனதானம் செய்யும்

வள்ளல், சூரியன் மறைந்தால் சக்கிரவாக ஸதிபதிகள் பிரிந்து மனம்நொந்து விரஹவேதனையை அனுபவிப்பவைகள்; தாங்கள் கூடி வாழ, சூரியனின் உதயத்தை அனுதினமும் எதிர்பார்த் திருக்கும் இயல்புடையவைகள். சகோரபக்ஷி அமிர்தமயமான சந்திர கிரணங்களையன்றி வேறு ஒன்றையும் புசிப்பதில்லை. அமாவாசையானல் அது பட்டினிதான், கலைகள் குறைந்த நாட்களில் கால்பட்டினி அரைபட்டினிதான், நிறைந்த நாட்களி லேயே நன்கு உண்டுவாழ்கின்றன.

இந்த நான்கு உதாரணங்களினுல் அடியார் மனம் ஈசுவர னின் திருவடிசேர ஆவல்கொள்ளும் நிலை சித்திரிக்கப்படுகிறது. ஹம்ஸத்திற்குத் தாமரைக்குளம்போல் அடியார் உள்ளத்திற் குப் பரமன்பாதம் இயற்கையில் வாஸஸ்தலம். அடியார்மனம் சாதகபக்ஷிபோல் ஏங்கி நின்று பகவத்கருணையாகிற வான வர்ஷத்தைப் பருகுகிறதே ஒழிய மற்ற எதையும் பிராணன் துடித்தாலும் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை. பக்தனின் ஹ்ருதயம், பகவானின் சரணகமலத்தைவிட்டுப் பிரிந்திருப் பதைச் சக்ரவாகத்தின் விரஹதாபத்தைப்போல் அனுபவிக் கிறது. பகவத் பிரத்யக்ஷம் ஏற்பட்டாலொழியத் துயருற்று மெலிந்து தனியே நின்று தவம்செய்யும் ஆற்றலுடையது, கடவுளின் திருவடி தர்சனத்தாலேயே உய்கிறது. சகோரத் தைப்போல் பாகவதர்களின் பண்பட்ட சித்தம் அமிர்தமயமான ஒளி ரூபமான சந்திரகிரணங்களை ஒத்த ஞான உணவை நாடுகிறதே ஒழிய வேறு விதத்தில் இரை தேடுவதில்லை,

அடியார் உள்ளம் வஸிப்பது பகவத் சரண கமலங்களில், பருகுவது பகவத்கருணை, ரமிப்பது பகவத்ஸாலோக்யத்தில், ஜீவிப்பது பிரம்மஞான ஒளியில்,

பசுபதே என்ற ஸம்போதனத்தினுல் பசுக்கள் அடைய வேண்டிய இடத்தை அடைவிக்கிறவன் ஈச்வரன் என்பதும், விபோ என்றதால் அவன் கருணைபொழியும் வள்ளல் என்பதும், கௌரீநாத என்றதால் பிரிவாற்றுமையின் வேட்கையை அனுபவித்துப் பின்பு அர்த்தநாரியானவனுக்கு பக்தனது பிரிவுத்துயரத்தை நீக்கப் பரிவு ஏற்படுவது தகும் என்பதும், கைவல்யஸௌக்கியத்தைக் கொடுக்கும் பாதகமலம் என்ற விசேஷணத்தால் அடியார் உள்ளத்தின் பேரின்பப்பற்றும், சூசிப்பிக்கப்படுகின்றன.

रोधस्तोयहृतः श्रमेण पथिकः छायां तरोर्वृष्टितो
भीतः स्वस्थगृहं गृहस्थमतिथिः दीनः प्रभुं धार्मिकम् ।
दीपं सन्तमसाकुलश्च शिखिनं शीतावृतः त्वं तथा
चेतः सर्वभयापहं व्रज सुखं शंभोः पदाम्भोरुहम् ॥

ஹே மனமே நீ ஸர்வபயங்களையும் போக்கக்கூடிய ஈசுவரனுடைய திருவடித் தாமரைகளைச் சரணமடைந்து சுகமாயிருப்பாயாக. வெள்ளத்தில் அடித்துப்போகப்பட்டவன் கரையை அடைந்து சுகமாயிருப்பதுபோல், வழிநடந்து களைத்த வழிப்போக்கன் மரத்தின்நிழலை அடைவதுபோல், மழைக்குப் பயந்தவன் மச்சுவீட்டை அடைவதுபோல், கிருஹஸ்தனை அதிதி அடைவதுபோல் ஏழை தார்மிக பிரபுவை அடைவதுபோல், இருட்டில் தவிப்பவன் தீபத்தை அடைவதுபோல், குளிரினல் பாதிக்கப்பட்டவன் நெருப்பை அடைவதுபோல். லோகத்தில் எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன! விபத்துக்கள். பலவித கிலேசங்கள், பயம், பசி, ஏழ்மை, அறியாமை, அழிவு. இவைகளினின்று தப்பி ஸௌக்கியமாய் இருக்க விரும்பினல் மனம் பரமேச்வரனது பாதகமலங்களில் அடைக்கலம் புக வேண்டும். ஹே மனமே நீ ஸம்ஸாரமாகிற பிரவாஹத்தில் மிதந்து சென்றுகொண்டிருக்கிருய். நீ கரையை அடைந்து ஸௌக்கியமாயிருக்கவேண்டுமானல் ஈசுவரபக்திதான் உகந்த வழி. இந்த முடிவற்ற ஸம்ஸார மார்க்கத்தில் நடந்து நடந்து களைப்பினல் பரிதவிக்கும் உனக்கு ஈசுவர சரணங்களே இன்பம்தரும் மரத்துநிழல். ரோகங்களும், சத்ருக்களும் ஈதி பாதைகளும் உன்னை மழைபோல் விரட்டுகின்றன. பகவத் ஸேவைஎன்னும் மச்சு வீட்டில் அடைக்கலம் புகுந்து நிம்மதியாயிருப்பாய் ஆக. நீ பசிதாகத்தால் வருந்தி உன்னை அன்னமிட்டுப் போஷிக்கின்றவனைக் காணமல் அலைந்துகொண்டிருக்கிருய் அல்லவா? பகவான் ருசியான போஜனத்தைத் தயார் செய்துகொண்டு உன்போன்ற அதிதியை எதிர்பார்த்தவண்ணமிருக்கிருர். அவரிடம் சென்று உண்டுகளித்து இன்புற்று வாழ்வாயாக. நீ ஐச்வர்யத்தைவிரும்புகிருய். பரமஏழை; யாசகம் செய்து ஜீவிப்பவன், உன்னைப் பார்த்து மனமிரங்கி உன் கஷ்டநிலைமையை நிவர்த்திசெய்ய முன்வருபவர் எவரையும் நீ காணவில்லை அல்லவா? உன் துரதிர்ஷ்டவசத்தால் நீ இன்னமும் தார்மிக பிரபு ஒருவன் இருக்கிருன் என்பதைத் தெரிந்து

கொள்ளவில்லை. அவன் தீனரக்ஷகன். உன்னைப் போன்றவர்களைத் தேடிக்கொண்டிருக்கிறான். ரக்ஷிப்பதற்காக. துஷ்டப் பிரபுக்களைவிட்டு அந்தத் தார்மிக பிரபுவிடம் போ. ஸர்வ ஸம்பத்துகளையும் பெறுவாய். ஹே மனமே, இன்னமும் ஏன் சுணக்கம்? (ஆம்) வெளிச்சமும், உஷ்ணமும் தேவை. ஞான ஒளியைப் பெறுதவரையில் சுகம் பெறுவது எங்ஙனம்? இருள் விலகவேணும், ஒளியில் திளைக்கவேணும். அதுமட்டும் போதாது. குளிர்விட்டுச் சூடு பிறக்கவேணும். ஞானச் சுடரில் ஒளியும், உஷ்ணமும் உண்டல்லவா? அந்தச் சூடு, கொளுத்தும் சூடு அல்ல இன்பமயமானது. ஆனந்த உணர்ச்சியின் அற்புத வெப்பம். நீ அதைப்பெறுவாய், ஆண்டவனின் பொற்றாள்களில் ஈடுபட்டாயானால்,

சம்ஸாரத்தில் மூழ்கிச் சுழன்று தத்தளித்துவரும் ஜீவன் ஒருநாள் விழித்துக்கொண்டான். இந்த பிரவாஹத்திலிருந்து தப்பிக்கரை ஏற முயன்றான். கரையேறிப் புகலிடத்தைத் தேடி அலைந்து களைத்துப்போய் வழியில் ஒரு மரத்தடியில் களைப்பாறியிருக்கையில் மழையின் தொந்தரவு ஏற்பட்டு விரைந்தோடி நல்லதொரு வீட்டில் புகுந்துகொண்டான்; அங்கு அவன் பசி தாகங்களைத் தீர்க்க அவன்பேரில் ஒரு குடும்பி கருணைகொண்டார். பின்பு அவன் மஹத்தான ஐச்வரியவான் ஒருவரைநாடித் தருமம் செய்வதைத் தலைமேற்கொண்ட அவருடைய உதவியால் தக்க பெருமைகளை அடைந்தான். இருந்தாலும் இந்த ஐச்வரியஸித்திகளாலும் அவனுக்கு நிம்மதி ஏற்படவில்லை. வாழ்க்கையில் தொடர்ந்துவரும் இருளும் குளிரும் அவனை நித்யமுக்தனுகாதபடி இடையூறு செய்து வந்தன. இவைகளை ஒளியினுலும், வெம்மையினுலும் அவன் போக்கிக்கொண்டான். ஜீவன் சிவனருளால் முக்தனுனன். ஸச்சிதானந்தப் பேறுபெற்றான்.

அந்தக் கரையாயிருந்தவனும் கடவுள் மரமாயிருந்தவனும் கடவுள். மச்சுவீடும் கடவுள். அன்னதாதாவும் கடவுள். ஐச்வரிய தாதாவும் கடவுள். ஞானஒளி தந்தவனும் கடவுள். இன்ப உணர்ச்சியின் வெப்பம் வெதும்பச்செய்தவரும் கடவுள். அவர் ஜீவனுடன் கூடவே யிருந்து, கஷ்டத்திலிருந்து, ஸுகத்திற்கு அவனை மெல்லமெல்ல அழைத்துச் செல்லுகிறார்.

[அடுத்த இதழில் முடியும்.]

# நாவுக்கரசும் திருவள்ளுவரும்

பேராசிரியர், திரு. G. சுப்பிரமணியபிள்ளை M. A. B. L, அவர்கள்,
அண்ணாமலைநகர்.

**புதிய நாதி பழைய கதியிற் பிற்பாதியை விட்ட பாடில்லை. அதனால் அதன் ஆதியும் அந்தமும் புலப் படும். திருக்குறள் ஓர் இலக்கணமாம். திருநாவுக் கரசர், சுந்தரர் அவ்விலக்கணத்திற்கு ஒத்த இலக்கிய மாவராம், இது பின் இனிது விளங்கும். 'ஒருபற்றிலா மையும் கண்டிரங்காய்' என்றவர்க்குச் சமயப் பற்றும் உண்டோ? தாண்டகச் சதுரர் சமயாதீதப் பழம் பொருளாதலின், வள்ளுவரும் உள்ளுதற் குரியர் பிற்பட்டவராயின். —துணையாசிரியர்.**

நாவுக்கரசும் திருவள்ளுவரும் என்ற தலைப்பை நினைத்த வுடனேயே அவ்விரு பெயர்களின் தலையெழுத்துக்களும் கூடிக் குதித்து ஒன்றாய் இணைந்து கைகோத்து நமக்கு காட்சியளிக்கும். அவ்வீரெழுத்துக்களும் ஒரு சொல்லாய்ப் பொருந்தி நாதியென் ருகும். யாருக்கு நாதி? நம் தமிழன்னைக்குத்தான். தமிழ் மொழிக்கு நாதியாவார் நாவுக்கரசும் திருவள்ளுவரும் என்பது எவ்வளவு பொருத்தமும் உண்மையுமாகும்?

நாதி என்ற சொல்லை நாம் அடிக்கடி வழங்குகிறோம். மிகக்கிட்டின உறவுடன் தாயாதி முறையுள்ளவனையும் காப்பாற்றுபவனையும் நாதியென்று சொல்வர். யாதொருதிக்கு மில்லாதவன் அநாதி. ஏனென்று கேட்க ஆளில்லாதவன் அநாதி. தழைக்கும் செழுங்கிளையைத் தாங்கி வளர்ப்பவன் எல்லாச் செல்வமும் குறைவறப் பெற்றவனாவான். நாதியற்ற வனுக்கு இவ்வுலக வாழ்க்கையே சுவைக்காது; 'நான் யாருக்காக வாழப்போகிறேன்? என்னை யார்தாம் தாங்குவார்கள்? என்ற ஏக்கம்தான் பிறக்கும். நாதியற்றவன் என்ற நிலையைவிட இழிவானது வேறு இவ்வுலகில் இல்லை. மனிதர்களைப் போல மொழிகளிலும் நாதியுள்ள மொழிகளும் நாதியற்ற மொழி களும் உண்டு. நல்ல இலக்கிய வளம்பெற்ற மொழிகள் நாதி யுள்ள மொழிகள். நல்ல கவிகளும் கவிதைகளும் பெருமல், இலக்கிய ஆதாரம் கிடையாமல், ஒரு குழுவினரின் பேச்சு

624



வழக்கில் மட்டும் நின்றுவிடும் மொழிகள் நாதியற்ற அநாதி மொழிகள். உயர்தனிச் செம்மொழியாகிய நமது தாய் மொழி யாந்தமிழுக்குக் கதியாவார் கம்பரும் திருவள்ளுவரும் என்று கூறுவர். அவ்விதம் கதியுள்ள தமிழுக்கு நாதி உண்டா என்றே கேட்கத் தேவையில்லை. நாவுக்கரசர் என்ற பெயரிலுள்ள முதலெழுத்தும் திருவள்ளுவர் என்ற பெயரிலுளள முதலெழுத்தும் சேர்ந்தால் நாதி வந்துவிடும். பெயரளவில் மாத்திரமல்ல. உண்மையை உற்றுநோக்கினாலும் நாவுக்கரசும் திருவள்ளுவரும் தமிழ் மொழிக்குச் சிறந்த நாதி யாவார்கள்.

நாவுக்கரசரையும் திருவள்ளுவரையும் இணைத்துப்பார்ப்பது ஒரு நல்லபடிப்பாகும். பிற தமிழ் இலக்கியங்களில் திருக்குறள் எவ்வாறு கையாளப் படுகிறது என்பதைக் காண்பதும், கூறுவதும், கேட்பதும், எழுதுவதும், படிப்பதும் அறிஞர்களுக்கு அளவில்லாத மகிழ்ச்சியைக் கொடுக்கும். ஆனால் அப்படிப் பார்ப்பவர்களுங்கூட நாவுக்கரசரையும் திருவள்ளுவரையும் ஒட்டிப் பார்ப்பதில்லை. திருவள்ளுவர் எழுதிய திருக்குறள் ஒரு சிறந்த இலக்கியம். வள்ளுவர் சமயம் கடந்தவர். நாவரசரோ சைவ சமயத்துறவி. அவர் திருவாய் மலர்ந்தருளியவை தேவாரத் திருமுறைகள். அவை சமயச் சார்புடைய பத்திச்சுவைப் பாடல்கள். இவ்விரு பெரியார்களுக்கும் என்ன தான் தொடர்பு இருக்கமுடியும்? என்று சிலர் எண்ணிவிடக் கூடும். தேவாரப் பாடல்களை இலக்கியக் கண்கொண்டு பார்ப்பதே வழக்கமில்லை. தெய்வத்திருமுறைகளை இலக்கியம் என்று சொல்வது கூடத் தவறு என்று எண்ணுபவர்களும் சொல்லுபவர்களும் உளர். ஆனால் திருக்குறளும் தேவாரமும் வேறுபட்டனவல்ல. அதிலும், நாவுக்கரசர் நற்றமிழும் திருக்குறளும் மிக நெருங்கிய தொடர்புடையன என்பதை நாம் முதலில் தெரிந்து கொள்ளவேண்டும். தேவார திருவாசகங்கள் திருக்குறள் போன்ற நூல்களையெல்லாம் ஒரே பொருளையும் குறிக்கோளையும் கொண்டுள்ளன, அவை ஒத்த மதிப்பும் சிறப்பும் பயனும் உடையன. இதனைப் பின்வரும் வெண்பாவால் நன்கு அறியலாம்.

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் — கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்."

திருக்குறளும் தேவாரமும் ஒத்ததன்மை யுடையன என்பதோடு மட்டும் இவ்வொப்புமை நின்றுவிடவில்லை. திருவள்ளுவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி ஒழுகினவர் அப்பர். திருக்குறள் நெறியே அப்பர் கடைப்பிடித்த நெறியுமாகும். அதுவே திருநெறி, அருநெறி, செம்மைநெறி. திரு நின்ற செம்மையே செம்மையாக் கொண்டவர் திருநாவுக்கரசர். இத் திரு நின்ற செம்மை நெறியானது வேறு ஏதோ பொருள் புரியாத நெறி என்று நினைத்துவிடக் கூடாது. திருக்குறளில் திருவள்ளுவர் காட்டுகின்ற பொய்தீர் ஒழுக்க நெறியே இத் திரு நின்ற செம்மை நெறியாகும். இதனை இழிகட்பெருங் கண்ணனார் என்னும் சங்கப்புலவர் அந்நாளிலேயே நன்கு விளக்கியிருத்தல் கவனிக்கத்தக்கதாகும்.

"இம்மை மறுமை யிரண்டும் எழுமைக்கும்
செம்மை நெறியில் தெளிவுபெற — மும்மையின்
வீடவற்றின் நான்கின் விதிவழுங்க வள்ளுவனார்
பாடினர் இன்குறள்வெண் பா."

இதனால் திருக்குறள் வகுத்த நெறி திரு நின்ற செம்மை நெறி என்பது நன்கு புலனாகும். திருக்குறளைக் கசடறக் கற்று அதன் நெறி வழியே உண்மையாக நடந்துகாட்டிய பெரியார் திருநாவுக்கரசர். இதனாலேயே, திருக்குறளின் உயர்வை நன்குணர்ந்து அதன்படியே ஒழுகியும் பாடியும் ஓங்கு புகழ்கொண்ட சுந்தரமூர்த்தி அப்பரடிகளைத் திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக்கரையன் தன் அடியார்க்கும் அடியேன்" என்று உளங்குளிர்ந்து போற்றினார்.

திருநாவுக்கரசரைப்போல் திருக்குறளின்படி நடந்து காட்டிய பெரியார் வேறு எவரும் இருந்ததில்லை. திருக்குறள் இலக்கணத்திற்குத் திருநாவுக்கரசர் ஒரு சிறந்த இலக்கியம் என்றே நாம் சொல்லிவிடலாம். திருக்குறளைத் திருநாவுக்கரசர் நன்கு பயின்றதோடல்லாமல் அதனிடத்தே பெருமதிப்புக் கொண்டிருந்ததால், தாம்பாடிய தெய்வ மணக்குஞ் செய்யுள்கள் பலவற்றிலும், பொருந்தும் விதத்திலே, திருக்குறளில் வந்துள்ள சொற்றொடர்களையும் அரிய கருத்துக்களையும், அழகுற ஆங்காங்கு அமைத்துப் போற்றியுள்ளார். அவர் பாடல்கள் சில திருக்குறளை விரித்து விளக்குவது போன்றிருக்கும்.

(தொடரும்)

626

# தேவர் குறளும் மூவர் தமிழும்

வித்துவான், திரு. மு. நடராஜ தேசிகர் அவர்கள்.
தமிழாசிரியர், துறைசை ஆதீனம் ஹைஸ்கூல், திருவிடைமருதூர்.

மூவர் திருமுறைகளுள் தேவர் குறட் கருத்து அமைந்தவாற்றைத் தெளியச் செய்வது இக்கட்டுரையின் உட்கோள்.

துணையாசிரியர்.

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசகம் என் றுணர்.

என்பது ஔவையார் அருண்மொழி.

திருவள்ளுவ நாயனருடைய திருக்குறளும், சிறப்பும் பொருந்திய நான்கு வேதங்களின் முடிவாகிய உபநிடதங்களும், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள் என்னும் மூவருடைய தேவாரமாகிய தமிழ்வேதமும், வியாசமுனிவருடைய வேதாந்தசூத்திரமும், திருக்கோவையார் திருவாசகங்களும், திருமூலநாயனருடைய திருமந்திரமும் ஒரு பொருளையே குறித்த வாக்கியங்கள் என்று அறிவாயாக.

திருக்குறள் முதலிய நூல்களெல்லாம் வேறு வேறு வாக்கியங்களாகத் தோன்றினும், பதி இலக்கணமும், பசு இலக்கணமும், பந்த இலக்கணமும், முத்தி இலக்கணமும் ஆகிய இவைகளை ஒரு தன்மையாகவே அறிவிக்கும் நூல்களாம்.

தேவர் என்பது திருவள்ளுவரைக் குறிக்கும். திரு என்பது உயர்வையும், வள்ளுவர் என்பது வண்மையை உடையர் என்பதையும் விளக்கிநிற்கும்.

அது வேதத்தில் இலை மறை காய்கள்போல் பலவிடங்களினும் மறைந்து வெளிப்படாதிருந்த மெய்ப்பொருள்களையெல்லாம் தொகுத்து உலகத்தாருக்குக் கொடுத்தருள் செய்தவரென்றும் காரணம்பற்றி வந்த பெயராயிற்று. உள். முதனிலை, அர். இறுதிநிலை. உ, சாரியை அம்முதனிலைப்பொருள் ஈகை,

மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞாலமுழுது நயந்தளந்தான்—வாலறிவின்
வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடிவால் வையத்தார்
உள்ளுவவெல் லாம்அளந்தார் ஓர்ந்து.

—பரணர்.

திருமாலும் குறளாய்ப் பிறந்து வளர்ந்து இரண்டு பெரிய அடிகளால் உலகமனைத்தையும் விரும்பி அளந்தான். மெய்யறிவினையுடைய திருவள்ளுவரும் தம்மினின்றும் தோன்றி அங்ஙிலை நிற்கின்ற வெண்பாக்குறளின் இரண்டு சிறிய அடிகளால் அவ்வுலகமனைத்திலும் உள்ளோரால் நினைக்கப் பட்டவற்றையெல்லாம் ஆராய்ந்து அளந்தார்.

இனி, தேவாரம்பாடிய மூவரும் திருக்குறளை எடுத்து ஆண்ட இடங்களைக் கவனிப்போம்,

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு.

எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலையுடையன. அதுபோல உலகம் ஆதிபகவனாகிய முதலையுடைத்து. அவற்றுள் முயற்சியுள் அ ஆ அங்காப்புடைய (நன்னூல்) மேல் இடம் வகுப்பட்ட முதல் எழுத்துக்களுள் அ ஆ இரண்டும் அண்ணத்தின் தொழிலாகிய அங்காத்தலையுடையனவாய்ப் பிறக்கும்.

"அங்காத்தல் - வாயைத்திறத்தல். எழுத்தெனப்படுப"

"அகரமுதல் னகரவிறுவாய் முப்பஃதென்ப எழுத்தென்று சிறப்பித்துச் சொல்லப்படுவன அகாமுதல் னகர ஈறுகக்கிடந்த முப்பதென்று சொல்லுவர் ஆசிரியர்."

"மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்
தனிமெய்களினது நடப்பு அகரத்தொடு பொருந்தி
நடக்கும் என்றவாறு."

(தொல்காப்பியம்)

"இங்ஙனம் மெய்க்கண் அகரங்கலந்து நிற்குமாறு கூறினாற் போல பதினோருயிர்க்கண்ணும் அகரம் கலந்து நிற்குமென்பது ஆசிரியர் கூறுராயினர்; அங்ஙிலைமை தமக்கே புலப்படுதலாலும், பிறர்க்கு இவ்வாறு உணர்த்தல் அரிதாகலாலுமென்று உணர்க."

"இறைவன் இயங்கு திணைக்கண்ணும் நிலைத்திணைக் கண்ணும் பிறவற்றின் கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்ப முடிந்தாற்போல அகரமும் உயிர்க்கண்ணும் தனி மெய்க்கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்குமென்பது சான்றோர்க்கெல்லாம் ஒப்ப முடிந்தது, "அகர முதல" என்னும் குறளால் "அகரமாகிய முதலையுடைத்து எழுத்துக்களெல்லாம்" அதுபோல இறைவனாகிய முதலையுடைத்து உலகமென, வள்ளுவர் உவமை கூறிய வாற்றானும், கண்ணன் எழுத்துக்களில் அகரமாகின்றேன் யானேயெனக் கூறியவாற்றானும் பிறநூல்களானும் உணர்க." (நச்சினார்க்கினியம்) கீதையில் (அக்ஷராணும் ஆகாரவத்) என்று கூறியுள்ளார்.

உயிர்க்குயிராய் இறைவன் இருப்பதை ("உரைச்சேரும் எண்பத்துநான்கு நூறாயிரமாம் யோனி பேதம்—நிரைச்சேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே நின்றான்கோயில்" என்று சம்பந்தர் அருளிச் செய்துள்ளார்.

"அகரவுயிர்போல் அறிவாகியெங்கும்;
நிகரில் இறைநிற்கும் நிறைந்து"

என்றது "திருவருட்பயன்"

"அகர முதலானை அணியாப்பனூரானை"

என்றார் சம்பந்தர்.

"அகர முதலின் எழுத்தாகி நின்றாய்"

என்றார் சுந்தரர்.

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ்வார்."

"மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் பொறிகளை வழியாகவுடைய ஐந்தவாவினையும் அறுத்தானது, மெய்யான ஒழுக்க நெறியின்கண் வழுவாது நின்றார், பிறப்பின்றி எக்காலத்தும் ஒருதன்மையராய் வாழ்வார்."

மூக்கு வாய்செவி கண்ணுட லாகிவந்
தாக்கு மைவர்தம் ஆப்பை அவிழ்த்தருள்
நோக்கு வான்நமை நோய்வினை வாராமே
காக்கு நாயகன் கச்சியே கம்பனே. —அப்பர்.

(தொடரும்)

# சென்னை, தருமபுர ஆதீன
# மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையம்
## வேலூர் தேவஸ்தான இறைபணி மன்றத்தில்
# பெரியபுராண விரிவுரை.

13—6—54 ஞாயிறுமாலை 6-30 மணிக்குச் சண்டேசுவர நாயனார் வரலாறுபற்றி வித்துவான் திரு. A. நாராயணசாமி ஐயரவர்கள் விரிவுரை நிகழ்த்தினார்கள். பண்ணின்பயன் நல்லிசை - பாலின்பயன் இன்சுவை - கண்ணின் பயன் - ஒளி பெருகுதல், கருத்தின்பயன் - ஐந்தெழுத்து. விண்ணின் பயன் மழைபொழிதல். வேதப்பயன் - சைவம் இவற்றைப்போல மண்ணின் பயனாக அமைந்துவிளங்கிய திருச்சேய்ஞலூரில் எச்சதத்தன் என்ற மறையவனுக்கு மகவாய்த் தோன்றினார் சண்டேசுவர நாயனார். பிள்ளைத்திருநாமம் விசாரசருமர். பசுக் கூட்டங்களைப் பாங்குற வளர்த்தவர். அவைதரும் சுவைமிக்க பால் முதலிய பஞ்சகவ்வியங்களை பரமனுக்குச் சேர்ப்பித்து வழிபட்டவர். மணலால் இலிங்கம் மண்ணியாற்றில் அமைத்து ஒன்றிய சிந்தையராய் ஆண்டவனைப் பூசித்தவர். சிவபூசைக்கு இடையூறாய் நின்ற தந்தையின்தாளை எறிந்தார். இவரது வரலாற்றால் சிவபூசையின் பெருமையும் ஆனினத்தின் அருமையும் அறிகின்றோம் எனக்குறிப்பிட்டார்கள்.

20—6—54 ஞாயிறு. மாலை 6-30 மணிக்கு வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், திருநாவுக்கரசு நாயனார் வரலாற்றில் சூலைதீர்த்தாட்சொள்ளல் என்பதுபற்றி விரிவுரையாற்றினார்கள். திருமுனைப்பாடிநாடு என்ற நாட்டில் திருவாமூரில் வேளாளர் குலத்தில் புகழனார், மாதினியார் என்ற தவப்பெரியார்கட்குத் திலகவதியாரும், திருநாவுக்கரசரும் மகவாய்த் தோன்றினர். நாவரசர் பிள்ளைத்திருநாமம் மருள்நீக்கியார் என்பது. தாய், தந்தையர் இறந்தபின்னர் தமக்கை திலகவதியின் பாதுகாப்பில் வளர்ந்த மருள்நீக்கியார் முன்செய்த வினைப்பயனால் சமண்சமயம் சார்ந்து தலைமைப்பதவி பெற்றுத் தருமசேனரானார். தந்தை, தாயரையும் கணவனாக வர இருந்த கலிப்பகையாரையும் பிரிந்து தம்பிக்காக உயிர்வாழ்ந்த திலவதியாரின் தவமுதிர்ச்சியால் இறைவன் மருள்நீக்கியாருக்குச் சூலை கொடுத்துத் திலகவதியார் வாயிலாகச் சூலைதீர்த்தாட் கொண்டார். இவ்வரலாற்றுப் பகுதியால், அவனன்றி ஓரணு

வும் அசையாதென்பதையும், ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே என்பதையும் அறிந்து சொல்கிறோம் எனக்குறிப் பிட்டார்கள்.

27—6—54 ஞாயிறுமாலை 6-30 மணிக்கு வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் "திருநாவுக்கரசர் தில்லை சேர்தல்" என்பதுபற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். நாவரசர் சைவரானதைக் கண்ட சமணர்கள் பல்லவ அரச னிடத்து துர்ப்போதனை செய்யத் தலைப்பட்டனர். பல்லவ மன்னன் ஆணையால், நாவரசர் நீற்றறையிலிடப்பட்டார். நஞ்சுங்கலந்த பாற்சோற்றை நனிசுவைத்துண்டார். கல்லிற் கட்டிக் கடலிலும் தள்ளப்பட்டார். பிறவிக் கடலையே கடக்கும் பெருமானுக்கு இக் கடல் கடத்தல் எளிதாயது. இதுகண்ட பல்லவ மன்னனும் சைவசமயம் சார்ந்தான். அமணர் பள்ளிகளையிடித்து அரனுக்கு ஆலயம் அமைத்தான். நாவரசர் சமணர் சமயத்திலிருந்துவந்த தாழ்வு நீங்க சூலக்குறியும் இட பக்குறியும் பொறிக்க வேண்டினார். பெண்ணுகடத்தில், அந் நிலை இறையருளால் ஈடேறியது. திருமுதுகுன்றம் பணிந்து என்றுவந்தாய் என்னுங் குறிப்போடு நடனமிடும் கூத்தப் பெருமானைத் தரிசிக்கத் தில்லை சேர்ந்தார். குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற்குமிண்சிரிப்புங்கொண்டு மனிதப் பிறவியும் வேண்டுவதுதான் என மார்தட்டிப் பேசினார். எனக் குறிப்பிட்டார்கள்.

11—7—54 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு வித்துவான் A. நாராயணசாமி ஐயரவர்கள் குலச்சிறை நாயனார் வரலாறு பற்றிப் பேசினார்கள். பேசுகையில் குலச்சிறை நாயனார் பாண்டி நாட்டில் மணமேற்குடியில் தோன்றியவர் என்றும், பாண்டி நாட்டின் முதலமைச்சர் என்றும், பாண்டிநாடு சமண் சமயத் தொடக்குண்டபோதும் தாம் சைவராகவே இருந்தாரென்றும், சைவநெறி போற்றிய மங்கையர்க்கரசியாரின் மதிவழி திருஞானசம்பந்தரைப் பாண்டிநாட்டுக்கு அழைத்துவந்து அமண்சமயம் அகற்றி. சைவம்பரவ வழி வகுத்தவர் என்றும் குறிப்பித்தார்கள்.

18—7—54 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு வித்துவான் திரு. N. சீனிவாசன் அவர்கள் பெருமிழலைக்குறும்ப நாயனார் பற்றியும், காரைக்காலம்மையார் வரலாறு பற்றியும் சொற் பொழி வாற்றினார்கள். பெருமிழலைக் குறும்ப நாயனார்.

மிழலைநாட்டிலுள்ள பெருமிழலை என்னும் ஊரில் சிற்றரசர் குலத்தில் தோன்றியவர், சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் குருவாகக் கொண்டவர். சுந்தரர் கயிலை செல்வதை முன்னுணர் வாலறிந்து கண்மணியைப் போன்ற குருவினைப் பிரிந்து வாழ மனமில்லாமல் யோகமுயற்சியால் உடலைப்பிரிந்து சிவப்பே றெய்தினர். குருபக்தியின் பெருமையை இவ்வரலாறு விளக் குகிறது.

காரைக்காலம்மையார் புனிதவதியாரென்ற பெயரோடு காரைக்காலில் தனதத்தன் என்ற வணிககுல முதல்வனுக்குப் புதல்வியாய் அவதரித்தார். பிறந்து மொழிபயின்ற பின்னெல் லாம் காதல் சிறந்து சிவனடியே சிந்தித்தார். இல்இகவாப் பருவம் வந்தடைய நாகையில் நீதிபதியின் மகன் பரமதத்தனுக்கு மணம்செய்வித்தார்கள். அடியவரைப் போற்றிய அரும் பணியின் பெருமையால் அதிமதுரக்கனி கண்டார், கணவனும் மற்றையோரும் வியக்கும் பெருநிலையெய்தினர். பெருநிலை பெற்றுங் கற்புநெறி திறம்பாது கணவனைத் தெய்வமெனக் கொண்டார். தொடர்பற்ற காலத்துப் பேய்வடிவம் பெற்றார். ஆலங்காட்டில் ஆண்டவனருள் ஆடல் கண்டு பேரின்பநிலை எய்தினர். இவ்வரலாற்றால் பணியுமாம் என்றும் பெருமை என்பது விளங்குகிறது. எனக்குறிப்பிட்டார்கள்.

25—7—54 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் "நாவரசர் நல்லூர் சேர்தல் என்பது பற்றிப் பேசினர்கள். நாவரசர் கூத்தப் பெருமான் குஞ்சிதபாதங் கும்பிட்டுத் திருஞானசம்பந்தம் பிள்ளையைக் காணும் பெரும் விருப்போடு சீகாழி வழிக்கொண் டார். சம்பந்தரும் நாவரசர் வருகையறிந்து எதிர்கொண்டார். இருவரும் அருட்கடலும் அன்புக்கடலும் எனவும், புண்ணியக் கண்ணிரண்டெனவும் சிவனும், அம்பிகையருளுமெனவும் காட்சியளித்தனர். ஒருவரையொருவர் வணங்கி தோணியப்பர் துணைமலர் போற்றினர். வயது சென்ற நாவரசரை குழந்தை ஞானசம்பந்தர் முறைப்பெயராக அப்பரே என அழைத்ததும் இச்சந்தர்ப்பத்தில்தான். பிரியாவிடைபெற்ற நாவரசர் சத்தி முற்றம் சென்று திருவடி தீட்சை வேண்டிப் பாடினர். அச ரீரியாக நல்லூருக்கு வா! வென்றார் ஆண்டவன். நல்லூர் சென்ற நாவரசர் சென்னிமிசைப் பாதமலர் சூட்டினர் சிவபெரு மான். நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார். நல்லூர் எம்பெருமானர் நல்லவாறே என நாவரசர் வாயாரப் பாடி வாழ்த்தினர். இவரது வாழ்வில் சமயம் விசேடம், நிர்வாணம் என்ற மூவகைத் தீட்சையும் இதுவரையில் பெற் றுள்ளமை அறிந்து இன்புறத்தக்கது. எனப் பேசி முடித் தார்கள்.

# மதிப்புரை

## அறச்சலூர் நாகமலையாண்டவர் குமாரபஞ்சகம்:

இந்நூல் ஈரோடு செங்குந்தர் உயர்நிலைப்பள்ளி தலைமைத் தமிழாசிரியர் வித்துவான், வெ. ரா. தெய்வசிகாமணிக்கவுண்டர் அவர்களால் இயற்றப்பட்டது. கொங்கணுபுரம் ஜமீன்தார் திரு. K. R. நாச்சியப்பக் கவுண்டரவர்களின் பொருளுதவியால் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது. பிரபந்தவகைகளை மறந்து விட்ட இக்காலத்தில், நல்ல நெஞ்சமுடைய பாவலர்பாடிய இப்பஞ்சகம் வஞ்சகமில்லாபக்தர்களுக்குத் திருவருள் நினைப்பை ஊட்டும். நூலாசிரியர் முன்னுரை இந்நூலின் பொருளமைதி முதலியவற்றை நன்கு விளக்குகின்றது. இவர் வேறு பல நூல்களையும் எழுதியுள்ளார். தருமபுர ஆதீனத்தில் வெளியிடப்பட்ட தாயுமானவர் மடல் முதலியவை இவரால் உதவப் பெற்ற பிரதிகளாகும். வேண்டுவோர் இதன் ஆசிரியரிடம் இலவசமாகப் பெறலாம்.

## சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகவெளியீடுகள்:

1. வழிபாட்டிற்குரிய தேவாரத்திரட்டு 2. திருவைந்தெழுத்து. 3. திருநீறும் சிவமணியும். 4, சிவதீக்கை 5. திருவிளக்கு வழிபாடு. என்பவை திருமுறைநெறியை வளர்க்க தோன்றியவை. வடமொழிக் கலப்பின்றி தனித்தமிழில் வழிபாடு முதலியன செய்வோருக்கு இவை பயன்படலாம். இவை கண்ணிற்கும் கருத்திற்கும் ஒளியும் உருவையும் தோற்றும் நிலையில் வெளிவந்துள்ளன. விலை ஒவ்வொன்றும் ஒரு அணு.

இது திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களுடைய பொருளுதவிபெற்று திருவலஞ்சுழி தேவஸ்தானம் நிர்வாக அதிகாரி திரு. S. R. கோவிந்தராசலு அவர்களால் வெளியிடப்பெற்றது.

விநாயகர் அகவலின் ஆசிரியர் அஷ்டாங்கயோக மார்க்கத்தை சுருங்கச்சொல்லி விளங்க வைத்திருக்கின்றார். அப்படிச் செய்வதற்கு அதில் அநேககால அனுபவம் இருந்தாலன்றி எவராலும் இயலாது. இவ்வகவலைப் பாராயணம்செய்து திருவருளைப்பெற்ற புண்ணியர் நந்தமிழ்நாட்டில் பலர் இருந்தனர். இப்போதும் சிலர் இருக்கின்றனர். விடியற்காலையில் எழுந்ததும் பாராயணஞ் செய்தால் சில மாதங்களுக்குள் சிறந்த திருவருள் அனுபவத்தை அடைவது திண்ணம். இந்நூற் பதிப்புக்களிலெல்லாம் முதல் பன்னீரடிகளுக்கும் முடிபு காணப் படவில்லை. ஆருதாரத்தில் அம்புஜம் (தாமரை) உண்டே அன்றி அங்குசம் இல்லை. அங்கும் அது பாயும்போலும். இதன் விலை ஒரு அணு. கிடைக்கும் இடம்–திருவலஞ்சுழி விநாயகர் திருக்கோயில்.

633.

# கோசார பலன்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ முத்து சோதிடர், திருவிடைமருதூர்.

(ஜய-வருஷ ஆவணி-மீ 1-உ முதல் 31-உ முடிய)
(17—8—54 முதல் 16—9—54 முடிய)

**1. மேஷம்:** அசுவதி, பரணி, கார்த்திகை ¼.

மேஷராசி சம்பந்தப்பட்ட 9 பாதங்களும் சுபத்தையே தரும். பரணி 3. 4. கார்த்திகை முதல் பாதங்கள் சம்பந்தப் பட்டவர்களுக்கு வியாதியாலும் சத்துருக்களாலும் உபாதி ஏற்படும். விவசாயிகள் தொல்லைகளை அனுபவிப்பார்கள், மற்ற எல்லோரும் சந்தோஷமடைவார்கள். சனி புதன் நலன் தரும்.

**2. விருஷபம்:** கார்த்திகை ¾ ரோஹிணி, மிருகசீரிஷம் ½.

கார்த்திகை 8 பாதங்களும் வியாதியையும் குடும்பத் தொல்லையையும் தரும். ரோஹிணி நான்கு பாதங்களும் லாபத்தையும் தொழில் மேன்மையையும் தரும். நான்காம் பாதம் மாத்திரம் சதா மனக்குழப்பத்தையே கொடுக்கும். மிருகசீரிஷம் இரண்டு பாதங்களும் மிசிரமாய் நடக்கும். பெரியோர்கள் ஆசியால் துக்கம் நீங்கும். புதன் வியாழன் சுபமாகும்.

**3. மிதுனம்:** மிருகசீரிஷம் ½ திருவாதிரை, புனர்பூசம் ¾.

திருவாதிரை நான்கு பாதங்களும் தெய்வபலத்தால் ஓடிக் கொண்டிருக்கும். கஷ்டங்கள் நீங்கும். தொழில் லாபம் கிடைக்கும். மிருதசிரிஷம் பின்னரையும் புனர்பூசம் மூன்று பாதங்களும் சகிக்க முடியாதபடி ஆபத்துக்களையும் வியாதி சத்துரு பயத்தையும் சொத்து நஷ்டங்களையும் தேவகோபம் பிராம்மணசாபம் முதலிய அஸஹ்யமான கவலைகளையும் தரும். சனி செவ்வாய் நலன்காட்டும்.

4. கடகம்: புனர்பூசம் ¼ பூசம், ஆயில்யம்,

பூசம் நான்கு பாதங்களும் களத்திர புத்திராதிகளால் கஷ்டத்தை அனுபவிக்க நேரும். விவசாயம் நஷ்டமடையும் விவஹாரம் ஏற்படும். அபஜயம்காட்டும் புனர்பூசம் நாலாம் பாதமும் ஆயில்யம் பூராவுமே தெய்வபலத்தை அடைந்து தானும் தன்னைச் சேர்ந்தவர்களையும் காப்பாற்றச் செய்யும் எதிர்பாராத அளவில் பெருத்த தனலாபங்கள் கிடைக்கும். தெய்வபலம் ஓங்கும். புதன் சனி சுபவாரமாகும்.

5. ஸிம்மம்: மகம், பூரம், உத்திரம் ¼.

சிம்மராசி பூராவும் சென்ற மாதம்போலவே இருப்பதோடு விசேஷமான லாபங்களும், வித்யாவிருத்தியும், உத்தியோக பிராப்தியும், விவசாயத்தில் விசேஷ லாபங்களும் விவஹார வெற்றியும், கீர்த்தி பத்திரமும் பெரியோர் அன்பும், ஈசுவர பக்தியும் கொடுத்து சந்தோஷத்தைத் தரும். புதன் வியாழன் சுபவாரமாகும்.

6. கன்னி: உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½.

உத்திரம் மூன்று பாதங்களும் சென்ற மாதம்போலவே இருக்கும். உத்தியோகத்தில் பிரமோஷனும், இல்லற சுகமும், பந்துமித்திர சேர்க்கையும், வியாபார லாபமும் கிடைக்கும். ஹஸ்தம் நான்கு பாதங்களும் சற்று ஆயாசத்தையும், சரீர பீடையும் உண்டுபண்ணி சுகமடையச்செய்யும். உலகில் பிரக்யாதியையும், தெய்வ பலத்தையும், பெரியோர் அன்பையும் தரும். சகலமும் வெற்றியடையும். களத்திர புத்திராதிகளால் தொல்லையும், தொழில் மந்தமும் காட்டும். சித்திரை இரண்டு பாதங்களும், பூரண சுபத்தைதரும். நஷ்டதனம் தானாகவரும். சத்துரு நாசம் ஏற்படும். கடன் நிவர்த்தியாகும். தெய்வபலம் ஓங்கும். சனி புதன் சுபவாரமாகும்.

7. துலாம்: சித்திரை ½, சுவாதி, விசாகம் ¾.

சித்திரை பின்னரை இருபாதங்களும், என்றும் கண்டிராத படி சந்தோஷகரமான சமாசாரங்களை கேட்டு ஆனந்தமடையும். வம்சவிருத்தியாகும், வியாதி நீங்கும் பெரியோர் அரிபும்

தைவபலமும் பிரகாசிக்கும். சுபாதி நான்கு பாதங்களும், சென்ற மாதம் போலவே நடப்பதோடு, சாசுவதமான ஜீவன லாபத்தையும் பூமிதன பிராப்தத்தையும் தரும். குடும்பம் சந்தோஷமடையும். தைவம் முன்நிற்கும். விசாகம் மூன்று பாதங்களும் சரியாகவே இராது. சதாகஷ்ட நஷ்டங்களையே தரும். சனி, செவ்வாய் சுபவாரமாகும்.

8. **விருச்சிகம்:** விசாகம் $\frac{1}{4}$, அனுஷம், கேட்டை.

விசாகம் நான்காம் பாதம் சுபமிராது. அனுசம் நான்கு பாதங்களும் சுபத்தையேதரும் அதிக செலவுகள் மாத்திரம் இருக்கும். கேட்டை நான்கு பாதங்களும், கலியாணத்தையும் இல்லற சுகபோகங்களையும் ஸந்தோஷத்தையும் உண்டுபண்ணும். வியாபாரிகள் லாபமடைவார்கள். தொழிலாளிகள் சந்தோஷமடைவார்கள். வியவசாயிகள் ஆனந்தமடைவார்கள். புதன், சனி சுபவாரமாகும்.

9. **தனுசு:** மூலம், பூராடம், உத்திராடம் $\frac{1}{4}$.

மூலநக்ஷத்திரம் நான்கு பாதங்களும் கஷ்டத்தில் சுகமடையச் செய்யும், சதா ஆலஸ்யமும், குரோதமும் காட்டும். பூராடம் நான்கு பாதங்களும் லாபகரத்தோடு, இடம் மாறல் ஏர்ப்படல் உத்தியோக லாபம், வியாதி சாந்தி, வியவசாய லாபம், பெரியோர் அன்பு முதலிய சுபங்களைத்தரும். உத்திராடம் முதல் பாதம் குடும்பத்தொல்லையால் மனஸ்தாபம் கொடுக்கும் பந்துமித்திராளுடைய விரோதமும் ஏற்படச் செய்யும். வியாபாரிகளுக்கு நஷ்டத்தைத்தரும், தொழிலாளிகளும் சுபமடைவார்கள். சனி, செவ்வாய் சுபமாகும்.

10. **மகரம்:** உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம், அவிட்டம் $\frac{1}{2}$

திருவோணம் நான்கு பாதங்களும், பரம சந்தோஷமடையச்செய்யும். உத்தியோக லாபம், பெரியோர் அன்பு. தைவபலம் பிரகாசித்தல் ஸ்திரவாஸம் ஏற்படல், கிராம பூமிலாபங்கள் கிடைத்தல், வியவகார வெற்றி முதலிய சுபங்களைத்தரும். உத்திராடம் முக்காலும், அவிட்டம் முன்னரையும், பயத்தையும், சோக பலனையும் நஷ்டத்தையும் காட்டும். சனி, செவ்வாய் சுபமாகும்.

**11. கும்பம்: அவிட்டம் $\frac{1}{2}$ சதயம், பூரட்டாதி $\frac{3}{4}$.**

பூரட்டாதி மூன்றுபாதங்களும் சென்றமாதம் போலவே நடப்பதோடு, ஆரோக்கியத்தையும் இல்லற சுகபோகங்களையும், தனவரத்தையும் தரும். அவிட்டம் பின் இருபாதங்களிலும் கலியாணகாரியம் ஏற்படல் அதிக செலவுகள் நஷ்டதன பிராப்தி, தூரத்திலிருந்து அழைப்புக்கடிதம் இவைகளைத் தந்து சந்தோஷமடையச் செய்யும். சதயம் நான்குபாதங்களும் மிசிரமாய் நடக்கும், அதிக சிரமம் இராது. ஞாயிறு, வியாழன் சுபமாகும்.

**12. மீனம்: பூரட்டாதி $\frac{1}{4}$. உத்திரட்டாதி, ரேவதி.**

மீனராசிபலன் பூராவுமே இம்மாதம் சந்தோஷகரமாய் நடக்கும், உத்தியோக லாபம், கீர்த்திபத்திரம் கிடைத்தல் வியாதிசாந்தி, நஷ்டதனவரத்து, தைவபலம் பிரகாசித்தல், வம்சவிருத்தியாகுதல், ஸ்தாவர ஜங்கம சொத்து கிடைத்தல், மனம் சந்தோஷமடைதல், முதலிய சுபங்களே நடக்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

குறிப்பு :- இம்மாதம் உலகத்துக்கு கிரஹங்கள் சுபத்தைத் தருவதானாலும், பயிர்களுக்கும், தான்யங்களுக்கும், ஈதிபாதைகள் உண்டாகி நஷ்டம் உண்டுபண்ணும். முன் எச்சரிக்கையாக கவனத்துடனும் கடவுளிடத்தில் அன்புடனும் நடந்து கொள்ள எல்லாம் சுபமே ஆகும்.

---

## ஜன்மநக்ஷத்திரத் திருநாள்.

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம் பெற்ற சிவ ஸ்தலங்களில் ஆதீனச் சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிகங்களையும் அச்சிட்டு வழங்கிவருதல் போல, இம்மாதத்திலும் 4—8—54 அன்று திருச்செங்காட்டங்குடி கணபதீச்சுவரசுவாமி ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து, தலப்பதிக வெளியீடும் வழங்கப் பெற்றது.

யாத்திரை அநுபந்தம்

## ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின்

# தொண்டைநாட்டுத் தலயாத்திரை

### இலட்சியவாழ்வு :

இன்பமே உயிர்களின் குறிக்கோள். அதிலும் நிலைத்த இன்பம். அளவிட்டுப்பிறருக்குச் சொல்லமுடியாதது. ஆனந்த மளிப்பது. அதனை நித்தியானந்தப் பரம்பொருள் என்பர் பெரியோர்.

### எப்படி அடைவது ?

அம்மெய்ப் பொருள் உயிர்களுக்கு எளிமையாய் - மூர்த்தி தலம் தீர்த்தமாக முறையே அமைந்து அருள் வழங்குகின்றது. தலங்களுக்குச் சென்று தீர்த்தமாடி மூர்த்தியை முறையே வழிபட்டுச் சச்சிதானந்த சொரூபத்தைச் சிறிது சிறிதாக அடையும் முயற்சியே யாத்திரையாகும்.

### முன்னேற்பாடு :

தொண்டைநாட்டுப் பகுதிகளில் யாத்திரை தொடங்க வேண்டும்; மூர்த்தி, தலம், தீர்த்தங்களை முறையே தரிசிக்க வேண்டும் என்பது ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் திருவுள்ளக் குறிப்பு. ஆலய அறநிலைய நிர்வாகங்கள் மிகப் பொறுப்பு வாய்ந்தவை. ஆகவே யாத்திரைக்கு ஒரு காலம் வகுத்துக்கொண்டு செல்லும் நிலைமை ஏற்பட்டது. சிந்தனை யிலுள்ளது செயற்படுங்காலம் குறுகிற்று. 18—7—54 ஞாயிற்றுக்கிழமை யாத்திரை தொடங்குவதற்குரிய நாள் என்று நிச்சயித்தார்கள். ஆதீன ஆலயங்களின் அலுவல் கள் மிகுதியாயின. எனவே இன்று தொடங்கவேண்டிய பயணம் நிறுத்தப்பட்டது.

திங்கட்கிழமை; திருமடத்திற்கு உரிய திருநாள். 19—7—54 அன்று சோமவாரம்; எனவே அன்று இரவு புறப்படத் திட்டமிட்டருளினார்கள். ஆதீனத்து நிர்வாகம் சம்பந்தமான விண்ணப்பங்களில் கையொப்பம் வாங்கிய வண்ணமிருந்தார்கள் காரியஸ்தர்கள். ஆலய நிர்வாகிகளும் அவ்வண்ணமே இருந்தனர். மாலை 6-10 க்குத் தருமையை விட்டு எழுந்தருளுவதாக முடிவுசெய்யப் பெற்றிருந்தது.

## எதிர்பாராத திருவருள்வாய்ப்பு:

திருவருள் துணை செய்யும் குறிப்பு எதிர்பாராதவிதமாகக் கிடைத்தது. திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் வட இந்தியத் தலயாத்திரையை முடித்துவந்தவர்கள், எதிர்பாராத விதமாக அன்று மாலை 5-மணி அளவில் தருமைக்கு எழுந்தருளி, தருமை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுடன் உரையாடினார்கள். யாத்திரை அனுபவங்களின் பேச்சு 5-30 வரை தொடர்ந்தது. வடநாட்டு யாத்திரை முடித்து வந்து பலநாட்களாகியும் அண்மையில்தான் கங்கைக்குடங்கள் துறைசை வந்தடைந்தன என்று சொல்லி உடன் கொண்டு வந்திருந்த தீர்த்தக் குடமொன்றை துறைசை மகாசந்நிதானம் அவர்கள் கொடுத்தார்கள். யாத்திரை தொடங்கும் நேரத்தில் தீர்த்தக்குடம் கிடைத்தது எதிர்பாராத திருவருள் வாய்ப்பாகவே இருந்தது.

## புறப்பாடு:

மாலை 6-மணி. தருமையாதீன முதற்பெருங்குரவர் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞானசம்பந்தர், ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்கை, ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் ஆலயங்களுக்கு அன்பர்களின் கூட்டம் உடன்வர ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளினார்கள். வழிபாடுகளை முடித்துக்கொண்டு ஆதீன

அடியார்களும் நிர்வாகிகளும் வழியனுப்ப ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் தருமையின் எல்லையிலே எழுந்தருளி யிருக்கும் சித்திவிநாயகரை வழிபட்டுக் குறித்தநேரத்தில் சென்னைக்கு எழுந்தருளினார்கள்.

## சென்னையில் :

இங்கு ஆதீன சமயப்பிரசார நிலையம் தமிழொடு சைவம் தழைக்கப் பாடுபடுவதைப் பலரும் அறிவர். இரவுமணி 11-30 க்கு சென்னை தியாகராயநகர் ஊஸ்மான்ரோடு 41-ம் கட்டிடம் 'வேலூர் தேவஸ்தான இறைபணிமன்றக்' கட்டிடத்தை அடைந்தார்கள். பிரசார நிலையத் தலைவராக இருக்கும் வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஆதீனமுறைப்படி ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களை வரவேற்றார்கள்.

**20—7—54 செவ்வாய்க்கிழமை**

## திருவான்மியூர் :

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் காலை 9மணிக்கு தியாகராயநகர் அடையாறு வழியாக இத்தலத்திற்கு எழுந் தருளியானார்கள்.

திருவான்மியூர் சப்தவிடங்க ஸ்தலங்களுள் ஒன்று. கடற்கரையை அடுத்துள்ளது. மிகவும் புராதனமானது. திப்பு சுல்தான் அட்டகாசத்தால் பாதிக்கப்பட்ட கோயில்களுள் இதுவும் ஒன்று என்று சொல்லப்படுகிறது. அதன் நினைவாக இன்றும் இராஜகோபுரம் சிதைந்த நிலையில் இருக்கிறது. சிற்பவேலை மிக்கது. கோவிலின் முன்புறம் தீர்த்தம் இருக் கிறது. தீர்த்தத்தின் பெயர் மணிகர்ணிகை. தலவிருக்ஷம் வன்னி. சுவாமி-மருந்தீசர். அம்மை-திரிபுரசுந்தரி. சுவாமி மேற்குநோக்கியும், அம்மை தெற்குநோக்கியும், தியாகராஜர் கிழக்குநோக்கியும் எழுந்தருளியுள்ளார்கள். கீழக்கோபுர வாயிலுக்கு எதிரே முருகன் எழுந்தருளியுள்ளான். சுவாமி

சுயம்புமூர்த்தி. தலையில் காமதேனுவின் குளம்புபட்டு அழுந்திய வடுதெரிகிறது. காமதேனுவின் பால் வழிந்த இடத்தில் வெண்மையாகக் கோடுகள் தெரிகின்றன. வான் மீகிக்குத் திருநடனம் காட்டியதலம். பௌர்ணமியன்று அந்தக்காட்சி அருளுவதாக ஐதீகம். வான்மீகி, பிரமன் ஆகிய உற்சவமூர்த்திகள் உள்ளன. திருஞானசம்பந்தர் பதிகம் இரண்டும், திருநாவுக்கரசர் பதிகம் ஒன்றும் உள்ளன.

அறநிலைய பரிபாலன இலாகாவுக்குட்பட்ட இக்கோயி லின் வருஷ வருமானம் ரூ. 10000-க்கு உள்பட்டதென்று சொல்கின்றூர்கள்.

அம்பிகைக்கு அபிஷேக ஆராதனை செய்ய ஏற்பாடு செய்யப்பெற்றது.


ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுடன் வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், திரு. S. இராமசாமி நாயுடு, திரு. ஏகாம்பரம் மற்றும் சைவத் தொண்டர்களும் வந்திருந்து வழிபாடாற்றினர்.

வான்மீயூர் இறைவனை வழிபட்டு ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் திருப்போரூருக்குப் புறப்பட்டார்கள்.

## திருப்போரூர் :


காலை மணி 11-30 வான்மியூரிலிருந்து மரப்பாலம் (Lattice Bridge) வழியாக வந்தடைந்தார்கள். போரூர் வெளிநாட்டு யாத்திரீகர்கள் மகாபலிபுரம் சென்றுபார்க்க வசதியாகச் சென்னையிலிருந்து அமைக்கப்பெற்ற தனிவழியில் 20 ஆவது மைலில் அமைந்துள்ளது. சுவாமி சுயம்புமூர்த்தி. கிழக்குப்பார்த்த சந்நிதி. பிரணவதீர்த்தம் தெற்குவாயிலுக் கெதிரே அமைந்திருக்கின்றது. வள்ளி தேவசேனா சமேதராக எழுந்தருளிய சுயம்புமூர்த்தி. புனுகு சட்டம் சாத்தப்பெறு கின்றூர். ஊர்த்துவ வலது திருக்கரத்தில் அக்ஷமாலையும் இடது திருக்கரத்தில் கெண்டியும் வலது கீழ்க்கரம்

திருவான்மியூர்:



ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும், உடன்போந்த அன்பர் கூட்டமும்.

திருப்போரூர்:



முருகனைக்கண்டுளம் உருகிநின்றல்.

அபயமாகவும் இடதுகரம் தொடையில் ஊன்றிய பாவனையிலும் விளங்குகிறது. நான்கு கைகளை உடையது. இம் மூர்த்தியின்மேலே கவசம் போடப்பெற்றிருக்கிறது. பக்தர்களுக்குச் சடாரி சாத்துகின்றார்கள். விஷ்ணு கோவில்களில் நடைபெறும் சம்பிரதாயங்கள் இங்கு நடைபெறுகின்றன. சிற்பவேலைகள் செறிந்த மண்டபங்களும் தூண்களும் இருக்கின்றன. ஸ்ரீ சிதம்பர சுவாமிகள், ஸ்ரீ அருணகிரியார் முதலியோரின் பாடல்களைப்பெற்றது. ஸ்ரீ சிதம்பரசுவாமிகளின் பரம்பரையில் வந்த பன்னிரண்டாவது பட்டத்து சுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ சண்முகசிதம்பர சுவாமிகள் அவர்கள் இப்போது கண்காணித்து வருகிறார்கள். பனைமரத்தடியில் சுவாமி எழுந்தருளி இருந்ததாகவும், சிதம்பரசுவாமிகள் கனவில்கண்டு எடுத்து, திருக்கோயில் எடுப்பித்ததாகவும் வரலாறு. இத்தலத்திற்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் யாத்திரை கோஷ்டியுடன் எழுந்தருளியானார்கள்.

உச்சிக்காலவழிபாடு தொடங்கியநேரம் அது. ஆண்டவன் அருள்வழங்க எதிர்நோக்கியிருந்தது போலவே அமைந்தது அந்தக்காட்சி. (ஏனெனில் இன்னும் சிறிதுகாலந் தாழ்த்திச் சென்றிருந்தால் உச்சிக்காலமாகித் திருக்காப்பிட்டிருக்கலாம்). சந்நிதியடைந்ததும் மெய்ம்மறந்தநிலையில் தரிசனவழிபாடுகள் நடைபெற்றன. உடன்வந்திருந்த திருமுறை ஆசிரியர் சங்கீத பூஷணம், திரு. P சாமிநாதன் அவர்கள், திருப்போரூர் சந்நிதி முறை திருப்புகழ் முதலிய அருட்பாடல்களை மிகவும் மனமுருகப் பாடினார். இவ்விதமாக வழிபாடு நடைபெற்று முடிவடையும் நேரத்தில் சிதம்பரஸ்வாமிகள் மடாலயத் தலைவர்களும், எங்கோ வெளியூர்சென்று அப்பொழுதுதான் வந்தார்கள், உடனே கேள்வியுற்றுத் திருக்கோவிலுக்குவந்து, ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை, சந்நிதியிலேயே சந்தித்து உடனிருந்து வழிபாடாற்றினார்கள். அருட்பரம்பரையில்வந்த அவர்கள் அங்கு அந்நேரத்தில் வந்தது முருகன் உடனிருந்து செய்ததுபோன்ற உள்ளக் கிளர்ச்சியை உண்டாக்கியது. வழிபாடு முடித்துக்கொண்டு 12-30 க்கு அங்கிருந்து புறப்பட்டுத் திரும்பவும் சென்னை அடைந்தோம்.

ஸ்ரீ

## திருத்தணி, முருகன் அருள்விலாசம் :

மாலை 5-மணி அளவில் பூவிருந்தமல்லி திருவள்ளூர் கனகம்மா சத்திரம்* வழியாகத் திருத்தணிக்கு எழுந்தருளினர்கள். சென்னை ராஜ்ய எல்லைவரை நல்ல தார்போட்ட ரஸ்தா. சித்தூர் எல்லையிலிருந்து அவ்வளவு சிறந்ததாக இல்லை. ஆனால் மாலைக்காலமும் பசுமையான வயல்வெளிகளும் மலைக்காட்சியுமாகிய இவைகளினூடு திருத்தணி முருகனருள் எங்களை ஈர்த்ததுபோல உந்தூர்தியும் சென்றது

7 மணியளவில் மலை அடிவாரம் தீர்த்தக்கரையில் காரை நிறுத்திவிட்டுத் தீர்த்ததரிசனம் செய்துகொண்டு மேலே ஏறத்தொடங்கினோம். வழியில் முன்பு புள்ளிருக்குவேளூரில் திருமுறைப்பணியாற்றிய திருமுறையாளர் திரு. வைத்தியநாத தேசிகரவர்கள் இருக்கும் சத்திரத்தில் சுத்திசெய்துகொண்டு புறப்பட்டோம். அங்கிருந்து புறப்படுமுன் சுவாமிபுறப்பாடாகி மலை இறங்கி வந்துகொண்டிருந்தது. ஆடிக்கிருத்திகைக்காக முன்னேற்பாடுகள் மிகவும் நேர்த்தியாக நடைபெற்றுவந்தன. ஆலயக்கோபுரங்கள், திருக்குளம் நடுவிலும் கோவில் (மைய மண்டபம்) முதலியன மின் ஒளி விளக்குகளால் மிகவும் நேர்த்தியாக அலங்கரிக்கப் பெற்றிருக்கின்றன. அன்பர்கள் ஏறுவதற்கு வசதியாக நன்றாகப் பெரிய படிகளாகத் திருப்பணி செய்து நடுநடுவில் மண்டபங்களும் எழுப்பப் பெற்றிருக்கின்றன.

## வலிந்தாட்கொண்ட வள்ளன்மை :

விநாயகர் வழிபாடு முடித்துக்கொண்டு சந்நிதி அடைந்தோம். அர்ச்சனை நடைபெற்றது. சுவாமிக்குச் சாத்த வெண்பட்டு ஒன்று கொடுக்கப்பெற்றது. ஆனால் அங்கு

---

* கனகம்மா சத்திரத்திலிருந்து திருவள்ளூர் வரும் வழியில் சுமார் 3-கல் தொலைவில் தெற்குநோக்கிச் செல்லும் கிளைப்பாதையில் இருக்கிறது திருவாலங்காடு.

சுவாமியின் திருமேனியை அபிஷேககாலங்களில் அன்றி மற்ற நேரங்களில் தொடக்கூடாதென்ற ஆசாரமிருந்துவருகிறது. காலசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை ஆகிய மூன்று காலங்களில் அபிஷேகம். மற்றநேரங்களில் சிவாசாரியார் எவ்வளவு ஆசாரத்துடன் வந்தாலும் திருமேனி தீண்டக்கூடாது என்ற நியமத்தால் சிவாசாரியார் கொடுத்த பட்டைத் திருவடியில் சமர்ப்பித்து எடுத்துத் திருவாசியில் சாத்திவிட்டார். "பெருமான் திருமேனியில் சாத்துவதெற்கென்று எடுத்த பட்டாயிற்றே, அதற்கிடமில்லாமல் இவ்விதம் ஏற்பட்டிருக்கிறதே, திருவருள் இதனை ஏற்றுக்கொள்ள இடம் கொடுக்கவில்லையா? ஆண்டவனே உனக்கென்று அர்ப்பணித்த பட்டாயிற்றே? இதில் குறைபாடு ஏதேனும் உண்டா?" என்பதாக ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருவுளத்தில் கிலேசம் தோன்றியிருக்கவேண்டும். அர்ச்சனை முடிந்தது. "இன்று சாயரட்சை ஆகவில்லை. திருவீதியுலாச்சென்றிருக்கும் உற்சவர் இருப்பிடம் வந்துதான் சாயரட்சைகால அபிஷேகம் ஆகவேண்டும்" என்றார்கள்.

## செவிகள் பன்னிரண்டும் கேட்கவில்லையோ ?

ஆடி முதல்செவ்வாயாயிற்றே "இந்நேரம் வேளூரில் ஸ்ரீ செல்வமுத்துக்குமரனைச் சேவிக்கும் நேரமாயிற்றே" என்று ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவுளத்தில் தோன்றியது போலும். பக்கத்திில்நின்ற ஓதுவார் முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழிலிருந்து அம்புலிப்பருவப் பாடல் ஒன்றைப் பாடினார். வழிபாடு முடித்துக் கொண்டாயிற்று. பட்டு எற்றுக்கொள்ள வில்லையே என்ற சிறு மனக்குறை வெளிப்படுவதுபோல "செவிகள் பன்னிரண்டும் கேட்கவில்லையோ" என்ற தொடர் வரக்கூடிய முத்துக்குமாரசாமி திருவருட்பாவிலிருந்து ஒரு பாடலையும் பாடினார் திரு. வைத்திநாத தேசிகர் அவர்கள். இவ்விதமாக வழிபாட்டை ஓரளவு முடித்துக்கொண்டு தெய்வயானை வள்ளி சந்நிதிகள் தரிசித்துத் திரும்ப சுவாமிசந்நிதி அடைந்தோம். தரிசனநேரம் தவிர மற்றநேரம் சந்நிதி திறந்திராதென ஒருவர் சொன்னார்.

'அதுவுமப்படியா' என்றார்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள், ஆனால் சந்நிதி வந்ததும் வெளியே சென்றிருந்த உற்சவரும் திரும்பவரும் நேரமாகிவிடவே சந்நிதிக் கதவு திறந்தது. இது செய்தியறிவித்து அழைத்துச்சென்றார்கள். அங்கு சென்று 'இதுவும் உன்னருள்' என்றிருக்கும் பொழுதில் உற்சவர் மலையேறிச் சந்நிதி அடைந்தார். எதிர்சேவையாக மூலஸ்தானத்திற்கும் உற்சவருக்குமாகத் தீபாராதனை நடந்தது.

உற்சவர் இருப்பிடம் சேர்ந்தார். அப்பொழுது உடன் வந்த அன்பர் "தரிசனத்துக்கு வரும் மகாசந்நிதானத்தினிடம் முருகன் 'அன்பரே திருவீதியுலாப் போய்வந்து தரிசனம் தருகிறோம். மலையில் சந்நிதியில் இருக்க' என்றருளிச் சென்று திரும்பிவந்து காட்சி நல்கியது போன்றிருக்கிறது" என்றார்.

## அருள் வழங்கியது :

யதாஸ்தானத்திலிருக்கும் உற்சவரைத் தரிசித்து அந்தத் திருமேனியிலாவது ஒரு வெண்பட்டுச் சாத்தித் தரிசித்துச் சென்னைக்குத் திரும்பலாம் என்ற எண்ணத்தோடு சென்றார்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள். அவ்விதமே உற்சவர் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு காட்சியளித்தார். பிரசாதங்கள் வழங்கப்பெற்றன. இந்த நிலையில் அர்ச்சகர் வந்தார். "சாயங்கால அபிஷேகம் நடைபெறப்போகிறது. மகாசந்நிதானத்தின் திருவுளப்படி அளித்த பட்டைத் திருமேனியில் சாத்துகிறேன். சுவாமிகள் அவசியம் வந்து தரிசித்துச் செல்லவேண்டும்" என்று அழைத்தார். இது முருகனே "அன்பனே கவலையுறாதே. உன் அன்புக்காணிக்கையை ஏற்றுக்கொள்கிறோம். வா. தரிசித்துச் செல்லலாம்; அவசரப்படவேண்டாம், காலதரிசனத்துக்குத் தயாராகிவிட்டது. வா" என்றழைப்பது போல இருந்தது. உடம்பெல்லாம் புளகித்தது. கண்களில் ஆனந்தக் கண்ணீர் மல்கியது. "இவ்வளவு எளிமையாக

அன்பர்க்கு அருள்வழங்கும் வள்ளலைத் தவறு நினைத்தோமே! பிழைத்தோம். அவனருள் இருக்க, இவ்விதமான சிறு எண்ணம் எப்படி வந்தது? ஆண்டவனே அடியேன்பிழை பொறுக்கவேண்டும்'' என்ற பிரார்த்தனையோடு சந்நிதி அடைந்தார்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும்.

சுவாமி இரண்டு திருக்கை உடையது. வலதுகையில் சக்தியாயுதமும் இடதுகை தொங்கு ஹஸ்தமாகவும் உள்ள அழகிய காத்திரமான திருமேனி. செங்கல்வராயன் என்று திருநாமம் வழங்கப்பெறுகிறது.

சுவாமிக்கு எண்ணெய் சாத்துவது கிடையாது. தேன், தினைமா, பால், சந்தனம், பன்னீர் முதலியவைகளால் அபிஷேகிக்கப் பெறுகின்றார். அந்தக்காட்சிகளை அருகிற் சென்று தரிசித்தோம். அந்த நேரத்தில் வெளியே காவடி ஒன்று வந்தது. காவடி கொண்டுவந்தவர் ஊனமுள்ளவர். அவரும் அருளுக்க மேலே வந்திருக்கிறார். சந்நிதியில் காவடியை செலுத்திக்கொண்டார், முருகன் அதனையும் ஏற்றுக்கொண்டார், பொதுவாக இங்கு புஷ்பக்காவடிதான் அதிகமாக வருமாம். அவைகளில் இந்தமாதிரி அபிஷேக காலங்களில் வருவதைமாத்திரம் மூலவருக்குச்சாத்தி மற்ற நேரங்களில் வருவனவற்றை உற்சவருக்குச் சாத்திவிடுவது வழக்கம். ஆனால் இந்த அன்பர் காவடி ஏற்றுக்கொள்ளப் பட்டது. அபிஷேகம் பூர்த்தியானதும் காணிக்கையை ஏற்றுக்கொண்டதாக வெண்பட்டுத் திருமேனியில் சாத்தப் பெற்று மாலைகள் சாத்தி அலங்காரம் செய்தார்கள். இந் நிகழ்ச்சி, அப்பர்சுவாமிகளுக்குக் கதவுதிறக்கக் காலந்தாழ்த்த திருவருட்குறிப்பையும், பின் 'வாய்மூருக்கு வா' என வலிந் தழைத்த கருணைக் குறிப்பையும் எண்ணச்செய்தது*. இவ் விதமாகப் பொறுமையைச் சோதித்து அருள்வழங்கிய பெருமானிடம் எவ்விதம் மன்னிப்பு வேண்டுவது? திருவடித்

* திறக்கப்பாடினார் திருநாவுக்கரசர் திருமறைக்காட்டில். கதவு திறக்கவில்லை. பாடல்களின் எண்ணிக்கை ஒன்று இரண்டு மூன்று நான்காகப் பெருகி பத்து என்ற பதிக

646



துணையல்லாது பிழைபொறுக்க வல்லது எது? ஆகவே மறுமுறையும் அர்ச்சனை செய்து வழிபாடு நடத்தப்பெற்றது. இவ்விதமாகத் தரிசனம் முடித்துக்கொண்டு 9.45 க்கு சென்னைக்குத் திரும்பினோம்.

---

முற்றுப்புள்ளிப் பாடலையும் அடைந்துவிட்டது. திருநாவுக்கரசர் திருவருளில் உறுதியான நம்பிக்கை உள்ளவர் அவரருகில் சிவஞானப்பாலுண்ட செம்மல் திருஞான சம்பந்தர் இருக்கின்றார். அடியார்கள் ஆயிரவர் ஆயிரவ ராக அருகில் நின்றிருக்கின்றனர் கதவு திறக்கும் நேரத்தை எதிர்பார்த்து. திருநாவுக்கரசரின் பதிக எண்ணிக்கை பெரும் பாலும் பத்துப்பாடல்களே. இறுதிப் பாடலில் அரக்க னுக்கு அருள் செய்த செயலைக்கூறி முற்றுப்பபிடுவது வழக்கம். ஆனால் 10 வது பாடலில் அப்பரடிகள் முற்றுப்புக் கூறினார் இல்லை. பாடல் பதினொன்று ஆரம்பமாகிறது. "அரக்கனை விரலால் அடர்த்திட்ட நீர் இன்னும் **இரக்க மொன்றிலீர்**" என்ற தொடரமைந்த பாடல் திருநாவுக்கரச ரின் திருவாய்மொழியாக வெளிவருகிறது. கதவு திறக்கிறது.

திறந்த கதவை அடைத்தார் திருஞானசம்பந்தர். கதவு அடைபட்டதில் வியப்புஇல்லை. ஒரு பாடலில் கதவு மூடியது தான் ஒருவருக்கும் புரியாத புதிராக இருந்தது. இரவு திருமடத்தில் தங்கியிருந்த அடியவர்களின் உள்ளத்தில் இது ஒரு பெரிய கேள்வியாக வளர்ந்தது. திருநாவுக்கரசருக்கும் இதுபற்றிய சிந்தனை இல்லாமல் இல்லை. உறங்கினார்; உறக்க மில்லை. கண்கள் மூடியிருந்தன. இறைவன் கனவில் காட்சிதருகிறான். 'அன்பனே! தேனூறும் உன் தீந்தமிழ்ப் பாடல் என்னையும் மறக்கச் செய்தது, 'இரக்கமில்லையா?' என்ற பிறகுதான் என்னையே உணர்ந்தேன். கதவுதிறக்கக் காலதாமதமாயிற்று என்பார்போல 'அன்பனே! திரு அருள் என்றும் உன்பால்உண்டு. வாய்மூருக்கு வா!' என்றழைத்து முன்னர்ப் போகின்றார்; பின்னர் அப்பர் அடிகள் செல்லு கின்றார். திருவாய்மூர் எல்லையில் முன்சென்ற திருஉருவம் மறைகின்றது. இறைவன் வலியவந்தாட்கொள்ளும் வள் ளன்மையை நினைத்து வாகீசர் இறைவனைப்பாடுகின்றார். இக்குறிப்பு "திறக்கப்பாடிய" என்ற தேவாரத்திலும் அமைந் திருப்பதை அறிந்தோர் அறிவர்.

வரும்வழியெல்லாம் அவசரத்தில் பிழை ஏற்பட்டதையும் இந்த அற்புத நிகழ்ச்சியையும் நினைத்து நினைத்து மனம்நிறைந்தமகிழ்ச்சியில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திளைத்தார்கள். இம்மாதிரி திருவருள் வழங்க வழிபாடு கிடைப்பது மனித ஆயுளிலே சில சொற்பசமயங்களில்தான். இதனைப்புரிந்துகொள்ள முற்பிறப்பில் ஓரளவு தவமும் வேண்டும்,

தரிசனத்திற்கு மேலே சென்றதும், முன்மண்டபத்தின் மேலே "சிவ சிவ" நீலரசமணி விளக்கு வைக்கப்பட்டிருக்கிறது. திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் தருமமாகிய இது யாரையும் சிவநாம சிந்தனைக்கு எடுத்துச்செல்வதாக அமைந்து விளங்குகிறது.

## 21—7—54 புதன்கிழமை

## திருக்கழுக்குன்றம் :

காலை 9 மணிக்குப் புறப்பட்டோம். சென்னையிலிருந்து செங்கற்பட்டு வழியாகத் திருக்கழுக்குன்றம், 39 மைல். 10-30 மணிக்கு அடிவாரத்திலுள்ள ஸ்ரீ பக்தவத்சலர் திருக்கோவிலையடைந்தோம். சுவாமிசந்நிதி முன்மண்டபம் மிகப்பெரியது. அகோர வீரபத்திரர் பெரிய திருஉருவத்திலமைந்து விளங்குகிறார். தெற்கு வெளிப் பிரகாரத்தில் மாணிக்கவாசகருக்குத் திருப்பெருந்துறைக் காட்சியை அருளிய ஐதீகத்தில் மேற்கு நோக்கி மாணிக்கவாசகரும் அதற்கெதிரே திருவடி குறிக்கும் பலிபீட மமைந்த தனிக் கோவிலும் இருக்கின்றன. மேற்குப் பிரகாரத்தில் ஷண்முகர்கோவில். இங்கு ஆசௌசங்கள் ஏற்பட்டால் தம்பிரான்பூஜை என்று வழங்கும் குருஸ்வாமி பூஜை மண்ணில் பிடித்துவைத்து பூஜைசெய்த பிறகுதான் அர்ச்சகர்கள் அவரவரும் முறைக்கு கோவிலில் பூஜைக்கு வரவேண்டும் என்பது நியமம். அவ்விதமாக சமீபத்தில் இரண்டுநாள் முன்னதாக நிகழ்ந்திருக்கிறது. அதனடையாள

மாக சண்முகர் சந்நிதி கபோதகவரியில் மண்ணில் சிவலிங்கம் போன்று பிடித்து வைத்திருக்கும் பல உருண்டைகள் வைக்கப்பெற்றிருந்தன. வடமேற்கு மூலையில் திரிபுரசுந்தரி அம்மையார் எழுந்தருளியுள்ளார். சுயம்புமூர்த்தி—திருவடிகளுக்குத்தான் நித்தியப்படியில் அபிஷேக ஆராதனைகள். வாரம் ஒருமுறை திருமுகத்திற்கு சாம்பிராணித் தைலம் சாத்தி பரிவட்டம் மாற்றுவது. பங்குனி உத்திரம், ஆடிப்பூரம், நவராத்திரியில் சரஸ்வதிபூஜை இந்த மூன்று திருநாட்களில் மாத்திரம் அபிஷேகங்கள் உண்டு. அம்பிகை சந்நிதியில் கமலம்போட்டிருக்கும் இடத்தில், பேய், பைசாசக் கோளாறுகள் நீங்கப்பெறுவது இன்றும் நடைபெறும்காட்சி. இந்த சந்நிதி தனி அம்மன்கோவில். ஸ்ரீ பக்தவத்சலரைச் சேர்ந்ததல்ல. இவ்விதமாகத் தரிசனம் முடித்து வெளிவரும் பொழுது அர்ச்சகர் 1952-ல் கிடைத்த இரண்டு சங்குகள் 400 ஆண்டுகளுக்குமுன் கிடைத்த பெரியசங்கம் பிறகு பலகாலங்களிலும் கிடைத்தவை என்று எல்லா சங்கங்களையும் கொண்டுவந்து காட்டினார் அவைகளில் 1952-ல் கிடைத்த சங்குகளுக்கு ஸ்ரீ காசிமடத் ததிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருணந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நன்கொடைமூலம் வெள்ளி கட்டியிருப்பதையும் தெரிவித்தார். இங்குள்ள சங்கு தீர்த்தத்திலிருந்து 12 வருஷத்துக்கு ஒருமுறை சங்கம் ஒன்று கிடைப்பது வழக்கம். சமீபத்தில் ஒரு கெடுவில் சங்கம் வராமல்போகவே 1952-ல் இரண்டு சங்கங்கள் கிடைக்கப் பெற்றதாகச் சொல்லப்படுகிறது. சங்குஉருவாக எடுக்குமுன் குழந்தை சத்தம் போன்ற ஒலி எழும் என்றும் சொல்லப்படுகிறது. அதனை அறிந்து அதற்கு வழிபாடு செய்து எடுத்துவந்து சேர்த்துக் கொள்வது வழக்கமாக இருந்துவருகிறது.

## கழுகு தரிசனம் :

பிறகு மலைமேலுள்ள ஸ்ரீ வேதகிரீஸ்வரர் ஆலயத்தில் கழுகு தரிசனத்துக்கு எழுந்தருளினார்கள். நல்லவெய்யில் மணி 11-15. மேலே கழுகு பூஜைசெய்யும் தேசிகர் வந்தார்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மேலேவருவதற்கும் தேசிகர் கழுகுபூஜை தொடங்குவதற்கும் இரு பெரு வெள்ளைக்கழுகுகளும் வந்து வட்டமிட்டு இறங்குவதற்கும் காலம் ஒற்றுமையாகயிருந்தது.

கழுகுகள் கீழே இறங்கியதும் அவைகளுக்காக அமைக்கப் பெற்ற கிண்ணம்போன்ற குழிகளிலுள்ள தண்ணீரில் மூக்கை அலம்பிவிட்டு, தேசிகர் கொடுத்த சர்க்கரைப் பொங்கலை ஏற்றுக் கொண்டன. பல அன்பர்களும் (பல நாட்டவர்களும்) வந்து தரிசித்துப் பரவசமடைந்தார்கள். படம் பிடித்துக் கொண்டார்கள். இன்னும் கொஞ்சம் மேலே உள்ள ஸ்ரீ வேதகிரீஸ்வரரை அத்தலத் திருமுறைகளை ஓதுவாமூர்த்திகள் பாராயணம்செய்ய ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வழிபட்டார்கள். அங்கிருந்த சிவாசாரியாரும் திருமுறைகளை பயின்றிருக்கிறார்போலும். இது அதிகமாக எங்கும் காணமுடியாதது. சுவாமிக்கு அண்மையில் அழைத்துச் சென்று தீபம்காட்டினார்கள். கர்ப்பகிருக மேற்கு உள் புறத்தில் அங்கு மகாபலிபுரச் சிற்பங்களை ஒத்து, சுவாமிக்குப் பின்புறத்தில் திருமாலுக்குக் கைலைக்காட்சி வழங்கிய திருக்கோலம் - சுவாமியும் அம்மையும் ரிஷபவாகனத்தில் காட்சி வழங்க இருவருக்கும் மத்தியில் திருமால் நின்று தரிசிப்பதாகவும் திருவடியின்கீழ் மார்க்கண்டர் இருந்து தரிசிப்பதாகவும் அமைந்திருக்கின்றன. வடக்குப்புறத்தில் கழுகுகளாகிய இரு பெருந் தவ முனிவர்க்கும் தக்ஷிணாமூர்த்தி யாக எழுந்தருளி உபதேசம் வழங்கும் காட்சியும், தெற்குச் சுவரில் ரிஷபாரூடரும் ஆகிய காட்சிகள் செதுக்கப்பெற்றிருக் கின்றன. அங்குச் சுவரிலுள்ள வெடிப்பு ஒன்றைக்காட்டி இடி பூஜை செய்ததாகவும் இந்திரன் பூஜித்து வழிபட்ட தாகவும் அர்ச்சகர்கள் ஐதிகம் கூறினர். மாணிக்கவாசக ருக்கு குருதரிசனம் வழங்கிய இடம் இதுவே. மேலும் அப்பர் சுவாமிகள் திருப்புகலூரில் திருவடி சேரும்பொழுது அருளிச்செய்த பதிகத்தில் "தேவார்ந்த தேவனை" என்னும் திருப்பாடலில் "கழுக்குன்றத்து உச்சியாய் கடவுளானே" என்றதை நினைவுபடுத்திக்கொண்டு திருவடி சேர்ந்த பெருமை

யும் மிக்கது. அங்கு மலையில் கீழே இறங்கும் படிகளில் கீழ்புறம் குடைகோவில் ஒன்றிருக்கிறது. அது "ஒரு கல் மண்டபம்" என்றுவழங்கப்படுகிறது, "மகேந்திரவர்மன்பாணி 610.640 A.D." என்று Archealogical Notice Board குறிக்கிறது. மலைக்கோவிலில் அம்மையார் இல்லை. இதற்குள்ள சக்திதான் கீழேயுள்ளகோவிலில் உள்ள திரிபுரசுந்தரிஅம்மை. ஆனாலும்தெற்குபிராகாரத்தில்வடக்குநோக்கி 'சொக்கம்மை' என்ற தனிஅம்மன் திருக்கோவில் ஒன்றிருக்கிறது.

இங்குச் சந்நிதிக்கு நுழையும் வாசலுக்குப் பக்கத்தில் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்ததிபர் மாணிக்கவாசகருக்குப் பெருந்துறைக் காட்சி நல்கிய "பிணக்கிலாதபேர் " என்ற குறிப்பமைந்த திருவாசகப்பாட்டினை சலவை க்கல்லில் பொறித்துவைத்திருக்கிறார்கள். இவ்விதமாக, பாடல்பெற்ற தலங்கள்பலவற்றிலும் ஸ்ரீகாசிமடத்தின் நிலையானசிவதருமச் செயல்கள் பல காணக்கிடைப்பதை அறிந்து ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பெருமிதம் கொண்டார்கள்.

இது ஒரு சஞ்சீவி மலை. பக்கத்திலுள்ள குன்றில் நோயாளிகள் வந்து அமர்ந்து நோய் நீக்கம் பெறுவதற்கு வசதிகள் செய்யப்பெற்றிருக்கின்றன. இங்கு மலையிலிருந்து எழும் சஞ்சீவிக்காற்றே மருந்தாகிக் குணமளிக்கிறது. நல்ல உச்சிவேளையாகவே, தரிசனம் முடித்துச் சற்று இளைப்பாற அங்குள்ள மண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அமர்ந்தார்கள். உடனே அவர்களுக்கு அப்பர்பெருமான் சரிதமும், மாணிக்கவாசகர் சரிதமும் நினைவுக்கு வந்தன. இந்த அடியார்களுடைய சிந்தனையில் ஒருவருக்கு முத்தியடையும் தறுவாயில் கழுக்குன்றத்து உச்சியுள்ள கடவுள் காட்சியும், மற்றவருக்குத் திருப்பெருந்துறையில் உபதேசம் வழங்கிய காட்சியும் சிந்தனையில் வந்து அருள் வழங்கிய பெருமையும், திருஞானசம்பந்தப் பெருமான் கண்டு அனுபவித்த மலைக்காட்சிகளும் திருவுளத்திலே தோன்றியிருக்கின்றன. அந்த அருமைகளைச்சிந்தித்துத் திருவுளமுருகிய

சிந்தனையோடு மலையடிவாரம் சேர்ந்தார்கள். 'உச்சியுள்ளார்' என்ற பதத்தின் பலவேறு அரும்பொருள்களும் அவர்கள் சிந்தனைக்குவந்தன.

## மகாபலிபுரம் :

தென்னாட்டின் கலைச்சிறப்பிற்கு ஒரு எடுத்துக்காட்டாய் இலங்குவது மகாபலிபுரம். காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட நரசிம்மவர்மன் (கி. பி. 630-650) காலத்தில் மாமல்லபுரம் சிறந்த துறைமுகமாக இருந்தது. நரசிம்மன் மகாமல்லன் என்னும் தன் பட்டப் பெயரைத் துறைமுகப் பெயராக்கி மாமல்லபுரம் என்று பெயரிட்டான். இது மகாபலிபுரம் என மருவிற்று; இலக்கிய வழக்கில் மல்லை என இடம் பெற்றுள்ளது. மல்லையின் செழிப்பையும் செல்வம் கொழித்த நிலைமையையும் திருமங்கைமன்னன் "கச்சிக் கிடந்தவனூர் கடன்மல்லை" "புலன் கொள் நிதிக்குவையோடு புழைக்கைக் களிற்றினமும், நலன்கொள் நவமணிக்குவையும் நான்றுசிந்து, கலங்கள் இயங்கும் மல்லைக்கடல் மல்லை" என்று பாடியுள்ளார்.

## பல்லவரின் கலையார்வம் :

பல்லவர் கலையார்வம் உள்ளவர்கள். பேசாதகல்லையும் பேசும்படி செய்விக்கும் பேராண்மை படைத்தவர்கள். கலை உணர்ச்சி வளமிகுந்த நாட்டு மக்களுக்கு உண்டாவது. பசி, பிணி, பகைநீங்கி வாழும் மக்கள் சிற்பங்கள் செய்வதிலும் சித்திரங்கள் எழுதுவதிலும் காலங்கழித்தல் இயற்கைதானே. கலைவளர்ச்சி இருக்கும் நாட்டில் கவலை இருந்திருக்க வழி யில்லைதான். மகாபலிபுரத்து மலைகளைச் சிலைகளாக்கிய மாட்சி பல்லவர்களுக்கே உரியது. பல்லவர் பல்லோரது இதயத் திலும் இவ்விதத்தில் இருக்கை பெற்றவர்கள். பல்லவர் கோயில்களில் சிறிதுகூட வெற்றிடம் காணமுடியாது.

## தருமராச மண்டபமும் கொடிக்கால் மண்டபமும்:

மகாபலிபுரத்தில் உள்ள பழமையான கோயில் ஆதி வராகர் கோயிலாகும். இதனை அமைத்தவன் சிம்மவிஷ்ணு (கி. பி. 575—615. கி. பி. 615—630) இதையன்றி மகேந்திர வர்மன் கொடிக்கால் மண்டபமும் தருமராசர் மண்டபமும் இம்மன்னன் காலத்தில் அமைந்தனவாகக் கருதப்படுகின்றன. தருமராசர் மண்டபத்தில் பிர்ம்மா சிவன் விஷ்ணு இவர்கள் எழுந்தருளுதற்குரிய மூன்று உள்ளிடங்கள் உள்ளன. கொடிக்கால் மண்டபம் துர்க்கைக்குரிய கோயில். பெண்கள் வாயிற்காவலாக நின்ற நிலையில் அமைக்கப்பெற்ற சிற்பங்கள் இங்கு வாயிலின்கண் உள்ளன. ஒருகையில் தடியும் மற்றொரு கையில் வில்லும் உள்ளன. கொடிக்கால்மண்டபத் தூண்கள் மிகுந்த வேலைப்பாடுடையன. மகேந்திரவர்மன் பல்லாவரம், சீயமங்கலம், திருவல்லம், திருக்கழுக்குன்றம், மண்டபப் பட்டு, மாமண்டூர், தளவானூர், திருச்சிராப்பள்ளி, சித்தன்ன வாசல் முதலிய இடங்களில் குகைக்கோயில்களை அமைத் தவன்.

## மூன்று மண்டபங்கள்:

சாளுக்கியரின் கலைகளை நன்கு உணரும் சந்தர்ப்பம் வாதாபிவெற்றியில் நரசிம்மவர்மனுக்குக் (630–668) கிடைத் தது. நரசிம்மவர்மன் அமைத்த குகைக்கோயில்கள் - மகிடா சுரமண்டபம் வராகமண்டபம், திரிமூர்த்திமண்டபம் என்பன. வராக அவதாரம், வாமன அவதாரம், கஜலக்ஷ்மி துர்க்கை, இந்த உருவச்சிலைகளும் மகிடாசுர மண்டபச்சுவரில் பாம் பணைப் பள்ளிகொண்ட பெருமாளும் காணப்படுகிறார்கள். இங்குத் துர்க்கை தன் ஊர்தியான சிங்கத்தின்மீது இருந்து மஹிஷாசுரன்மீது அம்புகளைப் பொழிவதும் அவளைச்சுற்றி அவள் படைகளும், அசுரனைச்சுற்றி அவன் படைகளும், காணப்படுகின்றன. மண்டபங்கள் எனப்படுவன இறைவன்

653

எழுந்தருளியிருக்கும் மூலஸ்தானங்களேயாகும். இந்த இடங்களில் சிவலிங்கங்கள் இருந்தனவாம்.

மகிஷாசுரவதத்தைச் சித்திரிக்கும் சிற்பங்களமைந்தது மகிஷாசுரமண்டபம். திரிமூர்த்தி மண்டபம் தென்புறம் திருமாலும் வடபுறம் பிரமனும் நடுவில் சிவனும் அமைக்க எடுத்த மண்டபமாம். நடுவில் உள்ள உள்நாழியில் மாத்திரம் முன்னே லிங்கத்திருமேனியும் பின்னே சோமாஸ்கந்தரும் வேலை செய்யப்பெற்றிருக்கிறது.

தொல்பொருள் ஆராய்ச்சி இலாகா பெயர்ப்பலகை கூறுகிறது: மகிஷாசுரவர்த்தனி மண்டபம் மூன்றுழிகளும் முகமண்டபமும்கொண்ட குடைதளி. சிவனுக்குரியது. திருமால் கிடந்த கோலம் - யமபுரி எனவும் வழங்குவது. 640 - 674.

## பஞ்சபாண்டவர் ரதம்:

குடைந்தெடுத்த கோயில்களைத்தவிர சிறு மலைகளையே கோயில்களாக்கினுன் நரசிம்மன். கற்கோயில்கள் ஐந்து ஓரிடத்தில் அமைந்திருக்கின்றன. ஐந்து கோயில்களும் ஓரிடத்தில் உள்ள காரணம்பற்றியும், இவைதேர்களைப்போல் தோன்றுவதாலும் பஞ்சபாண்டவர் ரதம் என வழங்குவர். இந்தத் தேர்க்கோவில்களின் சிற்பங்கள் வேலைப்பாடுடையன. தெற்கில் இருக்கும் கோயிலைத் தர்மராஜரதம் என்பர் இது சிவன்கோயில். மூன்று அடுக்குகள் பொருந்திய விமானமுடையது இரண்டாம் அடுக்கின் மாடத்தில் சோமாஸ்கந்தர் திருவுருவம் காணப்படுகிறது. பீமசேனன் தேர்:- இக்கோயிலின் மேல்புறம் சுற்றிலும் வழிவிடப் பெற்றுள்ளது. மேலிடம் பொது இடர்போன்ற தோற்றமளிக்கிறது. அருச்சுனன்தேர்:- இதுவும் சிவன்கோயில். விமானம் நான்கு நிலைகளையுடையது. திரௌபதிதேர்:- ஊர்த்தேவதைகளின் கோயிலமைப்பைப் போன்றது. இதில் உள்ள துர்க்கையின் சிலை சிற்பச் செறிவுடையதாகும். கல்யானை, கல்சிங்கம், கல்நந்தி இவை காணத்தக்கவை. சகாதேவன்

தேர்:- இதுவும் தூர்க்கை கோயிலாகும். இந்தக் கோயில் களில் எழுந்தருளிய மூர்த்திகளின் ஊர்திகள் முன்புறம் கல்லில் அமைக்கப்பெற்றுள்ளன. பரமேஸ்வரவர்மன் கி. பி. 670—685. கணேசர் கோவில் ஒன்றை அமைத்தான். இக்கோயிலில் உள்ள இரண்டு வடமொழிச் சுலோகங்கள் சிவனுக்கும் அரசனுக்கும் சிலேடைப்பொருளில் பாடியன வாகும். முற்றுப்பெருத நிலையில் உள்ளவை.

## கதை சொல்லும் கற்பாறை :

குகைக்கோயில்களையும் மலைக்கோயில்களையும் தவிர, பெரும்பாறைகள் சித்திரங்களின்மூலம் சிறந்த கதைகளைச் சொல்கின்றன. கிருஷ்ணன் கோவர்த்தனகிரியைக் குடையாகப்பிடித்து மக்களைக் காப்பாற்றிய புராண வரலாறுகளைக் காட்டும் "கிருஷ்ணமண்டபம்" "மாமல்லன்பாணி" 640-674. அதற்கு முன்னுள்ள மண்டபம் கி. பி. 15-16 நூற்ருண்டில் கட்டப்பெற்றது என்று தொல்பொருள் ஆராய்ச்சி இலாகா அறிக்கை கூறுகிறது.

இதற்கு அருகில் பஞ்சபாண்டவ மண்டபம். 7 அங்கணம். குடைதளி. முற்றுப்பெருதது. 674 - 800 இராஜசிம்ம பல்லவன் பாணி. ஆறு சிங்கம் தாங்கியதாகத் தூண்கள் அமையப்பெற்றிருக்கின்றன.

அர்ஜுனன் தவத்தைக் குறிப்பிடும் நிகழ்ச்சியாகக் கருதப்படும் கங்கைக் காட்சியை முதல் இரண்டு பாறைகளும் அறிவிக்கின்ற முதற்பாடங்களாகும். கங்கைக்கரைக் காட்சியில் ஆறு, அதன்நடுவே நாகர் நீராடல், பிராமணனொருவன் தண்ணீர்க் குடமேந்திக் கரையேறல், ஆற்றில் நீரருந்த மான் ஒன்று வருதல், மற்றொருகரையில் அன்னங்கள் நீராடநிற்றல், மற்றுமொருபக்கத்தில் பக்தர்கள் தவங்கிடத்தல், இதைப் பார்த்து, பூனை ஒன்று பின் கால்களை ஊன்றி முன்கால்களை மேலேதூக்கித் தானும் தவமிருத்தல், அதைக்கண்ட எலிகள்

அச்சமகன்று அன்புடன்பணிதல் இவை கலை உணர்ச்சியைத் தெவிட்டாத இன்சுவையதாக்கித் தெளியவைக்கிறது. மாமல்லன் 640 - 674

அதற்குப் பக்கத்தில் பாறை ஒன்றில் இருகுரங்குகள் வேலைசெய்யப்பெற்றிருக்கின்றன. எட்ட இருந்து நோக்கு வோருக்கு உண்மையில் உயிருள்ள குரங்குகள் உட்கார்ந்து இருப்பதைப்போலத் தோற்றமளிக்கின்றன.

## கலங்கரை விளக்கு :

இராஜசிம்மன் காலத்துப்பாணி — 674 - 800. கி. பி. 1000க்கு முன் சிலகாலம் கலங்கரை விளக்காக அகண்டம் வைத்து எரிக்கப்பட்டது.

ஈஸ்வரன் கோவில் - ஒலக்கண்ணேஸ்வரம் - சிகரம் சிதைந்த கற்றளி. கரிகாற்சோழன், தொண்டைமான், இளந் திரையன் முதலிய சோழமன்னர் காலத்திலும் பின் பல்லவர் காலத்திலும் சிறந்த கடற்றுறைப் பட்டினமாக இருந்தது இந்நகர். நெடுந்தொலைவிலிருந்து காணுதற்குரிய முறையில் பெரிய மண்டபம் ஒன்றினைப் பாறையின் உச்சியில் கட்டி யிருக்கின்றனர். அதனை இக்கலங்கரை விளக்கிற்கெனப் பயன் படுத்தியிருக்கின்றனர் பின்னொரு காலத்தில். அகண்டம் ஒன்றை மண்டபத்தின் உச்சியில்வைத்து எரிக்கச்செய்தனர். இவ்வொளி உதவிகொண்டு கப்பலும் தோணிகளும் துறை தெரிந்து கரைநோக்கி வந்துகொண்டிருந்தன சிலகாலம். இதற்குப் பக்கத்தில் இக்காலப் பாணியில் கலங்கரைவிளக்கு ஸ்தம்பம்கட்டி இப்பொழுதும் வேலைசெய்து வருகிறது.

## நாழிகைகாட்டி :

நாழிகை வட்டில் முதலியவற்றைக்கொண்டு நேரமறிதல் பழையமுறை. கடிகாரம் தோன்றுதற்கு முன்னர் மக்கள் சூரியனுடைய ஒளி உதவியைக்கொண்டு நேரமறிந்தனர்.

ம்காபலிபுரத்து இம்மேல் மண்டபத்தில் ஒரு சக்கிரம் அமைக்கப்பெற்றுள்ளது. சூரியன் ஏற ஏற அதன் ஒளியைக் கொண்டும் நிழலைக்கொண்டும் இந்தச் சக்கிரத்தில் காலத்தை அறிந்து கொள்ளலாம். (Sun Dial).

## கடற்கரைக் கோவில் :

(Shore Temple) கிழக்கிலும் மேற்கிலுமாக இரண்டு விமானங்களுடையது. இராஜசிம்ம பல்லவேஸ்வரம், க்ஷத்திரிய சிகாமணி பல்லவேஸ்வரம் என்று பெயர்பெற்றது— சிவாலயம். மத்தியில் திருமால் சயனத் திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ளார். கிழக்குப்புறமுள்ள உள்நாழியில் சிவலிங்கம் வைக்கப்பெற்றிருக்கிறது. இராஜசிம்மன் 674—800. என்று அறிக்கை கூறுகிறது. இதில் கடல்அலைவந்து தாக்கத் தொடங்கியதைக் கண்ட அரசியலார் முன்பக்கத்தில் அணைபோட்டுக் காப்பாற்ற ஏற்பாடுசெய்து வேலைநடந்து வருகிறது. இதற்குச் சுற்றுத் திருமதில் எடுக்ககற்கள் வேலை செய்து சேர்மானம் காட்டி அடுக்கப் பெற்றிருக்கின்றன. அவைகளின்மேல் சிவாலயத் திருமதில்களில் வைக்கப்பெறும் நந்திகள் ஏராளமாகச் செய்து வைக்கப் பெற்றிருக்கின்றன. குந்து சிம்மத்தின் வாயில் விளக்குமாடம் அமைத்து அதன் உட்புறத்தில் துர்க்கை வேலைசெய்யப் பெற்றிருக்கிறது.

அங்குள்ள பாறைகளையெல்லாம் கோவில்களாகவும் சிற்ப நிலைக்களன்களாகவும் வேலை செய்யப்போடப்பெற்ற பெருந் திட்டம். அறைகுறையாகப் பலவிடங்களிலும் வேலைசெய்து விடப்பட்டிருக்கின்றன. இது ஒரு பெரும் தேசிய கலைப் புனருத்தாரணத் திட்டமாகத் தொடங்கப்பெற்று பின் ஏற்பட்ட குழப்பங்களால் நின்றநிலையில் இருக்கிறது.

இவைகளைப்பார்த்த எந்தத் தமிழனுக்கும் தன் மூதாதையரின் கலையார்வமும், சமாதான காலத்தில் சோம்பலின்றி நாட்டின் கலை உயர்வுக்குப் பாடுபடப்போட்ட பெருந் திட்டங்களும், அக்காலத்தில் கலைஞர்களும் தங்களின் கலைத்திறனைக் கலைக்கேயற்பணித்தமேம்பாடும், மக்களின் ஆர்வமான ஊக்க

உணர்வும், அரசர்களின் ஆக்கவேலைத் திட்டங்களும் படம் பிடித்ததுபோல அறிவில்காட்சியளித்து பெருமிதம்கொள்ளச் செய்யும். இந்தப் பெருமையுணர்ச்சியோடு எல்லாவற்றையும் சுற்றிப்பார்த்துக்கொண்டு சென்னையடைந்தோம்.

## திருவொற்றியூர் :

22—7—54 வியாழக்கிழமை. சென்னை பொன்னேரி ரஸ்தாவில் சென்னையிலிருந்து வடக்கே 5 மைல் தொலைவில் இருக்கிறது திருவொற்றியூர். சப்த விடங்க ஸ்தலங்களுள்* ஒன்று. சுவாமி ஸ்ரீ மாணிக்கத்தியாகராஜர், ஆதிபுரீஸ்வரர். அம்மையார் ஸ்ரீ வடிவுடையம்மை, திரிபுரசுந்தரி. ஒற்றியூரார் படம்பக்கநாதர் ஆலயம் கிழக்குப்பார்த்த சந்நிதி. அம்மன் தெற்கு நோக்கியது. பிரமன் பூசித்தது. சுந்தரர் பூத்தொண்டு செய்திருந்த சங்கிலியை மணந்த இடம். இந்நிகழ்ச்சியை அடியொற்றி மகிழடிசேவை என்னும் விழா மாசி மாதத்தில் பிரபலமாக நடத்தப்படுகிறது.

தொண்டைநாட்டுத் தலங்களைத் தரிசித்துவவந்த சுந்தரர் இங்குத் தரிசனத்துக்கு வந்ததும் பெருமானுக்குப் புஷ்பத் தொண்டு செய்துவந்த சங்கிலியாரைக்கண்டு காதலுற்றுத் தமக்கு மணம்செய்து கொடுக்கவேண்டுமென்று பெருமானிடம் பிரார்த்திக்கவும், பெருமான் சங்கிலியாரின் கனவில் தோன்றி சுந்தரர் பெருமையுரைத்து அவரை மணத்தால் அணைவாயாக என்று அருளிச் செய்தார். அவ்விதமே ஒப்புக்கொண்டு நாச்சியார் சம்மதம் தெரிவித்துச் சுந்தரர் தம்மைவிட்டுநீங்காது இங்கேயே இருக்கவேண்டுமென்ற நிபந்தனையும் விதித்தார். அதற்கு ஒத்துக்கொண்டபோதிலும், திருவாரூரில் நடைபெறும் ஒவ்வொரு பங்குனிஉத்திரத் திருவிழாவினையும் தவறாது காணவேண்டுமென்ற பெருவிருப்

* சப்தவிடங்கஸ்தலங்கள் என்ற இவை தொண்டைநாட்டில் உள்ளவை. திருவாரூரை ஒட்டி எழுந்தவையல்ல.

பத்தால் மனமில்லாமல் "பெருமானே தாம் மகிழடியில் வீற்றிருந்தருளவேண்டும். நான் சங்கிலிக்கு உறுதிகூறும் பொழுதளவு இருந்தால் போதும். இந்த உதவியைச் செய்தருளவேண்டும். எவ்வாறாயினும் சங்கிலியை அடைய உதவவேண்டு"மென்று பிரார்த்தித்தார். பெருமான் இந்தச் சூதையும் சங்கிலிக்கு வெளிப்படுத்தி "மகிழடியில் உறுதி கூறும்படி கேள்" என்று அருளிச் செய்தார். இதுவும் அவன் திருவிளையாடலில் ஒன்று. இதனைச் சங்கிலியார் மிகவும் விநயமாகச் சுந்தரரிடம் "நம்முடைய நட்புக்காகப் பெருமான் சந்நிதியில்தான் சத்தியம் செய்துகொடுக்கவேண்டு மென்பதில்லை. சிறு விஷயத்துக்காகப் பெருமான் சந்நிதியில் சத்தியம் செய்யவேண்டாம். தல விருட்சமாகிய மகிழடியில் செய்து கொடுத்தாலே போதும்" என்று கேட்டுக்கொண்டார். சுந்தரர் திகைத்தார். மறுத்தால் உள்ளது வெளிப்பட்டுவிடுமே என அஞ்சி அவ்விதமே செய்யவும் ஒப்புக்கொண்டார்.

அதன்படி சபதம் செய்துகொடுத்து சங்கிலியாரை மணம்செய்து கொண்டு அங்குறையும் நாளில் பங்குனி உத்திரம் அண்மையில் வருவதறிந்து எவ்வாறேனும் ஆரூர் செல்லக்கருதித் திருவொற்றியூரின் எல்லையை நீங்கியதும் பெருமான் சந்நிதியில் செய்த சபதம் பொய்த்ததால் சுந்தரருடைய கண்கள் ஒளியிழந்தன.

கலியநாயனார் திருவிளக்குத் தொண்டு செய்துவந்த தலம். திருத்தொண்டு ஒருநாள் தடைப்பட்டது. எங்கும் எண்ணெய் கிடைக்கவில்லை. நாயனார் வேறொருவழியும் தெரியாமல் தன்னுடைய குருதியை விட்டே திருவிளக்கிட உறுதிகொண்டு உடைவாளை எடுத்துக் கழுத்தில் வைத்து அரியும் சமயம் அடியாருடைய உறுதிக்கு மெச்சி அருள் பாலித்தார் இறைவன்.

இறைவன் திருமேனி சுயம்பு. தீண்டாத்திருமேனி. புற்றிடங்கொண்டவர். புனுகு சாத்துவதுதான் வழக்கமாக இருந்து வருகிறது. படம்பக்கநாதர் என்பதற்கிணங்க இப்பொழுதும் அடிக்கடி பாம்புகள் அங்குக் காணப்படுவ

தாகச் சொல்லப்படுகிறது. சுவாமிக்கு ஆகமபூஜையும் அம்பிகைக்கு வைதிகமுறையில் மலையாளத்து நம்பூதிரியார் பூஜையும் நடைபெறுகின்றன.

இங்குக் கோவிலுக்குக் கிழக்கே கடற்கரையில் பட்டினத்தாரின் சமாதி இருக்கிறது. இம்மாதிரி பல பெரியார்களும் அடங்கிய சமாதிகள் பல இருக்கின்றன.

மாலை 7 மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் இங்கு வழிபாடாற்றிவிட்டு மயிலாப்பூர் தரிசனத்திற்கு எழுந்தருளினார்கள்.

## மயிலாப்பூர் :

அம்மை மயில் உருக்கொண்டு பெருமானை அடைய வழிபட்ட இடமாகலின் மயிலாப்பூர் என்று வழங்குவதாயிற்று. சுவாமியின் திருநாமம் ஸ்ரீகபாலீஸ்வரர். அம்மையார் ஸ்ரீ கற்பகாம்பாள். சந்நிதியில் திருஞானசம்பந்தர் ஆலயம் இருக்கிறது. சுவாமி சந்நிதி மேற்குப் பார்த்தது. அம்மையார் தெற்குநோக்கி எழுந்தருளியுள்ளார். அம்மை மயிலாக வழிபட்ட ஐதிகம் வடக்குப் பிரகாரத்தில் இருக்கிறது. சுவாமிக்குப்பக்கத்தில் மயிலுருவில் அம்மை வழிபடுவது அப்படியே காட்டப்பட்டிருக்கிறது. தெற்குப் பிராகாரத்தில் ஷண்முகர் கோவில் இருக்கிறது.

திருஞானசம்பந்தருக்குத் திருமணம் செய்துகொடுக்க வேண்டுமென்றே வளர்த்துவரப்பெற்ற செட்டிப்பெண் அரவம் தீண்டி இறந்துவிட்டது. ஆனால் திருஞானசம்பந்தப் பெருமானுக் கென்றிருந்ததை அப்பெருமானுக்கே கொடுத்துவிடவேண்டுமென்ற உறுதியோடு பெற்றோர்களும் அதன் எலும்புகளை சேகரித்து வைத்திருந்தனர். மயிலாப்பூருக்கு திருஞானசம்பந்தப்பெருமான் தரிசனத்துக்கு எழுந்தருளினர். அதனை அறிந்து அப்பெற்றோர்கள் அவ்வெலும்புகள் அடங்கிய பாத்திரத்தை நாயனார் திருமுன்வைத்து தாம் அருமையாக அப்பெருமானுக்கே என்று அப்பெண்ணை

வைத்திருந்த செய்தியை அறிவித்து ஏற்றருளவேண்டுமென்று இறைஞ்சினர். அந்த எலும்புகளை சந்நிதிக்குக் கொண்டு வரச்செய்து "மட்டிட்ட பூங்கொன்றை......" என்னும பதிகம் அருளிச்செய்யவே, அப்பெண்ணும் முன்னையினும் அதிக அழகுள்ளவளாக உயிர்பெற்றெழுந்தாள். தாம் உயிர் மீட்டுக்கொடுத்த அப்பெண்ணைத் தாமே மணப்பது தகாது என்பதை எடுத்துச்சொல்லி பெருமான் பணியில் ஈடுபடுத்தினர்.

இதில் உள்ள உள்பொருள் ஒன்றை ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானமவர்கள் அடிக்கடி சிந்தித்து மகிழ்வதுண்டு.

தன் படைப்பில்வந்த அழகுமிக்க பெண்களைக்கண்டு காமுறுகிறுன் பிரமன், தான்படைத்த பொருளிடமே காமுறுகிறுன் அவன். அவனே மிக மிகத் தொண்டு கிழவன். இது ஒரு நிகழ்ச்சி.


மற்ருென்று: கட்டிளம்காளைப் பருவமுள்ள திருஞான சம்பந்தர் பதிகம் அருளுதலும் பெண்ணில் நல்லாள் ஒருத்தி பூம்பாவை. எலும்புக் குடத்திலிருந்து வெளிப்படுகிருள். இயற்கை எழில்கள் முழுதும் நிரம்பப்பெற்ற பருவமங்கையாகக் காட்சி தருகிருள். பிரமன் படைப்பில் உள்ளதைவிட அழகு மிக்கவளாக இருக்கிருள். திருஞானசம்பந்தர் காதல் குறிப்போடு பார்க்கவில்லை அப்பெண்ணை. ஆனல் அங்கே பெருமானின் கருணையின் வடிவை-கருணையின் வெள்ளத்தை ஆயிரமாயிரம் கண்களால் கண்டு மகிழ்கிருர்.

அடியார்களல்லாதவர்கள் உலகியல் பொருள்களில் உலகியல் இன்பத்திற்குள்ளதைக்காண்பதையும், அடியார்கள் அவைகளிலே பெருமானின் கருணைத்திறத்தைக் காண்பதையும் இவ்வரலாற்றின் மூலமாக ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அடிக்கடி சிந்தித்து மகிழ்வதுண்டு. அந்த நினைவு இங்கு வந்ததும் உடன்வந்த எல்லோருடைய சிந்தனைக்கும் வந்தது.

திருக்கச்சியேகம்பம்



யாவரும் வணங்கும் மாவடிநீழல்



ஒருமாவில்பெருமான்

எண்ணிலாண் டெய்தும் வேதாப்
படைத்தவள் எழிலின் வெள்ளம்
நண்ணுநான் முகத்தால் கண்டான்
அவளினும் நல்லாள் தன்பால்
புண்ணியப் பதினு ருண்டு
பேர்பெறும் புகலி வேந்தர்
கண்ணுதல் கருணை வெள்ளம்
ஆயிரம் முகத்தால் கண்டார்.

—பெரியபுராணம்.

மயிலாப்பூர்வழிபாட்டுக்கு இரவு சுமார் 8 மணியளவுக்கு வந்துசேர்ந்தோம்.

ஸ்ரீ காசிமடத்ததிபர் ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகளின் ஆணைவழி இத்திருக்கோவிலில் பூம்பாவை அற்புத நிகழ்ச்சி குறிக்கும் பதிகக் கல்வெட்டு சலவைக்கல்லில் பொறித்து வைத்திருப்பதும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களிடம் காட்டப்பெற்றது. இவ்விதமாக சிவப்பணியாகவும் அதன்மூலமாக மக்கள் கோவிலுக்கு வழிபாட்டுக்கு வருங்காலத்தில் பதிகத்தைப் படித்துப் பயன்பெறச் செய்யும் புண்ணிய கைங்கரியமாகவும் ஸ்ரீகாசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் செய்துவருவதைக்கண்டு மகிழ்ந்தார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் வழிபாடுகளை முடித்துக் கொண்டு கோடம்பாக்கம் ஸ்ரீ வடபழனியாண்டவர் தரிசனத்திற்கு எழுந்தருளினார்கள்.

## வடபழனி :

கோடம்பாக்கம் கோவிலை அடையும்பொழுது 9-30 மணி இருக்கும். அந்தக்கோயில் நிர்வாக தர்மகர்த்தா உடனிருந்து வழிபாடுசெய்து வைத்தார். இது சென்னையில் பிரபலமாக உள்ள முருகன் தலம். பழனித் தலத்தைப் போலவே இங்கும் ஆண்டவருக்கு அபிஷேக ஆராதனைகள் நடத்தப்படுகின்றன.

## 23—7—54 வெள்ளிக்கிழமை

### காஞ்சிபுரம்

தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனம் கூடல் முதுகுன்றம்—நெல்லைகிளர்
காஞ்சிகழுக் குன்றம்மறைக் காடுஅருணை காளத்தி
வாஞ்சியமென் முத்தி வரும்.

என்பது குருஞானசம்பந்தர் அருள்வாக்கு.

புஷ்பேஷு ஜாதி, புருஷேஷு விஷ்ணு, நகரேஷு காஞ்சி, என்பதாக சிவநகரங்களில் மிகவும் புராதனமானதும் மிகச் சிறந்ததுமான பெருந்தலம் காஞ்சி.

### அம்பிகை ஒருநாள்.....

வெள்ளிமலையில் வீற்றிருக்கின்றான் இறைவன். அம்பிகை தன் ஆராதகாதலை வெளியிடுகின்றாள்; இறைவனே ஆகம முறைப்படி உன்னைப் பூசைசெய்யவேண்டும் என்று. தலையசைக்கின்றான் தற்பரன். 'அம்மையே! தொண்டைநாட்டுக் காஞ்சி உனக்கேற்ற நகரம்; சென்று மகிழ்ச்சியோடு மனவிருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வாயாக' என்று கூறுகின்றான். அம்பிகை புறப்படுகின்றாள். காஞ்சி வருகின்றாள். கம்பைநதியில் நீராடி மணலையே இலிங்கமாகப்பிடித்து ஆகம விதிப்படி அர்ச்சிக்கின்றாள்.

"கரந்த ரும்பயன் இதுவென உணர்ந்து கம்பம் மேவிய
உம்பர் நாயகர்பால்
நிரந்த காதல்செய் உள்ளத்த ளாகிநீடு நன்மைகள்
யாவையும் பெருக
வரந்த ரும்பொரு ளாம்மலை வல்லி மாறி லாவகை
மலர்ந்த பேரன்பால்
சிரம்ப ணிந்தெழு பூசைநாள் தோறும் திருவு
ளங்கொளப் பெருகிய தன்றே"

இவ்வாறாக, இறைவன் அன்புப்பெருக்கை கம்பையில் வெள்ளமாக்கிக் காட்டுகின்றான், வெள்ளம் விரைகின்றது.

பூசைநடுவிலே வெள்ளம்விரைந்து வருதலைக்கண்ட அம்பிகை மணல் இலிங்கத்தை மார்போடு அணைக்கின்றாள். வளைத் தழும்பும்முலைத்தழும்பும் இலிங்கத்திலேபதிகின்றன. அன்பை உகந்த ஆண்டவனிடம் அம்மையார், பூசனைமுடித்து அவனருளால் முப்பத்திரண்டறங்கள் இயற்றிக் காஞ்சியிலே இருக்க இசையவேண்டும் என்றிறைஞ்சுகின்றாள். இசைகின் றான் இறைவன். இருநாழி நெல்லைக்கொண்டு இகபரங்களைக் காப்பாயாக என்று இறைவன்கூற அம்பிகை காஞ்சியில் காமக்கோட்டத்திலே இராஜராஜேஸ்வரியாக எழுந்தருளி யிருந்து இவ்வறங்களை இயற்றுவாளாயினள்.

இது சேக்கிழார் காஞ்சியைப்பற்றிச் சிறக்கக்கூறும் பகுதி.

## இடக்கண் பெற்றார்?

திருவொற்றியூரில் சங்கிலியாருக்குச் செய்துகொடுத்த சபதத்தைமீறிய சுந்தரர் ஊரின் எல்லையைக் கடந்தபொழுது இருகண்களின் ஒளியை இழந்தார். இறைவன் நண்பரிடத்தும் நடுநிலைமை தவறாதவன் அல்லவா? தவறு செய்தவர் தண்டிக் கப்பட்டார். கண்ணொளியிழந்த ஆளுடைய நம்பிகள் பல தலங்களுக்கும்சென்று கண்ணொளி வேண்டிப் பாடுகிறார். கிடைக்கவில்லை. திருவெண்பாக்கத்தில் "கோயிலுள் இருக் கின்றாயா இறைவனே!' என்று சுந்தரர் கேட்கும் பகுதிகள் பக்தியின் பெருக்கத்தோடு இரக்கத்தை இனிது எடுத்துக் காட்டுவன. "பிழையுளன பொறுத்திடுவர் என்று அடியேன் பிழைத்தக்கால் பழியதனைப்பாராதே படலமென்கண் மறைப் பித்தாய் குழைவிரவு வடிகாதா கோயிலுள்ாயோ என்ன உழையுடையான் உள்ளிருந்தே உளோம் போகீர் என்றானே" "பொன்னவிலும் கொன்றையினாய் போய்மகிழ்க்கீழ் இரு வென்று சொன்ன எனைக்காணமே சூளுறவு மகிழ்க்கீழே என்னவல்ல பெருமானே, இங்கிருந்தாயோ என்ன ஒன்ன லரைக் கண்டாற்போல் உளோம்போகீர் என்றானே" என்று இவ்வாறு தனது நட்புரிமையை வெளிப்படுத்தி பதிகம்

பாடியும் இறைவன் கண்ணொளிதராமல் போகச்செய்கிறுன் பல தலங்களிலும். காஞ்சியை அடைகிறுர் சுந்தரர். அடியவர்கள் ஆளுடையநம்பிகளை அழைத்துச்செல்கிறுர்கள். இம்முறை சுந்தரர் நேரே சுவாமிசந்நிதி அடையவில்லை. காமக்கோட்டம்சென்று அம்பிகையை வழிபடுகிறுர். பின் சுவாமி சந்நிதி செல்கிறுர். பதிகம் பாடுகிறுர். இடதுகண் ஒளி பெறுகிறது.

இந்த நிகழ்ச்சி ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் சிந்தனையில் இடம்பெற்றது: தொண்டைநாட்டுத் தலங்களைத் தரிசிக்கவந்த சுந்தரர் திருவொற்றியூர் செல்லுமுன்பாகவும் காஞ்சிக்கு வந்திருக்கிறுர். நேரே ஏகம்பரைத் தரிசித்துப் பின் காமக்கோட்டம் வழிபடவருகிறுர். அப்பொழுது அவர் அருள் வரம் வேண்டக்கூடிய நிலையில்வரவில்லை. வழிபடவே வந்தார். சுந்தரர் தோழர் என்ற நிலையில் வழிபாட்டுக்கு எங்குசென்ருலும் நேரே பெருமான் இருக்குமிடம் சென்றுதான் வழிபடுவது வழக்கம். அவர் வாய்மொழியாகவே,

திருவுமெய்ப் பொருளுஞ் செல்வமு மெனக்குன்
சீருடைக் கழல்களென் றெண்ணி
ஒருவரை மதியா துருமைகள் செய்து
மூடியும் உறைப்பனுய்த் திரிவேன்

—வட திருமுல்லைவாயில் பதிகம்.

என்றருளுகிறுர்.

திருவொற்றியூர் நிகழ்ச்சிக்குப் பிறகும் தன் வழக்கப்படியே பலதலங்களுக்கும் சென்று பெருமானை வேண்டுகிறுர். அருள் கிடைக்கவில்லை. சில இடங்களில் வாளா இருந்தும், ஒரு இடத்தில் வெறுப்புத்தோன்ற உளோம் போகீர் என்றும், அதிலும் சற்று கருணைகாட்டுங் குறிப்பால் கோல்கொடுத்ததோடும் அருள் வழங்குகிறுர் இறைவன். தன்னுடைய ஊனத்தினுல் மெலிவுற்ற சுந்தரர் அதற்குப் பரிகாரம்தேட வழிதேடுகிறுர் இத்தலத்தில் (காஞ்சியில்). அம்மை அறம் வளர்க்கும் தாயாக கருணைபாலிக்கும் இடம்

அல்லவா ? அத்தோடு தாயின் இளகிய திருவுள்ளம்தானே மக்கள் துன்பத்தை எளிதில் உணரும். அதற்கிணங்க முன்னே காமக்கோட்டம்சென்று வணங்கி அம்மையார் அருள்பெற்று ஏகம்பரிடம் சென்று இறைஞ்சினர். அம்மையின் திருவருளாகப் பரிணமித்தது ஆண்டவன் திருவருள். இரண்டும் கலந்துவந்த நிலையில் இடக்கண் அருளப்பெற்ருர் போலும் என்றது அச்சிந்தனே.

மேலும் காஞ்சியில் உள்ள மக்கள் அடியார்களுக்கு வரவேற்பளிப்பதிலும் அவரவரும் விரும்பி ஏற்றுக் கொள்ளும்படி செய்வதில் வல்லவர்கள். சுந்தரருக்கு இராஜாங்க வரவேற்பும், திருஞானசம்பந்தருக்கு குழந்தைகளுக் களிக்கும் குதூகல வரவேற்பும் அப்பரடிகளுக்குத் தொண்டில் ஈடுபட்ட அடியாரை வரவேற்கும் நிலையில் வரவேற்பும் அளித்ததாகச் சேக்கிழார் கூறுவர். திருஞானசம்பந்தரை **திருமகனர்** என்று குறிப்பிடும் இடங்களில் காஞ்சிபுரம் ஒன்று.

**இலக்கியமேற்கோள்களில் :**

பூண்டாங்கு கொங்கை பொரவே குழைபொருப்பும்
தூண்டாத தெய்வச் சுடர்விளக்கும் — நாண்டர்ங்கு
வண்மையாற் சான்ற வருங்காஞ்சி வண்பதியும்
உண்மையா லுண்டிவ் வுலகு.

மலிதேரான் கச்சியு மாகடலுந் தம்முள்
ஒலியும் பெருமையு மொக்கும் — மலிதேரான்
கச்சி படுவ கடல்படா கச்சி
கடல்படுவ வெல்லாம் படும்.

ஏரி யிரண்டுஞ் சிறகா வெயில்வயிருக்
காருடைய பீலி கடிகாவாச் — சீரிய
அத்தியூர் வாயா வணிமயிலே போன்றதே
பொற்றேரான் கச்சிப் பொலிவு.

—பெருஞ்சித்திரனர்

666



வையக மெல்லாங் கழனியா வையகத்துச்
செய்யகமே நாற்றிசையின் றேயங்கள் செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு வான்கரும்பின்
சாறேயந் நாட்டுத் தலையூர்கள் சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாங் கச்சியுட்
டானேற்ற மான சருக்கரை மாமணியே
ஆனேற்றன் கச்சி யகம்.

புரவுதரு குடியாகிப் புயல்வண்ணன்
விரும்பியதூஉம் பொழில்சூழ் காஞ்சி
கரியசுடர் வீதிதொறு முலாப்போந்து
கவர்வதூஉங் கலைசூழ் காஞ்சி
நிரைவளையிவ் வுலகுய்ய நின்றுதவஞ்
செய்வதூஉ நிழல்சூழ் காஞ்சி
சுரமகளிர் பாடுவதூஉம் பயில்வதூஉம்
சொன்மாலை தொடுத்த காஞ்சி.

முலைகலிங்க மூரி நிலமா மகட்கு
மலைபரவை மாரிமென் கூந்தல் — குலநதி
தண்ணாரங் காஞ்சி தகைசான் முகமவட்குக்
கண்ணவா னேறுயர்த்த கோ.

அப்பா குமரகோட் டக்கீரை செவ்விலிமேட்
டுப்பாகற் காய்பருத் திக்குளநீர் — செப்புவா
சற்காற்றுக் கம்பத் தடியிற் றவங்கருமா
றிப்பாய்ச்சல் யார்க்கு மினிது.

—காளமேகப்புலவர்.

என்பனவும் சிந்தனையில் கலந்து உயர்ந்தவற்றில் சில.

## காஞ்சியை அடைந்தோம்:

பெங்களூர் செல்லும் பெருவழியில் பூவிருந்தமல்லி ஸ்ரீபெரும்பூதூர் வழியாகக் காஞ்சி வந்தடைந்தோம்.

காஞ்சிக்குப் போகிறோம் என்றதுமே ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களின் சிந்தனை காஞ்சிப் புராணப் பாடல் களில் சென்றது.

சிவஞானமுனிவர் காஞ்சிப் புராணத்தில் தேவர்கள் பிரும்மசிருஷ்டியிலுள்ள எல்லாத்தலங்களையும் ஓர்தட்டிலும் காஞ்சியை ஓர் தட்டிலுமிட இத்தட்டுத் தாழ்ந்திருத்தலைக் கண்டதாக இதன்பெருமை உணர்த்தியிருப்பதைத் திருவுளச் சிந்தனைக்கு கொண்டுவந்தார்கள். பெரியபுராணத்தில் காஞ்சியைச் சிறப்பித்துக்கூறும் பகுதிகளும் சிந்தனைக்கு வந்தன.

காஞ்சிபுரம் அம்பிகை முப்பத்திரண்டு அறம் வளர்த்த இடம். அம்பிகை இறைவனை மணலைக் குவித்துவைத்துப் பூசித்தபெருமையுடையது. தொண்டை நாட்டுத் தலங்களில் சீரும் சிறப்புமுடைய இத்தலத்தை அறியாதார் இரார். தொண்டைநாட்டின் பெருமைமையைச் சேக்கிழார் திருக் குறிப்புத்தொண்டர் வரலாற்றின்முன் பகுதியில் விரிவாகப் பாடியருளுவர்.

'அம்மை அருள்புரிந்த சிறப்பால் உலகில் புகழுடைகிறது தொண்டைநாடு' எனக் காஞ்சிபுரத்தால் தொண்டை நாட்டிற்கே ஒருதனிப்பெருமை உண்டாகிறது என்றும் கூறுகிறார். மேலும், கண்ணப்பர் முத்தியடைந்த தலமாகிய காளத்தியும், கழுகுகள் பூசனைபுரிந்த கழுக்குன்றமும், ஆளுடைய நம்பிகளின் இரண்டாவது மனைவியார் சங்கிலியாரின் அவதாரத் தலமாகிய திருவொற்றியூரும் இந்நாட்டில் உள்ளதல்லவா?

வழியில் ஸ்ரீபெரும்பூதூர் வந்ததும் உடன்வந்த ஸ்ரீ ராமசாமிநாயுடு அவர்கள் பாஷ்யகாரரான ஸ்ரீ ராமானுஜர் பெருமையையும், அவர் திருவவதாரம்செய்த தலம் இதுவென்பதையும், இங்கு அவ்வடியார் ஜீவியதசையிலேயே தனக்கென த் திருமாளிகை ஒன்று (திருக்கோவில்) அமைத்துக் கொண்டதையும், அடியார் திருக்கோவிலுக்குப் பின் பெருமாள் எழுந்தருளியிருக்கும் பெருமையையும், இதனால் அடியார்பெருமை வெளிப்படுத்துவதாக அது அமைந்திருப்பதையும் (எப்போதும் இறைவன் அடியார்களை முன்வைத்து பின்னிருந்து ஆட்கொள்ளும் மாண்பையும்) எடுத்துச்சொல்லி வந்தனர்.

## நாமொன்று நினைக்க...

காஞ்சிநகரத்தில் முதலில் ஸ்ரீ ஏகம்பர் ஆலயத்தில் வழிபடச் செல்வதாகவும் பிறகு குமரக்கோட்டம், அதற்குப் பிறகு காமக்கோட்டம் என்னும் ஸ்ரீ காமாட்சி அம்மையார் ஆலயம் கடைசியில் காஞ்சியிலுள்ள ஏனைய பாடல்பெற்ற தலங்களை வைத்துக்கொள்ளலாம் என்பதாகவும் திட்டத்துடன் சென்றோம். ஆனால்முன்காரில் சென்றவர்கள் நேரே காமக்கோட்டத்திற்குச் சென்று காரைநிறுத்தினர். அன்று ஆடி வெள்ளிக்கிழமை. அம்மைக்கு உகந்தநாள். இதுவும் திருவருளாணை என்று காரைவிட்டு இறங்கினார்கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள். அக்கோவில் தருமகர்த்தா டாக்டர் ஸ்ரீ ராஜப்பா என்பவர் ஏதோ முன்கூட்டியே திட்டமிட்டுச் சொல்லிவந்ததுபோல அங்கு நின்றுகொண்டிருந்தார். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தைக் கண்டதும், வரவேற்று "இப்பொழுது வந்தது நல்லதாக அமைந்தது. அபிஷேககாலம். சாயரட்சை பிறகு ஆகும். சென்றால் அபிஷேக தரிசனம் கிடைக்கும்" என்று சொல்லி அழைத்துச் சென்றார். தீர்த்தத்தில் சுத்தி செய்துகொண்டு சந்நிதியடைந்தோம். அபிஷேகம் தொடங்கியிருந்தார்கள். ஸ்ரீ காமாட்சி யம்மைக்கும் அவருக்கு எதிரே உள்ள ஸ்ரீசக்ர பீடத்துக்கும் அதனைச் சுற்றியுள்ள நவ சக்திப் பிரதிஷ்டைக்கும் பாலபிஷேகம் ஆயிற்று. தரிசித்துக் கொண்டோம். அபிஷேக முடிவில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அம்மைக்குச்சாத்த எடுத்துவந்த பட்டாடையைக் கொடுத்துத் திருமேனியில் சாத்தி அலங்காரம்செய்து வைக்கட்டும். ஏனையகோவில்களைத் தரிசனம்செய்துகொண்டு வரலாம்" என்ற திருவுளக்குறிப்புக் கிணங்கப் புறப்பட்டோம். வரும்பொழுது அம்மையின் அருள்வள்ளன்மையைக் குறித்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருவுள்ளம் மலர்ந்தது. நம் திட்டம் ஒருவிதமாக இருந்தாலும் அம்மையார் நம்மை வலிய அழைத்து அபிஷேக தரிசனம் செய்துவைத்து நம் காணிக்கையாகிய பரிவட்டத்தையும் ஏற்று அருள் வழங்கியிருக்கிறார்" என்பதாகத் திருவுளம்பற்றிப் பெருமிதமடைந்தார்கள்.

பெரியகோவில் என்னும் ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர் ஆலய தரிசனத்திற்கு எழுந்தருளினார்கள். அவ்வூர் மெய்கண்டார்

கழகச் செயலாளர் வித்துவான், திருஞானசம்பந்த முதலியாரவர்கள் ஸ்ரீகாமாட்சிசந்நிதியில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தைத் தரிசித்து உடன் வந்தார்கள். இயற்கையாகவே அவ்வூர் மக்கள் நல்ல படிப்புள்ளவர்களாகவும், தலப்பெருமையுணர்ந்து கூட்டம் கூட்டமாகச் சென்று வழிபடும் பழக்கமுள்ளவர்களாகவும் சமயசபைகள் அமைத்துப் பிரசாரங்கள் செய்துவரும் ஆஸ்திகப் பெருமக்களாகவும் இருந்துவருவது பலருமறிந்த விஷயம்.

சந்நிதி கிழக்குப்பார்த்தது. ஆனால் பெரிய இராஜகோபுர வாயில் தெற்குப்பக்கத்தில் இருக்கிறது. அதற்கு வெளியில் ஒரு பெரிய பதினாறுகால் மண்டபம் இருக்கிறது. விட்ட வாசல் என்றதொரு சிறுவாயிலும் இருக்கிறது. வெளிப் பிராகாரத்தில் காமாட்சியம்மையார் இறைவனை அடைய வேண்டித்தவமிருந்த கம்பாநதி அந்தர்வாகினியாக இப்போது திருக்குளமாகக் காட்சியளிக்கிறது. ஆலயத்தின் பெரும்பகுதி கம்பாநதியாக இருந்ததாகவும் பிற்பாடு அது அந்தர்வாகினி ஆகிவிடவே திருக்கோவில் எழுந்ததாகவும் கூறப்படுகிறது. அதற்கு மேற்புறத்தில் ஸ்தலவிநாயகர்—விகடசக்கர விநாயகர் எழுந்தருளியுள்ள வாயிலும் ஆயிரக்கால் மண்டபமும் அதன் மேல் திருக்கல்யாண மண்டபமும் அமைந்து விளங்குகிறது.

## அவளும் பொய்சொல்லாள் :

இங்கு சென்றதும் இரட்டையரியற்றிய ஏகம்பநாதர் உலா நினைவுக்கு வந்தது. உலகியலிலே "நானுமறியேன் அவளும் பொய் சொல்லாள்" என்றொரு பழமொழி உண்டு. ஏதேனும் ஒன்றை மறைத்துவிட்டுத் தங்களுக்குத் தெரியாது என்று சொல்லுபவர்களை நோக்கி, ஏனப்பா "நானும் அறியேன் அவளும் பொய்சொல்லாள் எடுத்ததைக்கொடு" என்பது வழக்கம்.

உண்மையில் அச்சொல் ஒரு தெய்விக நிகழ்ச்சியை நினைவுறுத்துவது. ஏகம்பநாதருலா என்ற சிறந்த பிரபந்தத்தை இரட்டையர் திருவருள் உணர்த்தப் பாடினர். அதற்குக்

காப்புச் செய்யுளாக "விகடசக்கிர விநாயகர்" துதி அமைந்தது. அந்த விநாயகர் எழுந்தருளியுள்ள ஆயிரக்கால் மண்டபமும் அதன் சிறப்பும்கூறப்பட்டன. அதை அரங்கேற்றத் திருக்கோவிலுக்கு வந்து பார்த்தார்கள். விநாயகரும் இல்லை, ஆயிரக்கால் மண்டபமுமில்லை. இவ்விதமாக இருக்கவே இல்லாத ஒன்றைக் கவிதையாகப் பாடிவிட்டீர்களே என்று சபையோர் கேட்டனர். அதற்கு இரட்டையர் "இது எங்கள் சொந்தக் கற்பனை அல்ல. நாவுக்கரசியாகிய சரஸ்வதிதேவி உணர்த்தப் பாடியது. ஆகவே இங்கு விநாயகர் ஆலயமும் மண்டபமும் இருந்தேதீரவேண்டும். சோதித்துப் பார்த்தால் விளங்கும். "நானும் அறியேன் அவளும் பொய்சொல்லாள்" என்று உறுதிகூறினர். அது உணர்ந்த அரசன் அங்கு சோதித்துப் பார்க்க அங்கே அதன்படியே விநாயகரும் மண்டபமும் மண்மூடிக்கிடப்பது தெரிந்து சுத்தம்செய்து திருப்பணிசெய்தான் என்பது சரித்திரம். இவ்வளவு பெருமை மிக்க விநாயகரை வழிபட்டு உள்ளேசென்றோம்.

சந்நிதியிலுள்ள திருக்குளத்தில் சுத்தம் செய்துகொண்டு தரிசனம்செய்ய எழுந்தருளினார்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும். சாயரட்சை அபிஷேகம் ஆகி அங்கும் தரிசனத்திற்குத் தயாராகியிருந்தது. உற்சவர் சோமாஸ்கந்தர் திருவுருவம் மிகவும் பழமையானது; கவசபலத்தால் காப்பாற்றப்படுவது. அங்கு தரிசனம்முடிந்ததும் சடாரி என்னும் திருவடி சாத்தும் பழக்கம் அங்கு இருக்கிறது. இதனை உடன்வந்த அன்பர் "இந்தப் பழக்கம் சைவர்களுக்கே உரியது, திருவடி சேவையும் அதனை முடிப்பித்து ஏற்று வணங்குவதும் நமக்கே உரியது, மற்றவர்கள் இந்தப் பழக்கத்தைக் கைக்கொண்டு அதற்கு சடாரி என்று பெயர்கொடுத்து தவறாது சாத்தி வருகிறார்கள். சைவர்கள் இந்தப் பழக்கத்தை நாளடைவில் கைவிட்டுவிட்டனர்" என்று விளக்கம்கூறினார். பிறகு மாவடிசேர்ந்து வழிபாடுகள் செய்யப்பெற்றன. மிகப் பழையமரம்—சமீபத்தில் விவசாய இலாகாவில் மரங்களின் வயதை நிர்ணயிப்பவர் இது சுமார் 700 ஆண்டுகளுக்கு முந்தியதென்பதாகத் தெரிவித்திருக்கிறார் இதில் விளையும் பழங்களை

அன்பர்கள் மகப்பேறு இல்லாதவர்கள் எடுத்துச்சென்று மனைவியுந் தானுமாக உண்டு மகப்பேறு பெறுவது இப்போதும் நடைபெறுவது. அதற்கு இலக்கணமாக "சென்ற ஆண்டில் காஞ்சியிலேயே B. O. C. ஏஜண்டாக உள்ள சுந்தரராஜ ஐயங்கார் என்பவர் மகப்பேறில்லாத காரணத்தால் ஏகம்பநாதரை வழிபட்டு மாவடியையும் வழிபட வந்தனர். வலம்வரும்போது அவர் மனைவியாரின் தோளில் ஒருபழம் வந்து விழுந்தது. பெருமான் அருளென அதனை எடுத்துச் சென்று அவரிருவரும் உண்டனர். இறைவன் திருவருளால் மகள்ஒன்று பிறந்திருக்கிறது. நல்ல சிவந்த மேனியுடைய அழகிய குழந்தை. அதிலுள்ள ஆச்சரியம், தாய்க்கு எந்த இடத்தில் மாம்பழம்வந்து விழுந்ததோ அதே இடத்தில் குழந்தைக்கும் ஒரு மச்சம் - மாங்காய்போன்றது—பச்சை நிறத் தழும்பு இருக்கிறது. தன் குழந்தைக்குக் காமாட்சி எனப் பெயரிட்டிருக்கிறார்." என்ற அற்புத நிகழ்ச்சியை விளக்கமாகச் சொன்னார் உடன்வந்த அன்பர் திருஞான சம்பந்த முதலியார். இது நடந்ததைக் கண்கூடாகக் கண்டு அன்பர்கள் மேலும் இந்த சந்நிதியில் பயபக்தியுடன் நடந்து வருகிறார்கள்.

அது கடந்து அடுத்த மண்டபத்தில் மாவடிக்காந்தர் சந்நிதியிலும் "ஏலவார் குழலி" * சந்நிதியிலும் வழிபட்டுக் கொண்டு ஏகாம்பரநாதர் சந்நிதி சேர்ந்தோம். அங்கு அர்த்த மண்டபத்தில் தலத் தேவாரங்களில் சில பாடல்கள் சலவைக் கல்லில் வெட்டி வைக்கப்பட்டிருக்கிறது. இது திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் உபயம். சுவாமி ஸ்வயம்பு. அபிஷேகம் கிடையாது. புனுகுசட்டம் சாத்தப்படுகிறது. அஷ்டகந்தம் சேர்த்து அதனைக்கொண்டு லிங்கம் செய்யப்படுகிறது. நான்கு பட்டையாக அமையப்பெற்றிருக்கிறது. ஆவுடையாருக்கு மாத்திரம் அபிஷேகம் உண்டு.

சுவாமிக்குப் பின்புறம் அகஸ்தியருக்குக் காட்சி வழங்கியபடியே சோமாஸ்கந்தர் எழுந்தருளியுள்ளார். முறைப்படி

---

* இத்திருநாமம் தேவாரத்திலும் காணப்படுகிறது.

வழிபாடுகளை முடித்துக்கொண்டு கீழைப்பிரகாரம் வந்ததும் அங்குள்ள பிரளயம்காத்தாள் என்னும் அம்பிகையையும் வழிபட்டு சந்நிதிக்கு எதிரே அமைந்துள்ள வைப்பு ஸ்தல மாகிய "கச்சி மயானம்" *தரிசித்துப் புறப்பட்டோம். "மைப்படிந்த கண்ணாளும்" என்னும் பதிகத்தில் இத்தலம் வைத்துப் பாடப்பட்டிருக்கிறது.

அடுத்ததாக, கந்தபுராணம் அரங்கேறிய குமரகோட்டம் வந்தடைந்தோம். வழிபாடுகள் நடத்தப்பெற்றன. அந்தக் கோயிலின் முன்புறமுள்ள மண்டபத்தில்தான் கந்தபுராணம் அரங்கேறியதாகச் சொல்லப்படுகிறது.

## கச்சிநெறிக்காரைக்காடு :

மிகப் பழமையானகோயில். இரவு மணி 7. கதவுகள் சாத்தப்பட்டிருந்தன. அர்ச்சகர் வெளியே போயிருந்தார். ஆனால் அர்ச்சகரின் மனைவியிருந்தார். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளியிருப்பதைக் கண்டு உடனே திறந்து விளக்குகள் போடுவித்தார். தரிசனமாயிற்று. இதற்கு திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்று இருக்கின்றது. அதனை ஓதுவார் பாடினார். சந்நிதி மேற்குநோக்கியது. பாலாலயம் செய்யப்பட்டிருக்கிறது. அர்த்தமண்டபத்தில் சிறுவுருவ

---

* சிவதலங்களுள் மயானம் எனப்பெயர் பெறும் தலங்கள் மூன்று: கச்சி மயானம், கடவூர் மயானம், நாலூர் மயானம், அவற்றுள் இது பண்டாசுர சம்ஹாரம் நடந்த இடம். பண்டா சுரன் தவவலியால் மக்கள் ரத்தத்தில்கலந்து உயிர்ச்சத்தை உண்டு அழித்து வந்தான். அவனை சம்ஹரிக்க இறைவன் யாககுண்டம் (இப்போது தீர்த்தமாக இருக்குமிடம் சிவகங்கை) உண்டாக்கி எல்லா உயிர்களையும் சமித்தாக்கி அதில் கலந்திருக்கும் பண்டா சுரனையும் அவியில் இட்டு சம்ஹரித்தார். அதாவது மகாபிரளயம் செய்து மறுபடியும் சிருஷ்டி தொடங்கினார். அந்தம் ஆதி என்மனார் புலவர்'' என்பதற்கிலக்கணமாக இத்திருக்கோவில் அமைந்து விளங்குகிறது. கச்சிமயானம் அந்தத்தைச் செய்ததாகவும், மாவடி உலக உற்பத்தி செய்ததாகவும் அமைந்து விளங்குகிறது.

நிலையில்வைத்து வழிபாடுகள் நடத்தப்பெறுகின்றன. புதன், இந்திரன் வழிபட்ட திருத்தலம். தீர்த்தம் வாரதீர்த்தமெனப் படுவது. நகரின் வெளிப்புறத்தில் இருக்கிறது. சுற்றிலும் வீடுகள் அதிகமில்லை.

காஞ்சியில் வாரம்பூராவும் அந்தந்தநாளையிலும் வழிபட வாரத்தலங்களும் தீர்த்தங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றில் இது புதவாரத்திற்கு ஏற்பட்டது.

| வாரம் | மூர்த்தி | தீர்த்தம் * |
|---|---|---|
| ஞாயிறு | கச்சபேசம் | இஷ்டசித்திதீர்த்தம் |
| திங்கள் | திருவேகம்பம் | சிவகங்கை |
| செவ்வாய் | ஸ்ரீ மங்களேசுவரர் | மங்கலதீர்த்தம் |
| புதன் | திருநெறிக்காரைக்காடர்—சத்தியவிரதநாதர் | வாரதீர்த்தம் |
| வியாழன் | ஸ்ரீ காயாரோகணம் | தாயார்குளம் |
| வெள்ளி | காமாட்சி அம்மை | உலகாணித்தீர்த்தம் |
| சனி | இலகுவீசம் | சர்வதீர்த்தம் |

---

* தீங்கு தீர்க்குநல் தீர்த்தங்கள் போற்றுஞ்
சிறப்பி னுல்திருக் காமக்கோட் டத்தின்
பாங்கு மூன்றுல கத்தினுள் ளோரும்
பரவு தீர்த்தமாம் பைம்புனற் கேணி
வாங்கு தெண்டிரை வேலைமே கலைசூழ்
வைய கந்தனக் கெய்திய படியாய்
ஓங்குதன்வடி வாய்நிகழ்ந் தென்றும் உள்ள
தொன்(று)உல காணியென் றுளதால்.

—திருக்குறிப்புத்தொண்டர்.

ஈண்டு தீவினை யாவையும் நீக்கி
இன்ப மேதரும் புண்ணிய தீர்த்தம்
வேண்டி னூர்தமக்(கு) இட்ட சித்தியாய்
விளங்கு தீர்த்தநன் மங்கல தீர்த்தம்
நீண்ட காப்புடைத் தீர்த்தம்மூன் றுலகில்
நிகழ்ந்த சாருவ தீர்த்தமு முதலா
ஆண்டு நீடிய தீர்த்தம் எண்ணிலவும்
அமரர் நாட்டவர் ஆடுதல் ஒழியார்.

674



## கச்சிமேற்றளி :

திருமால் சிவசாருப்பியம்பெற்ற பெருந்தலம். சுவாமியின் திருநாமம் திருமேற்றளிநாதர். மேற்குப்பார்த்த சந்நிதி. அப்பர் சுவாமிகள் பதிகம் ஒன்றும், சுந்தரர் பதிகம் ஒன்றும் இருக்கிறது. விஷ்ணு சிவனுகமாறிய மூர்த்தத்திற்கு ஓத உருகீசர் என்று திருநாமம். இது கிழக்குநோக்கிய சந்நிதி. இதற்கு எதிரில் திருஞானசம்பந்தர் கோயில் மேற்குநோக்கி இருக்கிறது. இந்த இடத்திற்கு ஆளுடையபிள்ளையார் பாளையம் என்று பெயர். திருஞானசம்பந்தர் பதிகமியற்றும் பொழுது பெருமாளாக இருந்தவர் உருகி லிங்காகாரமானதாக ஐதிகம். இழந்த பாடல்களில் இப்பதிகமும் இழந்துபட்டிருக்கலாம் எனச் சொல்லப்படுகிறது. இங்கு சென்று வழிபாடுகளை முடித்துக்கொண்டு காமக்கோட்டத்தரிசனத்துக்கு எழுந்தருளினார்கள்.

## காமாட்சி தரிசனம் :

அன்று ஆடிவெள்ளி. ஏராளமான கூட்டம். சுவாமி புறப்பாடாகி உலாவந்தது. முன்பு சொல்லிச் சென்றிருந்தபடி பரிவட்டம் சாத்தியிருந்தது. வழிபாடுகள் நடத்தப்பெற்றன. அம்பிகை மூலமூர்த்தி இராஜராஜேஸ்வரி. அதற்குப் பக்கத்தில் யோக காமாட்சி அம்மையார் எழுந்தருளியுள்ளார். ஆகவே போகபீடமாகவும், யோகபீடமாகவும் அருள் வழங்குகிறது. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வழிபாடுகளை முடித்துக்கொண்டு சந்நிதியில் பிராகாரத்தில் அமைந்திருக்கும் மண்டபத்தில் உற்சவரிருக்கும் சந்நிதிக்கு எதிரிலுள்ள இடத்தில் அமர்ந்து ஜபம் செய்து வழிபாடு முடித்து எழுந்தருளினார்கள். சந்நிதி எந்தத் திசையைப் பார்த்தது என்று சொல்லமுடியாத திசைமயக்கம் இருக்கிறது.

அந்த மின்றிநல் லறம்புரிந் தளிக்கும் அன்னை
தன்திருக் காமக்கோட் டத்தில்
வந்து சந்திர சூரியர் மீது வழிக்கொ
ளாததன் மருங்குபோ தலினால்

சந்த மாதிர மயங்கிஎம் மருங்கும் சாயை
மாறிய தன்றிசை மயக்கம்
இந்த மாநிலத் தவரெலாம் காண என்றும்
உள்ளதொன் றின்றும்அங் குளதால்.

என்ற பெரியபுராணப் பாடலும் இதனை வலியுறுத்துகிறது.

வடபுறம் வாயில்வழியாக வெளிப்பிராகாரம் வரவேண்டும். அங்குதான் தேவஸ்தான அலுவலகம் இருக்கிறது. அந்த மண்டபத்தின் நடுவில் ஒரு பெரிய ஸ்தம்பம் இருக்கிறது. பார்வைக்குக் கொடிமரம் போலத்தோன்றும். அது கரிகாலன் வடநாட்டில் அடைந்த வெற்றியின் ஞாபகச் சின்னம். 'கச்சிவளைக் கச்சி............' என்னும் கல்வெட்டால் இது வெளியாகிறது. இதன்படி அங்குள்ள காவல் மெய்ச் சாத்தனார் (ஐயனார்) கொடுத்த கைச்செண்டு கொண்டு சென்று வெற்றிபெற்றுத் திரும்பவந்து அதன் நினைவாக இங்கு ஸ்தம்பம் நாட்டினான் என்று தெரிகிறது. பொதுவாக காஞ்சியிலுள்ள சிவத்தலங்களில் சக்திகோயில்கள் கிடையாது. காமாட்சி கோயில்தான் எல்லாவற்றுக்கும் பொதுவானது.

காஞ்சிநகரம் ஒரு சிவநகரம். சோமாஸ்கந்த வடிவில் அமைந்தது. ஊரின் ஒரு கடைசியில் ஏகாம்பரநாதர், நடுவில் குமரகோட்டம். அதற்கப்புறம் காமாட்சி திருக்கோயில். இதனிடையில் காஞ்சிநகரம் அமைந்து விளங்குகிறது.

காஞ்சிக்கு ஐயாறு சூழ்ந்த திருத்தலம் என்றும் பாராட்டப்படுகிறது. (சேயாறு, பாலாறு, வேகவதி, மஞ்சள்நதி கம்பாநதி).

**24—7—54 சனிக்கிழமை**

## வலிதாயம்:

பாடி என வழங்கப்படுகிறது—கொரட்டூருக்குக் கிழக்கே உள்ளது. சென்னை ஆவடி ரஸ்தாவில் 7 ஆவது மைலில்

676




அமைந்திருக்கிறது. சுவாமி ஸ்ரீ வல்லீஸ்வரசுவாமி. அம்பிகை ஸ்ரீ ஜகதாம்பிகை. சுவாமி கிழக்குப் பார்த்தும் அம்பிகை தெற்குப் பார்த்தும் எழுந்தருளியுள்ளார். பரத்துவாஜர், பிருகஸ்பதி, ஹனுமார் முதலியோர் பூசித்துப் பேறுபெற்ற தலம். தீர்த்தம் வலிதாயம், திருஞானசம்பந்தரால் பாடப் பெற்றது. ஊருக்கு வடக்கே அமைந்துள்ளது. சுற்றிலும் குடியிருப்பே இல்லை. இங்கு இராவண வாகனம் இருக்கிறது. ரதம் ஒன்று இருக்கிறது. அதில் நாயன்மார் அறுபத்து மூவரும் அழகுற வேலை செய்யப்பட்டிருக்கிறது.

மாலை 4 மணிக்கு சென்னையைவிட்டு புறப்பட்டு கீழ்ப் பாக்கம் வழியாக ஆவடி ரஸ்தாவில் சென்றடைந்தோம். தருமகர்த்தா ஸ்ரீ A. N. பரசுராமவர்கள் (Principal, Minerva Tutotial College) உடனிருந்து தரிசனம் செய்து வைத்தார்கள். திருப்பணியாகி சமீபத்தில் கும்பாபிஷேகம் செய்விக்கப் பெற்றிருக்கிறது. ஆலயம் நன்றாக வைக்கப்பட் டிருக்கிறது. நல்ல நிர்வாகத்தின் அறிகுறிகள் தெரிகின்றன.


## வடதிருமுல்லைவாயில் :

அங்கிருந்து (அம்பத்தூர் தாண்டி) 5 ஆவது மைலில் திருமுல்லைவாயில் அமைந்திருக்கிறது. கோவில் மிகப் பழமை யானது. சுவாமி ஸ்ரீ மாசிலாமணி ஈஸ்வரர், அம்மை கொடி யிடைநாயகி, தீர்த்தம் பாலாறு, ஆதொண்டைமான் சக்கர வர்த்தி வடதிசையில் படையெடுத்துச் சென்றபொழுது அரசன் ஏறிச்சென்ற யானையின் காலில் முல்லைக்கொடி சுற்றிக்கொண்டது. யானை நகரமுடியவில்லை. அரசன் ஆணை யின்படி பணியாட்கள் மண்வெட்டிகொண்டு வெட்டவே இலிங்கம் வெளிப்பட்டது. இலிங்கத்திலிருந்து இரத்தம் பீரிட்டது. அரசன் சோகமுற்று வருந்தி பெருமானுக்கு விமானமும் கோவிலும் எடுப்பித்தான். உலகியலில் வெற்றி காணச்சென்ற அரசன் திருவருள் வெற்றிகண்டான். பெரு மான் அடியார்க்கு அருள்வழங்கும் வள்ளலல்லவா? இறை பணியில் அரசன் ஈடுபடவே இறைவனும் நந்தியம்பெருமானை

வடதிருமுல்லைவாயில்




வடதிருமுல்லைவாயில்



பெருமான் அதொண்டைச் சக்கிரவர்த்திக்கு

வடதிருமுல்லைவாயில்



எருக்கந்தூண்

ஏவி வெற்றிபெறச்செய்தனர். அத்திருக்கோலத்தில் நந்தி கிழக்குநோக்கி நின்றநிலையில் இருக்கிறார். மண்வெட்டியால் வெட்டப்பட்ட தழும்பு பெருமான் சிரசில் காணப்படு கிறது. சந்தனக்காப்புத்தான் சாத்துவது. சித்திரைச் சதயத் தில் அவ்விதம் செய்வது. சுப்பிரமணியர், சூரியன், இராம லக்ஷ்மணர், குசலவர், துர்வாசர், கிருஷ்ணர்ஜுனர், தேவ மித்திரன், சித்திரகர்ணன், சப்புதாரர் வழிபட்டுப் பேறு பெற்ற தலம். இந்திரன் வழிபட்டு விழா எடுத்திருக்கிறான். பிரும்மோத்சவத்தின் 9 ஆவது திருநாளில் சுவாமி வெளிப் பட்டு ஆதொண்டை சக்ரவர்த்திக்கு அருள்வழங்கிய காட்சி நடத்தப்படுகிறது. திருமால் வழிபட்டு அருள்பெற்றதை

"....முல்லையின் தெய்வமென் றருந்தமிழ் உரைக்கும்
செங்கண் மால்தொழுஞ் சிவன்மகிழ் திருமுல்லைவாயில்"

என்று பெரியபுராணப் பாடல் சிறப்பித்துக் கூறுகிறது.

கிழக்குப்பார்த்த சந்நிதி. சுவாமிக்கு வலப்புறத்தில் அம்பிகை எழுந்தருளியுள்ளார். கோபுரவாயில் தென்புறத்தில் இருக்கிறது. குருக்கள் நன்றாகப் படித்தவர், திருமுறைப் பயிற்சிபெற்றவர். ஸ்ரீகண்ட சிவாசாரியார் பிரதிஷ்டை இங்கிருக்கிறது. பாஷ்யகாரர் என்ற திருநாமம் வழங்குகிறது. ஆதொண்டை சக்ரவர்த்திக்குப் பெருமான் காட்சி கொடுத்த தாக அம்மையும் அப்பனும் நின்ற திருக்கோலத்திலும் பக்கத்தில் விருஷபம் நின்ற நிலையிலும் ஆதொண்டை சக்கிர வர்த்தி தரிசிப்பதாகவும் அமைந்திருக்கிறது.

சுந்தரர் பதிகம் ஒன்றிருக்கிறது. அதனை ஊன்றி நோக்கினால் திருவொற்றியூரிலிருந்து நேரே இத்திருத்தலத் துக்கு வந்திருக்கிறார் என்பது தோன்றும். நாயனார் "பிழை செய்தோருக்கும் அருள்வழங்கும் பெருமானே! என்னைமாத் திரம் ஏன் இத்துன்பத்திற்குள்ளாக்கினீர்" என்று எடுத் தியம்பும் இரக்கமும் பதிகவாயிலாகக் காணக்கிடக்கிறது.

"திருவுமெய்ப் பொருளும் செல்வமும் எனக்குன் சீருடைக்
கழல்கள்என் றெண்ணி
ஒருவரை மதியாது உருமைகள் செய்தும்
ஊடியு முறைப்பனுய்த் திரிவேன்"

என்பது: பெரிய இடத்தைச் சார்ந்து அதுவே தனக்கு எல்லாம் என்று இறுமாந்திருப்பவர்கள் அந்த பலத்தால் எதையும் செய்யலாம் என்ற துணிவுகொண்டு பொய்யும் பேசும்படியாகி அதற்குத் தன் எஜமானனும் துணைசெய்ய வேண்டுமென்று எதிர்பார்ப்பதுபோல இருக்கிறதல்லவா? இறைவன்முன் எல்லோரும் சமம். அங்கு தனிப்பட்ட யாருக்கும் தனிச் சலுகை கிடையாது என்ற நீதிவழங்கும் உயர்நியாயஸ்தலமாயிற்றே அது; தோழனுய் ஏற்றுக்கொண்ட சுந்தரருக்கும் அதேநியதிதானே. அதனைக்கீழ்க்கண்ட பதிகப் பகுதி குறிப்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும். முன் நிகழ்ச்சி "திருப்புகழ் விருப்பால் பன்னலங் தமிழாற் பாடுவோற்கருளாய்" என்பது முன்பு தன்னை ஆட்கொண்ட பொழுது "சொற்றமிழ் பாடுக", "அர்ச்சனை பாட்டே யாகும்" என்றெல்லாம் ஊக்கியதைக்குறித்தும் மனமுருகப் பாடும் மெய்த்தொண்டர்களுக்கு வேண்டியதை வேண்டி யாங்கு அருளும் அருள்திறம் உரைத்ததாகவும் தனக்கும் இறைவனுக்கும் உள்ள தோழமையால் தான்செய்த சிறு தவறுகளுக்கு இறைவன் கருணை காரணமாகத் தண்டனை கொடுக்காமல் இருந்துவிடவே பெரிய தவறுகளைச் செய்யும் படி என்னை ஆக்கிவிட்டது என்பதையும்

"மற்றுநான் பெற்றதார் பெறவல்லார்
வள்ளலே கள்ளமே பேசிக்
குற்றமே செய்யினும் குணமெனக் கொள்ளுங்
கொள்கையால் மிகைபல செய்தேன்"

என்றும்,

"நம்பனே யன்று வெண்ணெய் நல்லூரில்
நாயினேன் றன்னை ஆட்கொண்ட
சம்புவே"

என்றும், "அன்பர்க்குத் துன்பம் வருங்காலத்தில் நீ வெளிப் பட்டு அருள்வழங்குவையே" எனக்கும் அவ்விதமாகவே

அருள் வழங்கவேண்டும் என்பதை "மட்டுலா பலர் என்ற பாடலில் 'அடியேன் படுதுயர் களையாய்' என்றும் அன்பர்கள் பிழைசெய்தாலும் பொறுத்து அருள்வழங்கும் திறமுடையவனுயிற்றே? என்பிழை பொறுத்து அருள் வழங்கவேண்டுமென்ற பிரார்த்தனை "சொல்லரும் புகழான் ......வெளிப்பட்டருளிய இறைவனே" இவ்விதமாக மெய் யடியார் துயர்வந்தபொழுது இறைவனிடமே தன்குறையைத் தெரிவித்து வேண்டுகின்ற பான்மையையும் ஊன்றி உணர்ந்து பார்க்கவேண்டும் முதற்பொருளைப்பற்றிய அவனருள் நமக் கிருக்க மற்ற எல்லா தெய்வங்களையும் வழிபட்ட பலன் நமக்குக் கிடைக்குமே; நேரே மேலிடத்தில் தெரிவிக்கும் உரிமை நமக்கிருக்கும்பொழுது மற்றவர் சேர்க்கையும் தயவும் நாம் நாடவேண்டியதில்லையே என்பதை உணர்த்துவதாக ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் சிந்தனை ஓடிற்று. "சிறியோர்செய்த சிறுபிழையெல்லாம் பெரியோராயின் பொறுப்பது கடனே" என்றுலும் "சிறியோர் பெரும்பிழை செய்தனராயின் பெரியோர் அப்பிழை பொறுத்தலுமரிதே" அன்றே. இவைகளை உலகத்தவர் நன்குணர்ந்து பார்த்தால் நம் சமய ஒழுக்கத்திலும் நல்ல விதிகளும் சட்ட ஒழுங்குகளும் நியாயம் வழங்கும் நேர்மையுமே இருக்கிறதென்பதை அறியலாம். இதனைப்பாராமலே சமய நூல்களும் சமய ஒழுக்கங்களும் மக்களின் தற்காலத் தேவைக்கு உதவாதவை என்று வீண்பேச்சுப் பேசிக் காலங் கழிக்கிறுர்களே மக்கள் என்று இரங்கிக் கூறினுர்கள். இவ்விதமாகச் சிந்தித்துக் கொண்டே ஆவடி, திருவள்ளூர் வழியாகத் திருத்தணி ரஸ்தாவில் இரவு 6-30க்குப் திருப்பாசூர் அடைந்தோம்.

## திருப்பாசூர் :

பாச்சூர் என வழங்குகிறது. பெரியகோயில். கோட்டைக் குள் ஆலயம் அமைந்திருந்ததாகத் தோன்றுகிறது. கோட் டைப் பகுதி ஓரளவு இருக்கிறது.

இறைவன் பாசீஸ்வரர், அம்மையார் மோகனாம்பிகை, சுயம்புவனி. சந்திரன், விஷ்ணு, அம்பிகை பசு, கரிகாலன் வழிபட்டுப் பேறுபெற்ற இடம். சந்நிதி கிழக்குப் பார்த்தது. கோபுரவாயில் தெற்குநோக்கி அமைந்திருக்கிறது. பாசு—மூங்கில்.

## தலவரலாற்றின் பகுதி :

இங்குள்ள காட்டில் பசுக்கூட்டங்கள் மேய்ந்து வந்தன. அதில் ஒன்று நிறைந்த தவமுடையது. ஒருமூங்கில் புதரடியில் சென்றதும் தன்னை யறியாமலே பால் சுரந்து சொரிந்தது. அதனடியில் உள்ள புதரில் பெருமான் எழுந்தருளியிருந்து அபிஷேகத்தை ஏற்றுக்கொண்டார். இவ்விதமாகப் பால்சுரக்கும் பசு அரண்மனையைச்சேர்ந்தது. பசு கொட்டிலுக்குப் போனதும் மாலையில் பால்சுரப்பதில்லை. இதனால் இடையன் பாலைக்கறந்து குடிப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டான். அவனுக்கு அதற்கு சமாதானம் தெரியவில்லை. ஒருநாள் அப்பசுவின் பின்னேசென்று பார்த்தான். பசு நித்திய வழக்கம்போல் மூங்கில் புதருக்குள் சென்று பால் சொரிந்து வருவதைக் கண்டான். ஓடோடிச்சென்று அரசனுக்கு (கரிகாலனுக்கு) அறிவித்தான். அரசன் ஆட்களைக்கொண்டு அங்கு காடுதிருத்திப் பார்த்தான். பெருமான் எழுந்தருளியிருப்பதைக் கண்டான். கோவில் எடுப்பித்தான். அதற்குக் காவல்அரணாகக் கோட்டைஎடுப்பித்தான். விழாக்களும் திட்டம்செய்தான். நிபந்தங்கள் வழங்கினான். இப்பொழுதும் அந்தக்கோட்டை கரிகாலன் கோட்டையெனப் படுகிறது. காடுதிருத்திய காலத்தில் இறைவன் சிரசில் மண்வெட்டிபட்ட இடம் தழும்பாக இருக்கிறது. அம்மை தவம்செய்து பெருமானை அடைந்த இடம். அம்பிகை வலப்புறத்தில் எழுந்தருளியுள்ளார்.

அந்நாட்டு மன்னனொருவன் சபையில் வேற்று நாட்டிலிருந்து தேர்ந்த பாம்பாட்டிவந்து தன் திறமைகளைக் காட்டினான். அவன் நாட்டிலுள்ளோர் அவனை வெல்வாரில்லை.

ஆகவே இறைவர் பாம்பாட்டியாகவந்து வேற்றுநாட்டானை வென்றார். பாம்பாட்டிநாதர் என்று இறைவர் பெயர் வழங்குகிறது. இறைவன் திருமேனி தீண்டாத் திருமேனி.

சம்பந்தர் பதிகம் ஒன்றும் அப்பர் பதிகம் இரண்டும் இருக்கின்றன. அப்பர் சுவாமிகள் பதிகத்திலிருந்து சந்திரன் வழிபட்டது 'அந்திக்கோன் தனக்கேயருள் செய்தவர்' என்பதாலும், பாப்பாட்டி வரலாறு "நீளரவினைப் பற்றி யாட்டுவர் பாசூரடிகளே" என்பதாலும், "புதியதோர் பாம்பும் ஆட்டு வாய்" என்பதாலும், "படவரவம் ஒன்றது வாய்" என்பதாலும் அறியலாம். "வேதமோதி" "சாம்பல் பூசுவார்" பாடல்கள் படித்தறிந்து இன்புறத்தக்கன.

இவ்விதமாகப் பாடல் பெருமை மிக்க இக்கோவில் இப்பொழுது பெருமை மங்கிக் கிடக்கிறது. கோயிலினுட் புகுந்தாலே ஒரே இருட்டு. வௌவால்களின் எச்சத்தால் துர்நாற்றம் உள்ளே நுழைந்தால் மழைபோல வௌவால் எச்சம் விழுகிறது. ஊரின் ஒதுப்புறத்திலிருந்தாலும் திருவள்ளூர் திருத்தணி பெருவழியில் இருப்பதால் பலர் அவ்வழியே போகின்றனர். கவனிப்பார் யாருமிருப்பதாகத் தெரியவில்லை. இது தருமபரிபாலன இலாகாவினரின் நிர்வாகத்திலிருருப்பதாகவும் தெரிகிறது. கோவிலில் மிக அருமையான மூர்த்தங்கள் (கல்விக்கிரகங்கள்) இருக்கின்றன. இருட்டுக்காலங்களில் மூலஸ்தானத்தில் ஒரு சிறு அகல் விளக்கு மாத்திரம் இருக்கிறது. வேறு விளக்கேயில்லை. பெரியமண்டபம் இருக்கிறது. இவ்வளவுக்கும் உள்ளூரில் இவ்விதமாக இருக்கும் குறையை நினைத்து நிவர்த்திக்க யாரும் முயற்சிப்பதாகவுமில்லை.

கோவில் உள்ளே அழுக்கும் எண்ணெக் கறையும் அதிகமாக இருக்கிறது. பித்தளைச்சாமான்கள்கூட களிம்பேறிக் கருப்பாக இருக்கிறது. இவ்விதம் கவனிப்பாரற்ற நிலையில் பெருமைமிக்க சிவாலயம் ஒன்று விடப்பட்டு

இருக்கிறதே என்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் கவலை யுற்றார்கள். இவ்விதமாகத் தரிசனம் முடித்துக்கொண்டு திருவாலங்காடு சென்றோம்.

## திருவாலங்காடு :

இது மிகப் பழைய தலம். தொண்டைமண்டலத்தில் உள்ள பாடல் பெற்ற சிவத்தலங்கள் முப்பத்திரண்டனுள் ஒன்றாகும். சைவ சமயாசாரியர் மூவராலும் பாடப்பெற்ற சிறப்புடையது. மேலும் காரைக்காலம்மையாரெனப் பெரும் புகழ்பெற்ற மூதாட்டியாரின் திருப்பாடல்களையும் பெற்றது.* நடராசப்பெருமானின் பஞ்ச சபைகளில் இஃது ஒன்றாகும். இங்குள்ள சபை இரத்தினசபை. இங்குப் பெருமான் ஆடின தாண்டவம் ஊர்த்துவதாண்டவம். தமிழ்நாட்டில் காடென்ற பெயர்கொண்ட பல சிவஸ்தலங்கள் உள்ளன. அவை மறைக் காடு, வேற்காடு, சாய்க்காடு, வெண்காடு, காரைக்காடு, தலைச்செங்காடு என்பன. அவைபோல இத்தலமும் ஆலங் காடென வழங்குகிறது. இதனால் பண்டைக்காலத்து, இத் தலம் ஆலமரம் நிறைந்த காடாக இருந்ததென அறியலாம். இதற்கு வடமொழியில் வடாரண்யம் என்று பெயர்.

இங்கே திருக்கோயில்கொண்டெழுந்தருளும் சுவாமியின் பெயர் ஆலங்காட்டடிகள்; வடாரண்யேசுவரர். அம்மையின் பெயர் வண்டார்குழலியம்மை. தீர்த்தம் முத்திதீர்த்தம். தலமரம் பலா. இந்த ஊர் இப்பொழுது சித்தூர்ஜில்லாவைச் சேர்ந்தது. தமிழ்நாட்டின் எல்லை ஓரமாக உள்ளது.

ஆதிசேடனுக்குத் திருமால் உபதேசஞ்செய்தார். சுந்தரர் உபதேசம் பெற்றார். முஞ்சிகேச முனிவர், கார்க்கோடகர்

---

* காரைக்காலம்மையாரின் மூத்த திருப்பதிகமும் இத் தலத்திற்கு உண்டு.

இவர்கள் வழிபட்டார்கள். அவர்களுக்காக சிவபிரான் நடனஞ்செய்து ஆனந்தக் கோலங்காட்டினார். இவ்வனத்தை காளி ஆதியில் ஆண்டுவந்தனள். காளிக்கும் நடராசருக்கும் நிருத்தம்செய்வதில் போட்டிஏற்பட்டது. நடராசர் ஊர்த்துவ தாண்டவம் புரியவே காளி நாணமுற்றுத் தோல்வியடைந் தனள். தேவர்கள், சேடன், கிராதன், சோமசாமி முதலிய வர்கள் துதிசெய்து வழிபடப்பட்டது. இவை முதலான பல ஐதிகங்கள் உள்ள பெருமையுடையது.

இனித் தமிழ்ப் புராணங்களிலும் நாட்டுக் கதைகளிலும் வழங்கும் மற்றொரு சரிதம் இங்கு உண்டு. அது பழையனூர் நீலி கதை என்பது. பழையனூர் என்னும் ஊர் திருவாலங் காட்டுக்கு ¾ கல் அளவில் உள்ளது. தேவாரத்தில் இவ் விரண்டூர்களும் சேர்த்தே கூறப்பட்டுள்ளன.

## பழையனூர் நீலி :

'முன்னொருகாலத்தில் ஒருவன் பரத்தையர்வசப்பட்டிருந் தான். அவனை நல்வழிப்படுத்த அவன்மனைவி முயற்சித்தாள். அவன் தன்மனைவியை அழைத்துக்கொண்டு ஒருநாள் தம் சுற்றத்தார் வீட்டுக்குச் செல்லுகையில் வழியில் அவளைக் கொன்றுவிட்டான். அவள் நீலி என்ற பெயரொடு பேயா னாள். மறுபிறப்பில் தன்மனைவியைக் கொன்றவன் ஒரு வணிகனாகப் பிறந்தான். ஒரு பெரியார் அவனை அணுகி உனக்கோர் பழிநேரப்போகிறது எனக்கூறி எப்போதும் வாளேந்திச் செல்க! என எச்சரித்துச் சென்றார். அவன் வாணிபத்திற்காகப் பழையனூர் வழியாகச் சென்றான். வழியில் நீலி ஒரு மாயக் குழவியுடன் வந்து அவனைத் தொடர்ந்தாள். அவன் உணர்ந்து அவளொடு தொடர்பு வையாது சென்றான். பேயான பெண்மகளும் உடன் தொடர்ந்து ஊரணுகி பழையனூர்த் தலைவர் எழுபதின் மரிடம்சென்று இவன் தன்கணவன் என்றும், தன்னைவிட்டுப் பிரிந்துபோக எண்ணுகின்றான் என்றும், அதுபற்றித் தான் தொடர்ந்துவருவதாகவும் நியாயம் வழங்க வேண்டுமென்றும்

கூறினள். அவ்வேளாளத் தலைவர்கள் அவனை விசாரிக்க அவன் அங்ஙனமின்று என்றும், அஃதோர் பேய் தன்னைக் கொல்ல வருகிறதென்றும் கூறினன். அவள் தான் அவன் மனைவியே என்பதற்கு அவன் குலமுறை கிளத்தியும், குழந்தை அவனுடையதென்பதைக் காட்ட அதனைக் கீழே விட்டு அது அவனிடம்சென்று மடியில் உட்கார்ந்து கொள்ளும்படிச் செய்தும் நிரூபித்தாள்.

அவ்வேளாளர்கள் உண்மையென நினைந்து ஓர் மண்டபத்தில் அன்றிரவில் தங்கியிருக்கச் சொன்னார்கள். அப்போது அவள். 'இவன்கொண்ட வாளால் என்னைக் கொல்லுவான்' என நடுங்கினள். அதுகண்ட அவர்கள் அவன் கையிலிருந்து வாளைக் கேட்க, அவன் 'இவள்பேயே; என்கையில் வாள் இருத்தல்வேண்டும்' எனப் பன்முறை கூறினன். வேளாளர்கள் 'உன் உயிர்போயின் எங்கள் எழுபதின்மர் உயிர் கொடுப்போம்; கவலற்க' என அவனை மண்டபத்திற்கனுப்பினர். அவன் சென்ற அளவிலே நீலி அவனைக்கொன்று வெளியேறி அவன் தாய்போல் வடிவு கொண்டு என்மகன் இங்கு வந்தனனோ என வேளாளரிடம் வினவினள். அவ்வேளாளர்கள் சென்று மண்டபத்தில் பார்க்க அவன் இறந்துகிடந்ததைக் கண்டு கவன்று அவனுக்குக்கூறிய உறுதிப்படி தீ வளர்த்து எழுபதின்மரும் எரியில் மூழ்கினர்.

இதனைத் திருத்தொண்டர் புராணத்தில்,

" நற்றிறம்புரி பழையனூர்ச் சிறுத்தொண்டர் நவைவந்
துற்ற போதுதம் உயிரையும் வணிகனுக் கொருகால்
சொற்ற மெய்ம்மையுந் தூக்கி அச்சொல்லையே காக்கப்
பெற்ற மேன்மையில் நிகழ்ந்தது பெருந்தொண்டை நாடு "

எனச் சேக்கிழாரும், சேக்கிழார் புராணத்தில்,

" மாறுபடு பழையனூர் நீலிசெய்த
வஞ்சனையால் வணிகன்உயிர் இழப்பத் தாங்கள்
கூறியசொல் பிழையாது துணிந்து செந்தீக்
குழியிலெழு பதுபேரும் முழுகிக் கங்கை

திருவாலங்காடு (இரத்தினசபை)



திருவாலங்காடு



திருவாலங்காடு



காரைக்காலம்மையார்

ஆறணிசெஞ் சடைத்திரு வாலங்காட் டப்பர்
அண்டமுற நிமிர்ந்தாடும் அடியின்கீழ் மேவப்
பேறுபெறும் வேளாள்ர் பெருமை எம்மால்
பிரித்தளவிட் டிவளவெனப் பேசலாமோ ''

என உமாபதிசிவமும், தேவாரத்தில்,

"வஞ்சப்படுத் தொருத்தி வாணாள்கொள்ளும் வகைகேட்டு
அஞ்சும் பழைய னூர் ''

எனத் திருஞானசம்பந்தரும் குறித்தமையறிக.

## காரைக்காலம்மையார் :

காரைக்காலில் வணிககுல தனதத்தனுக்கு அருந்தவப் பேற்றுமகளாய்ப் புனிதவதியார் என்றபெயரினராய்த் தோன் றினவர் காரைக்காலம்மையார். மொழிபயின்ற காலத்தும் முன்னவன் வழிபாடொடு காதலுடையார். பின் நாகைப் பரமதத்தனுக்கு மனைவியானார். இல்லறம் மேன்மையுற நடத்தினார். அடியார்க்கு அமுதும் ஆடையும் உதவினார். ஒருநாள் பரமதத்தனைக் காணவந்தோர் கையுறையாக இரு மாங்கனிதந்தனர். அவன் அவற்றை வீட்டுக்கனுப்பினன். அச்சமயம் ஆட்கொள்ள அடியார்கோலத்தில்வந்த இறைவ னுக்கு அமுதூட்டிய அம்மையார் கறியமுதாகாமையால் ஒரு மாம்பழத்தைக் கொடுத்தார். பின்னர்வந்த கணவனுக்கு உணவிடுங்கால் இருந்த பழமொன்றை இட்டார். அவன் அதன் இன்சுவைகண்டான்; மற்றொன்றும் கேட்க எடுப் பார்போல் உட்சென்று இறைவனை வேண்டினார். இறைவ னருளால் பழம் ஒன்று கையில்வரக் கொண்டுவந்து கொடுத்தார். அருட்பழம் உண்ட அவன், முன்னதைவிட பின்னது அதிக சுவையாதல் கண்டு "அதனொடு வந்ததா அன்றி வேறு" என வினவினன். அம்மை உண்மை உரைக்க, "உண்மையாயின் வேறொன்று தருக" எனக் கூறினன். அவ்வாறு வேண்ட "வேண்டுவார் வேண்டுவதே ஈவானாகிய"

பெருமானும் மற்ெருரு பழமும் கொடுத்தார். அம்மையார் கொடுக்கவும் அவன் கண்டான்; எழுந்தான்; அவளடியில் தெய்வமெனவிழுந்தான்.

பின் வாணிபத்திற்கு வேற்றூர் சென்றவன் மதுரை யடைந்து வேெருருமாதினை மணந்து அங்கே தங்கிவிட்டான். அங்குப் பிறந்த பெண்குழந்தைக்குத் தன் முதன் மனைவி பெயராய புனிதவதி என்ற பெயரையே இட்டான். கணவன் வருவான் என்று எதிர்பார்த்த புனிதவதியார் வாராததுகண்டு விசாரித்துப், பாண்டிநாட்டிலுள்ளமை யறிந்து அங்குச் சென் றனர். அவன் தன் மனைவி மகளுடன் வந்து வணங்கி அவள் தெய்வமாதல் ஆண்டுளார்க் கறிவித்தனன். கணவன் பொருட்டுத் தாங்கிய வனப்புமிக்க சதை கழிவதாக என உதறிப் பேயாகிக் கைலையப்பனைக் கண்ணுற்காணத் தலையால் நடந்தனர் காரைக்காலம்மையார். ஈசன் மகிழ்ந்து 'அம்மையே வா!' என்ன, காரைக்காலம்மை 'அப்பா' என்றவனடிசேர வேண்டுகிருர். அம்மை

"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்ருர்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான்மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க"

என்ருர்.

ஈசன் "தெற்கே ஆலங்காடு என நாம் விரும்பும் தலம் ஒன்றுண்டு. அங்கே நம் நடனம் கண்டு மகிழ்ந்திருக்க!" என அருள்புரிந்தனன்.

"கூடுமா றருள் கொடுத்துக் குலவுதென் திசையில் என்றும்
நீடுவாழ் பழன மூதூர் நிலவிய ஆலங் காட்டில்
ஆடுமா நடமும்நீகண் டானந்தஞ் சேர்ந்தெப்போதும்
பாடுவாய் நம்மை என்ருன் பரவுவார் பற்ருய் நின்ருன்"

அம்மையார் ஆலங்காடடைந்தார். "கொங்கை திரங்கி" என்பதும், "எட்டியிலவம் ஈகை" என்பதும் பாடி சிவானந் தத்து மூழ்கினுர் என்பது காரைக்காலம்மையார் வரலாறு.

பேரூர் போன்ற திருத்தலங்களில் ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியின் அடிக்கீழ் காரைக்காலம்மையாரின் உருவத்தைக் காணலாம். ஆனால் இத்தலத்தில் அங்ஙனமின்று. அம்மையாரின் சிலையும் உற்சவ வடிவமும் தனியே இருக்கக் காண்கின்றோம். பின் ஆறு, ஏழாம் நூற்றாண்டில் அப்பரும் சம்பந்தரும் ஒன்பதாம் நூற்றாண்டில் சுந்தரரும் இத்தலத்தைத் தரிசித்தார்கள். அதுகாலை காரைக்காலம்மையார் காலால் நடக்க அஞ்சித் தலையால் நடந்த தலமாயிற்றே; நாம் மிதிக்கலாகாதே எனக்கருதி ஆலங்காட்டின் அயலில் உள்ள பழையனூரிலிருந்தே திருப்பதிகங்கள் பாடியருளினார்கள். பாடிய பதிகங்கள் நான்காகும்.

## ஆலங்காடு அடைந்தோம் :

பாசூரிலிருந்து ஏழாவது மைலில் தெற்கே மூன்றுகல் தொலைவில் இருக்கிறது திருவாலங்காடு. கிளைவழிக்குக் கப்பி போட முயற்சி நடந்திருக்கிறது. ஆனாலும் ஆந்திராவிலுள்ள இவ்வூர் மக்கள் தமிழ் இராஜ்யத்தில் சேரவேண்டும் என்று கிளர்ச்சி செய்கின்றனர்: ஆகவே, கவனிப்பாரில்லை. நல்ல காடு, அன்று நல்ல மழை பெய்து வழியெல்லாம் அறுத்துவிட்டது. கால் நடையாகப்போவதே கடினம்; அதிலும் நல்ல இருட்டுவேளை; பெரியகார்கள் இரண்டும் செல்லவேண்டும். ஆலங்காடுறையும் அப்பனையும் காரைக்காலம்மையையும் நினைத்து தைரியமாக அவ்வழியில் செல்வதாயிற்று எங்கள் கார்கள் இரண்டும். அறுத்தோடிகளும் நொடிகளும் பள்ளத்தில் சேறுள்ள பகுதிகளுமாக அவ்வழி செல்லவே மலைத்தோம். நடுவில் கிளைவழிகள் வேறு. வழிசொல்லி ஊக்குவார் யாருமில்லை; இரண்டு கல் தொலைவு வந்து விட்டோம். அங்கேதான் பெருஞ்சோதனை காத்திருந்தது. இருபுறமும் தண்ணீர் நிறைந்த வாய்க்கால். ஒரு சிறு வண்டிதான்செல்லும் வழி அது. குறுக்கேசெல்லும் சிறு வாய்க்கால் ஒன்று. சிமிட்டிக்குழாய் போட்டிருக்கிறார்கள்

அதையும் தகர்த்துவிட்டது மழை. முன்னும்போக மயக்கம்; பின்னேயும் நகர்த்திச் செல்வதென்பது முடியாது. டிரைவர்கள் மயங்குகின்றனர்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எப்படியாவது கஷ்டம் அதிகரிக்க அதிகரிக்க சென்று தரிசிக்கவேண்டுமென்று உறுதிகொண்டார்கள். திரும்பிச் செல்லவும் இடமில்லை. "அம்மைக்கு அருள் நடனம் காட்டிய அப்பனே! ஏன் இந்தச் சோதனை" என்று நாங்கள் எல்லோரும் ஏங்கினேம். சற்றுத் தொலைவில் உயரமான இடத்தில் ஒரு ஒளி தென்பட்டது. அதைக் கலங்கரை விளக்கமாக வைத்துக் கொண்டு, ஒரே உறுதியாக அப்பனை வேண்டியவாறு காரை ஊக்கினர் டிரைவரும். காரும் அந்தக் கஷ்டமான பகுதியையும் அதேபோல உள்ள மற்ெருரு இடத்தையும் தாண்டிச் சென்று ஊரை அணுகிற்று. கோவிலை வலமாக வந்து சந்நிதி அடைந்தோம். பெருமானுக்கு அர்த்தஜாம பூஜை தொடங்கும்நேரம்; இரவு மணி 8. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களைக் கண்டதும் அந்நேரத்திலும் சிலர் வந்து கூடினர். அங்குள்ள ஆலயப் பணியாளர்களும் அர்ச்சகர்களும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைக் கண்டதும் தரிசனத்திற்கு வேண்டிய உதவிகளைச் செய்தனர். அம்மையாரை ஆட்கொண்ட பரமன் (நடராஜ மூர்த்தி) வெற்றிப் பெருமிதத்துடன் ஊர்த்துவ தாண்டவமூர்த்தியாக 8 கைகளுடன் வீசு திருக்கரமும் உயரத் தூக்கிய திருவடியும் உடையவராகக் காட்சி அளிக்கிருர். ஆடித்தோற்ற காளியும் அங்கு பக்கத்திலிருக்கிருள். காரைக்காலம்மையார் புராணத்தில் சொல்லி யிருப்பதுபோல கொங்கை திரண்டு எலும்பெழுந்து உடல் உருகி உட்கார்ந்து தாளத்துடன் இசைபாடும் திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கிருள் அம்மை. வழியில் வந்தகஷ்டமெல்லாம் இந்த ஆனந்தக் காட்சியைக் கண்டதும் மறந்துபோய்விட்டது. ஆனந்தம் மேவியது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் புளகாங்கிதமுற்று சந்நிதியில் நின்ருர்கள். ஓதுவாரும் காரைக்காலம்மையார் அருளிச்செய்த மூத்த திருப்பதிகத்தை மிக உருக்கமாகப் பாடினுர். இவ்விதம் தரிசனம் முடித்துக்



உலகத்தின் முப்பேராலங்களுள் ஒன்றான
அடையாற்று மரம்

கொண்டு இரவு 10 மணி சுமாருக்குத் திரும்பினோம். இவ்விதமாகப் பெரியவர்கள் வருவதற்கு அறிகுறியாகவே தங்களுக்கு அன்று பெருமழை பெய்ததாகவும் சில ஆண்டு களாக மழையில்லாமல் மக்கள் தவித்திருப்பதாகவும் மேலும் அன்றிரவே மழை பெய்யும் அறிகுறிகள் தோன்று வதாகவும் கூறி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை வாழ்த் தினர் அங்கு வந்த மக்களும். எங்களுக்கு ஒரு சிறிது கஷ்ட மாக இருந்தாலும் ஊர் செழிக்க மழைபெய்தமை அறிந்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மகிழ்ந்து மேலும் நன்மை கள் பெற்று வாழ ஆசிகூறினார்கள்.

அனந்தர் என்னும் முனிவர் இந்தத் திருவாலங்காட்டில் தங்கி நீண்டகாலம் தவமிருக்க அவரைச் சுற்றி முஞ்சிப்புல் வளர்ந்து மூடிவிட்டது. அதனால் முஞ்சீஸ்வரர் எனவழங்கப் பெறுகிறார். கார்கோடகன் வழிபட்ட திருத்தலம். கார்கோட கன், முஞ்சிமுனிவர் இருவருக்கும் உத்சவர் இருக்கிறார். காளி யோடு திருநடனமாடிய திருத்தலம் "ஆடினார் காளிகாண ஆலங்காட்டடிகளாரே" என்பது தேவாரம். பங்குனி சுவாதியில் அம்மையார் சோதியிற் கலந்து ஆனந்த தாண்டவ மூர்த்தியின் திருவடியில் நின்று பேரின்பத்துள் திளைத்திருக்கிறார். வள்ளுவர் சரிதத்தில் கூறும் "நூல் நெருடும் ஏழை அறிவேனோ குழைநக்கும் பிஞ்ஞகன்தன் கூத்து" என்பதற்கிலக்கியமாக தூக்கிய திருவடியில் குழை இருக்கிறது. திருவடிக்கு நேரே வீசிய திருக்கரம் இருக்கிறது. இது கூர்ந்து கவனிக்கவேண்டிய ஒன்று.

அடையாறு :

காலை 10 மணிக்கு அடையாறு பிரும்மஞானசபை ஆலமரம் பார்த்தோம். 205 202 விஸ்தீரணத்துக்குப் படர்ந் திருக்கிறது. நன்றாகப் பராமரிக்கப் படுகிறது. சுத்தமாக வைக்கப்பட்டிருக்கிறது. உலகில் உள்ள பெரிய ஆலமரங்கள் மூன்றில் இது ஒன்று. பிரும்மஞானசங்கம் இருக்கு

மிடத்தில் சர்வமத சமரசமும் சர்வதேச சகோதரத்துவமும் விளங்குவது நன்ருகத் தெரியக் கிடக்கிறது. எல்லாமத ஆலயங்களும் இருக்கின்றன. (நல்லபுத்தகசாலே) கலேக் கோவில் ஒன்றிருக்கிறது. சிறந்த அறிவாளிகள் நிறைந்த இடம். பலதேசத்தவரும் வருகின்றனர். அன்னே வசந்தா தேவியார் (Annie Besant) வாழ்ந்து மூச்சுவிட்ட இடம்.

## பூண்டி, திருவெண்பாக்கம்:

மாலே 4 மணிக்கு பூந்தமல்லி திருவள்ளூர் வழியாக பூண்டி நீர்த்தேக்கத்திற்குச் சென்று அங்குள்ள காட்சிகளேக் கண்டோம். தேக்கத்தின் நடுவிலே தொலேவில் "உளம்போகி ஆலயம் அப்படியே ரா்ஜகோபுரம் திருமதில்கள், விமானங்கள் தேரடி மண்டபம் முதலியன நல்ல நிலேயில் ஒரு மேட்டுப் பகுதியில் காட்சி அளிக்கிறது. திருவெண்பாக்கம் ஆலயம் பூராவும் அமிழ்ந்துவிட்டது. ஸ்வயம்பு மூர்த்தியாதலின் மூர்த்தியை எடுக்கமுடியாமல் அங்கேயே மூழ்கும்படி விட்டு விட்டார்கள். சத்தியமூர்த்தி என்னும் தேசபக்தரின் ஞாபக மாக சத்தியமூர்த்தி சாகரம் என அந்தநீர்த் தேக்கத்திற்குப் பெயர் வழங்குகிறது. சென்னே மக்கள் சுமார் 15 லக்ஷம் ஜனங்களுக்கு தண்ணீர் வழங்கும் பெரிய ஏரி. இது ஒரு நீர் நிலே. நல்ல சிவதலங்கள் இரண்டும் போய்விட்டது. அருள் சுரக்கும் திருமேனிகள் தண்ணீரிலே போய்விட்டன. ஆனல் எல்லாம் போனுலும் அங்கிருந்து உத்சவத் திருமேனிகள் யாவும் காக்கப்பட்டு நீர்த்தேக்கத்தின் அருகில் உள்ள பூண்டி என்னும் சிற்றூரில் சிறு ஒட்டுக் கொட்டகை ஒன்றில் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன. ஆலயத்தையும் அருட் திருமூலத் திருமேனிகளேயும் காணமுடியாவிட்டாலும் அதன் பிரதிபிம்பமாகிய உற்சவர்களாவது காணக்கிடைத் தனரே என்று மகிழ்ந்தோம். வழிபட்டுத் திரும்பி னேம். அதையும் பூட்டிவைத்திருக்கும் ஆள் முதலில் கிடைக்கவில்லே. பெரியவர்கள் வந்தால் அன்பர்கள் பலரும் பணி செய்ய முன்வருவதியற்கை. அவ்விதமாக கோவிலே

ஒருவர் திறந்துவிட்டார். பதிகம் பாடித் தரிசித்து வழிபட்டோம். பக்கத்திலுள்ள பூண்டிக் கோவிலிலும் வழிபட்டோம். அந்தக் கோவிலும் காலமாகி இன்றோ நாளைக்கோ என்று விழுவதற்கு நாள்பார்த்துக் கொண்டிருக்கிறது. கிழவர் ஒருவர் அங்கே திருவிளக்கு இட இருக்கிறார். வேறு யாரும் இல்லை. கோவிலுட் செல்லவே பயமாக இருக்கிறது. ஊரோ மிக எளிய ஏழைகள் வாழூர். கவனிப்பாரில்லையா என்று விசாரித்தோம் "திருவுரம்போகி, திருவெண்பாக்கம் ஆலயங்களுக்காக நில ஆர்ஜிதத் தொகை அரசாங்கத்தாரிடம் இருக்கிறது. அதை வாங்கி நிலம் வாங்கி ஆலயபரிபாலனம் செய்ய முன் வருவார் யாருமில்லை. இதற்கென ஏற்பட்ட இலாகாவினரும் கவனிப்பதாக இல்லை. பெரியோர்களாகிய மகாசந்நிதானம் போன்றவர்கள் அருளால் நடந்தால் நடந்தது, என்பதாக அவ்வூர் மக்கள் வந்து கூடி வேண்டினர்.

சுவாமி ஊனீஸ்வரர், வெண்பக்கநாதர். அம்மை கனிவாய்மொழி (மின்னலொளித்தாய்). ஒற்றியூர் நீங்கிக் கண் இழந்த சுந்தரர் திருவுளம்போகி வந்து இறைவனை வழிபட எண்ணி இறைவன் இருக்கிறானா என "உளோம் போகீர்" என்றனராம். தரிசிக்க அனுமதி கிடைக்கவில்லை. அங்கிருந்து திருவெண்பாக்கம் சென்று திருவெண்பாக்கநாதரை வணங்கி பதிகம் அருளிச்செய்தனர். திருவுளம் இரங்கி ஊன்றுகோல் ஒன்று கொடுத்தனுப்பினார் இறைவனும். அந்தவிதமாக ஊன்றுகோலுடன் சுந்தரர் அங்குக் காட்சி அளிப்பதாகக் கூறுகின்றனர். "பதிகத்திலே தனக்கிருந்த சலுகைகளைத் தெரிவித்து இறைவன் இவ்விதமாகத் திருவுளம்பற்றியதை நினைந்து வருந்தி அருள்பாலிக்க வேண்டினர்." இறைவனும் ஊன்றுகோல் ஒன்றை கொடுத்துப் போகவிட்டார்.

## திருவேற்காடு :

பூண்டியைவிட்டு சென்றவழியே பூந்தமல்லி வந்தடைந்து அதிலிருந்து ஆவடிப் பெருவழியில் திருவேற்காட்டுக்கு

7 மணிக்கு வந்துசேர்ந்தோம். கோவில் பூட்டப்பட்டிருந்த தாகத் தெரியவந்தது. மனம் வருந்தினோம். இருட்டும் கப்பி யிருந்தது. எப்படியேனும் கோவிலையாவது சென்று தரிசித்து வரும் நோக்கத்தோடு புறப்பட்டோம். வழிபுரியாது திகைத் தோம். ஹரிஜனச் சிறுவர் இருவர் வந்தனர் வழிகாட்ட. குறுக்கேயுள்ள நதியைக்கடந்து செல்லும் வழியிலே கோவில் மெய்காவல்காரர் ஒரு வயோதிகர் வந்தார். குருக்கள் பூட்டிக் கொண்டு சென்றுவிட்டார். "இருந்தாலும் சமீபத்தில் குப்பத் தில்தான் இருப்பார். அழைத்து வருகிறேன், வாருங்கள்" என்று அழைத்துச்சென்றார். கோவிலைத் திறந்துவிட்டார் உள்ளே நுழைந்ததும் நாகமொன்று எங்களை வரவேற்றது. "இறைவனின் அருள் விளக்கம் இது. நமக்கு அருள்பா லித்துவிட்டார். பதிகத்தை ஓதுவீராக" என்று ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் பணித்தார்கள். ஓதுவார் பதிக மோதினார். வழிபட்டோம். இவ்விதமே நமக்கு அருள் வழங்குகிறாரே கோவில் திறந்திருக்கவில்லையே என்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவுளம் கனிந்ததோ என்னவோ அவ்வூர்த் தலப்பதிகம் முடிந்ததும் மறைக்கதவம் திறக்கும் பதிகம் ஓதினார் ஓதுவாரும்.

## குன்றத்தூர் :

திருவேற்காடு வழிபாட்டை முடித்துக்கொண்டு திருநா கேஸ்வரம் (குன்றத்தூர்) அடைந்தார்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள். சுவாமி திருநாகேசுவரமுடையார். தெய்வமணக்கும் செந்தமிழ் பாடிய சேக்கிழார் பெருமானின் அவதாரஸ்தலம் இது. நல்ல பெரிய ஊர். நத்தம் என்ற குன்றத்தூர் இதன் அண்மையில் இருக்கிறது. சிறுகுன்றின் மேல் கோயில் அமைந்திருக்கிறது. ஊர் வடமேற்குமூலையில் சேக்கிழார் திருக்கோயில் இருக்கிறது. சேக்கிழார், அநபாயன், உமாபதிசிவம் ஆகியோரின் திருவுருவங்கள் இருக்கின்றன. வழிபாடு முடிந்தபின் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் இவ்வூரில் தலயாத்திரையைப் பூர்த்திசெய்துகொண்டு இரவு 10 மணிக்கு சென்னை எழுந்தருளினார்கள்.

குன்றத்தூர்



அநபாயன் சேக்கிழார் உமாபதிசிவம்

ௐ

## முடிவுரை :

நமக்கு உலகியலில் எவ்வளவு பெருஞ் செல்வமிருந்தாலும் அருட்செல்வமில்லையேல் எதுவுமில்லாதது போலத்தான். உயிர் இல்லாத உடல்போல. உலகியலில் பொருள்தேட எப்படி மக்கள் ஓடி ஓடித் தேடுகிறார்களோ அவ்விதமே நாமும் உயிர் இருக்கும்பொழுதே சமயம் வாய்க்கும்பொழுதெல்லாம் ஓடி ஓடி இறைவன் அருள்தேட வேண்டும். மூர்த்திதலம் தீர்த்தங்களை முறையே தரிசிக்கவும் வேண்டும். வாருங்கள் நீங்களும். அதுதான் சேமிப்பு. திருவடிதான் நமக்கு சேமிப்பு நிலையம். அதில்தான் நாம் நம்முடைய சேமிப்புக்களைப்போட்டுவைக்கவேண்டும். நம்மால் இயன்றளவு பெருமானுக்கு அபிஷேகஆராதனைகள் செய்யவேண்டும். பெருமான் புகழ்பாடவேண்டும். தலதரிசனம் செய்யவேண்டும். இவ்விதம் செய்ய நமக்கு இறைவன் நல்லதேகத்தையும் வாய்ப்பையும் கொடுத்திருக்கிறான். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வாருங்கள் நீங்களும் உடனிருந்து உய்தி பெறுங்கள் என்று திருவுளம்பாலித்து திருவாய் மலர்ந்தருளுவார்கள். அவ்விதமான பலவாய்ப்புக்களில் இதுவுமொன்று. உலகியல் பயனாக ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சென்ற சென்ற இடமெல்லாம் நல்ல மழையும் பெய்கிறது. சொக்கலிங்கத்தின் திருவருள்தான் அது என்றும் திருவுளம் பற்றுகிறார்கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் சென்னை நகரிலே பல பெரியோர்களும் இவ்விதமான வாய்ப்பை எதிர்நோக்கியிருக்கின்றனர் ஆனால் கூட்டம் கூடி தனித்து வழிபடும் இயல்பைக்கெடுத்து விடுவார்கள். ஒன்றியிருந்து நினைத்து வழிபட முடியாது ஆகவே யாருக்கும் வந்திருப்பது தெரியக்கூடாதென்று உத்தரவிட்டிருந்தார்கள். இருந்தாலும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வந்திருப்பது நகரில் பலருக்கும் தெரிந்து வந்து தரிசித்துச் சென்றார்கள்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் யாத்திரைக்கு எழுந்தருளுவதில் மற்றொரு பலனும் இருக்கிறது. தொண்டைநாட்டில் பெரிய ஊர்களில் உள்ள பெருந்தலங்களைத்தவிர மற்ற ஆலயங்களுக்கு மக்கள் செல்வது மிகக்குறைவு என்பது

நன்ருகத் தெரிகிறது. கோவில்கள் பெரும்பாலும் நல்ல பராமரிப்பில் இல்லை. அர்ச்சகர்கள், பணியாளர் தவிர மற்றவர்கள் வருவதில்லை. ஆகவே அப்பணியாளர்களும் குறிப்பிட்ட நேரங்களில் வந்துவிட்டுச் சென்று விடுகிருர்கள். பல கோயில்களைத் தரிசிப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. மெய்காவல்காரர்கள்கூட இருப்பதில்லை. இவ்விதமாகவுள்ள தலங்களுக்கும் நல்ல பாடல்கள் இருக்கின்றன. அதனருமை அங்குள்ளவர்களுக்குத் தெரியவுமில்லை. இந்நிலையிலும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தரிசனத்துக்குச்சென்று வழிபட்டபொழுதெல்லாம் மக்கள் பெருங்கூட்டமாக வந்து வழிபட்டனர். சில ஊர் மக்கள் அதிலிருந்து தொடர்ந்து வழிபாட்டுக்கு வருவதாகவும் சொல்லிக்கொண்டார்கள். ஆங்காங்கும் சொற்பொழிவுகள் தலத் தேவாரப் பதிகங்களை நல்லமுறையில் ஓதி விதிப்படி வழிபாடுசெய்ததைப் பார்த்த மக்கள் பலரும் தாங்கள் இவ்விதமாக அந்தந்த ஊரிலுமுள்ள தலப்பெருமை உணராதிருந்ததை நினைத்து வருந்தி இதிலிருந்து இனித் தாங்களும் ஆலயத்திற்குத் தவருது வந்து வழிபடுவதாகவும் ஒத்துக்கொண்டார்கள். இவ்விதமாக நாடு திருந்தி நன்னெறியில் செல்லவும் இத்தலயாத்திரை பயன் பெற்றது.

## கூட்டுப்பிரார்த்தனை :

பலரும் நம் நாட்டில் கூட்டுப்பிரார்த்தனை முறை இல்லை என்று அபிப்பிராயப் படுகின்றனர். அதோடு நம்முடைய பெரியவர்கள் சித்திபெற்ற மகான்கள் எல்லாரும் பொதுவாக அவரவரும் சொந்த ஆன்மலாபம் கருதியே செய்திருக்கிருர்கள்; அவர்களுக்கு மற்றவர்களைப் பற்றிக் கவலை இல்லை என்றும் கூறுகின்றனர். ஆனல் இவைகளை, நடந்திருக்கும் நடைமுறை தெரிந்து சிந்தித்துப்பார்க்காதநிலையில், அவ்விதம் நினைக்க நேர்ந்திருக்குமெனக் கருத இடமுண்டு.

பொதுவாக நம் அடியார்கள்—மகான்கள் எல்லோரும் தனித்திருந்து மோனத்தவத்தின்மூலம் ஆன்ம வளர்ச்சியைப் பெற்று அனுபூதியாகி பேரின்ப அனுபவம் சித்திக்கப்பெற்று

அந்த அனுபவங்களைப் பல நூல்களின் வழியாகவும் உபதேச வாயிலாகவும் மற்றவர்களுக்குச் சொல்லிப் போயிருக்கிறார்கள். அதனால் அவர்கள் ஜீவிய வந்தர்களாக இருந்த காலத்திலேயே அவர்களை நாடிப் பலரும்சென்று கூட இருந்து அவர்கள் செய்வகைதெரிந்து அவ்வழியில் நின்று உபதேசம் பெற்று அப்பெரியார்கள் அனுபவித்த பேரின்ப நிலையைப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே நம் ஆசாரிய மூர்த்திகளாக விளங்கிய பல பெரியோர்களும் தாங்கள் பயனடையும் பொழுதே மற்றவர்களையும் பயன்பெறச்செய்தும் வழிவகுத்துக்கொடுக்கும் இயல்பினர்களாய் இருந்தமையை அறியலாம்.

கூட்டுப் பிரார்த்தனை என்பது பலதரப்பட்ட மக்கள் ஒன்றுகூடி இறைவழிபாட்டில் ஈடுபடுவது. அது எவ்வளவோ பழமையான காலந்தொட்டு நடைபெற்று வருவது. அதற்காகவே ஆலயங்களில் நித்தியப்படியில் பலகால பூஜைகள், வார, பக்ஷ, மாத, பருவ, வருஷ உத்சவங்கள் என்று பலபடியாகத் திட்டம்செய்து வைத்திருக்கிறார்கள் நம்பெரியோர்கள். ஆலய வழிபாட்டு முறையே நமக்குக் கூட்டுப் பிரார்த்தனைக்காக ஏற்படுத்தப்பட்டதுதான். அத்தோடு ஆலயங்களுக்குச் செல்லமுடியாதவர்களின் சிந்தனையை எழுப்ப மணியோசையும் உயரமான கோபுரங்களையும் அமைத்து ஊரில் எங்கு, எந்தநிலையில் நின்றாலும் கேட்கக்கூடியதாகவும் பார்க்கக்கூடியதாகவும் அமைத்திருக்கின்றனர். அதோடு தீர்த்த ஸ்நானம் என்று திட்டம் செய்து பலபல முக்கிய விசேஷ தினங்களையும் குறிப்பிட்டு அந்த நாளில் அந்தத்தீர்த்தத்தில் மூழ்கினால் இன்னின்ன நன்மை கிடைக்குமென்பதாகப் பலனும் குறிப்பிட்டு வைத்திருக்கின்றனர். இந்தக் காலத்திலுங்கூடக் கோவில்களில் மற்றகாலங்களில் குறைவான கூட்டம் இருந்தாலும் விசேஷ ஏறுபடி நாட்களில் கூட்டம் கூட்டமாக மக்கள் சென்று வழிபடுவதை நாம் காண்கிறோம். திருவண்ணாமலை தீப தரிசனம், சிதம்பரம் தரிசனம், ஸ்ரீரங்கம் வைகுண்ட ஏகாதசி, புள்ளிருக்குவேளூர் கார்த்திகைத் திருநாள், சீகாழி திருமுலைப்பால் உத்சவம், கடலூர் எமசம்ஹாரம், திருவையாறு சப்தஸ்தானம், அர்த்தோதயம்,

மகோதயம், மகாமகம், கடைமுழுக்கு முதலிய பெருநாட்களில் இறைவழிபாட்டோடு தீர்த்தாடனமும் திட்டம் செய்திருக் கின்றனர். இதற்கெல்லாம் ஆயிரக்கணக்கிலும், லக்ஷக் கணக்கிலும் மக்கள் கூடவில்லையா? தீர்த்தமாடி இறை வழிபாடுகள் செய்யவில்லையா? இதெல்லாம் கூட்டுப்பிரார்த் தனைகள் அல்லவா? நம்முடைய ஆசாரியப் பெருமக்களாகிய நால்வரும், மற்ற அடியார்கள்பலரும் தலங்கள்பலவற்றிற்கும் கூட்டம் கூட்டமாக ஆயிரமாயிரம் அடியார்கள் உடன்வரச் சென்று வழிபட்டு பதிகங்கள் இயற்றிச் செல்லவில்லையா? அதோடு தங்களுக்குப் பேரின்ப அனுபவம் கிடைத்ததும், தாய்ப்பறவை நல்ல இறைகிடைத்ததும் குஞ்சுகளை நினைத்து வருந்தி அழைத்து அருத்தி இன்புறுத்துவதுபோல, அன்பர் களே வாருங்கள், இப்பொழுதே வாருங்கள், காலம் தாழ்த் தாதீர்கள். நல்ல ருசியான பழம் இருக்கிறது. கனி உண்பது கஷ்டமா? சாறு இருக்கிறது அதுவும் கஷ்டமா? அதிலிருக்கும் பேரின்ப ருசியாகவேனும் ஊட்டுகிறோம் 'சேரவாரும் ஜகத்தீரே' என்று அன்பானமொழியாலும், ஐயோ! காலந் தாழ்த்தாது இத்தருணத்திலேயே வரட்டுமே என்று ஆதங் கத்தினல் (இரக்கத்தினல்) கடிந்தும் அழைக்க வில்லையா?

மூலபண்டாரம் வழங்குகிறுன் செலவாகிவிடப்போகிறது வந்து முந்துமினே என்னவில்லையா? திருஞானசம்பந்தர் திருமணக்கோலத்தோடு திருவடி சேரும்போது அங்கு திரு மணத்திற்கு வந்திருந்த அத்தனைபேரையும் அந்த பேரின்ப நலமடையச் செய்யவில்லையா? உடனழைத்துச்சென்றதோடு அமையாமல் இன்ப அனுபவம் கிடைத்த உடனே அதனை மற்றவர்களும் அதே நிலையில் அனுபவிக்க வேண்டுமென்று விருப்பி அவர்களுக்கும் அளிக்கவில்லையா? இவ்விதமாக நிகழ்ந்த பெரியோர்களின் செய்கை, கூட்டு வழிபாட்டை நடைமுறையில் நடத்தியதாக அமையவில்லையா?

அதேபோல ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் யாத் திரை முழுவதிலும் ஒரு கூட்டு வழிபாட்டு முறையைக்கற்பி பதுதான். பலரையும் உடன் அழைத்துச்சென்று தரிசனம்ப் செய்துவைப்பதோடு ஆங்காங்கு உள்ளவர்களை அழைத்துச்

சென்றும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளியதும் அந்தந்த ஊர்களிலும் கூடும் மக்களையும் உடன் அழைத்துச்சென்று ஆலயதரிசனம் செய்யுங்காலத்தில் அந்தந்தத் தலபதிகங்களை உடன்வரும் ஓதுவார்களை ஓதச்செய்தும் மற்றவர்களும் கேட்கும்படி செய்தும் தரிசிக்கச்செய்தும் வருகிறார்கள்.

சிறப்பாக ஒரு சிறு நிகழ்ச்சி நினைவுக்குவருகிறது. இத்தடவையில் நடந்தது. ஒருநாள் மாலையில் இருள்மயங்கும் நேரம். திருவள்ளூரிலிருந்து பூந்தமல்லிவரும் சாலையில் வந்துகொண்டிருக்கிறோம். அச்சாலையின் வடபுறம் வரும் ஆற்றின் அக்கரையில் ஒரு பெரிய உயரமான பாழடைந்த ஆலயம் காணப்படுகிறது. அங்கே சென்று தரிசித்துச் செல்லலாம் என்று திருவுளக்குறிப்பு. நாங்கள் சொன்னோம். "நேரமோ அந்திமயங்கி இருட்டு வந்துகொண்டிருக்கும் காலம். பார்த்தால் அது மிகவும் பாழடைந்து இருக்கிறது. அங்கே சென்று திரும்பிவருவதற்குள் நன்றாக இருட்டிவிடுமே. அப்படி விசேஷமான தலமாகவும் தோன்றவில்லையே. திட்டமிட்டமிட்டபடி நாம் போகவேண்டிய ஊருக்குச் செல்லலாமே" என்று. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் "நீங்கள் நினைப்பது சரியல்ல, என்னவோ பாழடைந்ததாக இருந்தாலும், அங்கிருந்து ஏதோ ஒன்று என்னை அழைக்கிறது. அவசியம் அங்குசென்று தரிசித்துத்தான் திரும்பவேண்டும் கார் அங்கு செல்லட்டும்" என்று கட்டளையிட்டார்கள். அவ்விதமே அங்கு சென்றோம். பார்த்தால் கோவில் மிகவும் பாழடைந்து, மண்டபங்கள் இடிந்து, மதில்கள் சிதைந்து, இராஜகோபுரத்தில் ஒருபெரிய வனமே உண்டானதுபோன்ற தோற்றத்துடன் என்றைக்குக் கீழே விழலாம் என்று நாளை எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. அது நல்ல பெரிய சிவாலயமாக இருந்த அறிகுறிகள் இருக்கின்றன. கற்சிலைகள் நல்ல வேலைப்பாடுள்ளவை பல அங்கு கிடைக்கின்றன. மூலஸ்தான லிங்கத்தின்மேல் விமான உட்கூடு உடைந்து விழுந்திருக்கிறது. இந்த நிலையிலும் யாரோ ஒரு புண்ணிய சீலர் பல மூர்த்தங்களைமாத்திரம் எடுத்து ஒரு

சிறிய மண்டபப்பகுதியில் வைத்து அகல் விளக்கு ஒன்றும் வைத்திருக்கிறார். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் இதனைக்கண்டு வருந்தினார்கள். ஆனாலும் சில மூர்த்தங்களாவது அங்கே பூஜையில் இருப்பது ஓரளவு மன நிம்மதியை அளித்தது. வழிபாடு செய்தார்கள். எடுத்துக்கொண்ட விஷயம் இதுவல்ல. அவ்வூரில் இரண்டு கட்சிகள். ஒன்று வலுவுள்ள பள்ளர்கள் கட்சி. மற்றது வலுவில்லாத மற்ற ஜாதியினரின் கட்சி. மற்றவர்கள் கோயிலுக்குப் போவதைக் கண்டால் பள்ளர்கள் அடித்துத் துன்புறுத்தவும் செய்வார்களாம். அதற்குப்பயந்து பெரும்பாலோர் அங்கு செல்வதில்லை, ஓரிருவர் செல்வோரும் பயந்துகொண்டு பகலில் செல்லுவதாகவும் தெரியவந்தது. அங்குசென்றதும் பலரும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைத் தரிசிக்க வந்தார்கள். அவர்களுடன் கோயிலுக்குள்ளும் வந்தார்கள். தரிசித்தார்கள். ஓதுவாரைப் பாடச்சொல்லக் கேட்டு இன்புற்றார்கள். தங்கள் நிலையைக்கண்டு அவர்களே வருத்தம் தெரிவித்தார்கள். கோவிலுக்கு வந்து அன்று தரிசனம் கிடைத்தது. தங்கள் வருகையாலேதான் என்றும், இனியும் வருவதாகவும், இப்பொழுது பூசையில் உள்ளவைகளுக்கு வழிபாடுகள் நடத்தத் தாங்களும் உதவவேண்டுவதாகவும் தெரிவித்துக்கொண்டார்கள். உடன் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் இத்தனைத்தலங்கள் வழிபட்டதிலும் இங்குதான் நமக்கு நல்லதரிசனம். பார்த்தீர்களா! இம்மக்கள் நாம் வந்ததும் உடன்வந்து வழிபட்டார்கள். இனி இவ்வாலயம் சிறிதாவது விளக்கம் காணும்" என்று திருவுளம்பற்றினார்கள். இவ்விதமாகப் பல சிறு ஊர்களிலும் நிகழ்ந்தன. இவை கூட்டுப் பிரார்த்தனைகளல்லவா? ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் யாத்திரை செல்வதால் பயனை அவர்கள் அடைவதோடுமட்டுமல்லாமல் பலரையும் ஆலயவழிபாட்டில் ஈடுபடச்செய்வதாகவும் அது அமைந்துவருகிறது. இது ஒரு மௌனப் பிரசாரம்.

---

எழுதியவர்: திரு. A. கல்யாணசுந்தர தேசிகர் அவர்கள், சூப்பரின்டெண்டெண்ட், தருமபுர ஆதீனம், தேவஸ்தானம் கச்சேரி, நிழற்படம் திரு. மீனா.

## வைத்தீஸ்வரன்கோயிலில்:

28-7-54 அன்று முத்தமிழ் வள்ளல், புரிசை, திரு. சு. முருகேச முதலியார் அவர்களும், 29-7-54 'தொண்டன்' ஆசிரியர், திரு. K. ஆறுமுகநாவலர் அவர்களும் முறையே "மீனாட்சியம்மை திருமணம்" "சிவசக்தி ப்ரபாவம்" என்பவபற்றிப் பேசினர்கள்.

## திருக்கடவூரில்:

25—7—54ல் தருமபுர ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர்கள் வித்துவான், திரு. வி. சா. குருசாமி அவர்களும், 26—7—54ல் வித்துவான், திரு. C. சிங்காரவேலன் அவர்களும், கல்லூரி மாணவர், ம. சிவசம்பு அவர்களும், 30—7—54 அன்று ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர் புலவர் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்களும், கல்லூரி மாணவர் ம. சிவசம்பு அவர்களும், 31-7-54 அன்று ஆதீனத்தொண்டர், தி[illegible]. க. மருள்நீக்கியார் அவர்களும் முறையே 'தேவியுவந்ததமிழ்'; 'விழுத்துணை'; 'கண்கண்டதெய்வம்'; 'தளர் வறியா மனம்'; 'நாள் என்செய்யும்?'; 'தேவிமகிமை' என்பன பற்றிச் சொற்பொழிவு ஆற்றினர்கள். ஒவ்வொருநாளும் வீதி உலாவும் சொற்பொழிவும் சிறப்பாக நடந்தது. மக்கள் கூட்டமாக வந்து விழாவைச் சிறப்[illegible]த்தார்கள்.

## [illegible] விளக்கு உபயம்:

30—7—54 அ[illegible] தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக [illegible]மாசாரிய சுவாமிகளவர்களால் நன்கொடையாக வழங்கப்பெற்ற நீலநிற மின்விளக்கு ஒளிரச்செய்யும் விழா திருவாளர், மு. கண்ண[illegible]ப முதலியார் அவர்கள் தலைமையில் நடந்தது. டாக்டர், பி. எஸ். ஸ்ரீனிவாசன் அவர்கள் மின்விளக்கை ஒளிரச்செய்தார்கள். கூட்டத்திற்கு திரளான மக்கள் வந்திருந்தனர்.

# திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் அறங்கள்

## சீகாழிக் கோயிலில் தேவாரப்பதிகக் கல்வெட்டுத் திறப்பு:

திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான சிகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்திற்கு 1—8—54ல் திருப்பனந்தாள் காசிமடம் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள், இளவரசு வித்துவான், ஸ்ரீலஸ்ரீ மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகளுடன் எழுந்தருளி எல்லாச் சந்நிதிகளிலும் சுவாமி தரிசனம் செய்தார்கள்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஸ்ரீகாசி மடம் தருமமாக, ஆணையின்வண்ணம் "தோடுடைய செவியன்" பதிகம் சலவைக்கற்களில் வெட்டப்பெற்றவைகளைத் திறந்துவைத்து, குருபீடமாகிய தருமை மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் திருவருள் திறத்தையும் தமிழுக்கும் சைவ சமய வளர்ச்சிக்கும் அவர்கள் செய்துவரும் அரிய செயல்களையும் பாராட்டினார்கள்.

சீகாழி கட்டளைவிசாரணை வித்துவான், ஸ்ரீமத். மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் நன்றி கூறுகையில் என்றும் நிலை பெற்ற அறவுரைகளுக்காக சுமார் 30 லட்சம் வரை செலவிட்டு, காசிமுதல் கன்னியாகுமரிவரை அறச்செயல்கள் அமைத்து வருவதைப் பாராட்டினார்கள்.

## 'சிவ சிவ' விளக்கு:

தருமபுர ஆதீன மடாலய முகப்பிலும், ஆதீனத்திற்குச் சொந்தமான, வைத்தீஸ்வரன்கோயில், சீகாழி, திருக்கடவூர், திருவையாறு முதலிய தேவஸ்தானங்களிலும், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 'சிவ சிவ' மின்விளக்குகள் பொறித்த பெட்டிகளை அமைத்திருக்கின்றார்கள். சிவஸ்தலங்களில் பலவற்றிலும் இம்மாதிரியான விளக்குகள் அமைத்து திரு அருள் விளக்கம் காணும் காசிமடத்தின் அருட்பணியை அறியாதவர் இல்லை.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram (Mayuram). 10—8—1954.